உ

கடவுள் துணை.

குணவீரபண்டிதர்

இயற்றிய

நேமிநாதம்

மூலமும் உரையும்.

இவை:
ஸேதுஸம்ஸ்தான வித்வானும்
"செந்தமிழ்"ப் பத்திராசிரியருமான

ரா. இராகவையங்காரால்

பரிசோதிக்கப்பட்டன.

செந்தமிழ்ப் பிரசுரம்—௯.

இரண்டாம் பதிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்க முத்திராசாலை.

1923

இதன் விலை அணா 12.

ஸ்ரீ

கடவுள்துணை.

குணவீரபண்டிதர்

இயற்றிய

நேமிநாதமூலமும்

உரையும்.

இவை

சேதுஸம்ஸ்தான வித்வானும்

"செந்தமிழ்"ப் பத்திராசிரியருமான

ரா. இராகவையங்காரால்

பரிசோதிக்கப்பட்டன.

ஸ்ரீ ஆழ்வாரையங்கார், தலைமை யாசிரியர், ...சாலை, கோ...

ACL-FTS
00A111

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

செந்தமிழ்ப் பிரசுரம்—கூ.

இரண்டாம்பதிப்பு.

மதுரை:
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

1923

இதன் விலை அணா 12.

MADURAI TAMIL SANGAM

சிறப்புப் பாயிரம்.

எண்ணும் பெயரு முறையு மியன்றதற்பி
னண்ணிவரு மாத்திரையு நற்பிறப்புங்—கண்ணு
வடிவும் புணர்ச்சியு மாயவோ ரேழுங்
கடியமருங் கூந்தலாய் காண்.

தொல்காப் பியக்கடலிற் சொற்றீபச் சுற்றளக்கப்
பல்காற்கொண் டோடும் படகென்ப—பல்கோட்டுக்
கோமிகா மற்புலனை வெல்லுங் குணவீர
நேமிநா தத்தி னெறி.

கடவுள் துணை.

நேமிநாதம்

மூலமும் உரையும்.

முகவுரை.

நேமிநாதமென்பது அமிழ்தினுமினிய தமிழினுக்கோதிய எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியெனப்பட்ட ஐவகையிலக்கணங்களுள் முதல் இரண்டனையும் வெண்பாயாப்பாற் சுருங்கவுரைக்கும் ஓர் நூல், இது தென்மயிலாபுரி நீணிறக்கடவுள் நேமிநாதர் தந்திருப்பெயராற் செய்தமைத்தமையானே நேமிநாதம் என்னும் பெயர்த்து' என்பர். இந்நூல் தொல்காப்பியமாகிய பேரிலக்கணத்துள் எழுத்துஞ் சொல்லும்பற்றிப் பரந்துகிடக்கும் விதிகளையெல்லாம் ஒருவாறு தொகுத்துரைப்பதாகும். இஃது தொல்காப்பியத்தையே முதனூலாகக்கொண்டு அதனன்னெறியே போற்றியுரைப்பதென்பதனைக், தொல்காப்பியச்சொல்லதிகாரவியன் முறையே இதன் சொல்லதிகாரமும் ஒன்பதியலான் முடிந்தவாற்றான் அறியத்தக்கது.

தொல்... சொல்	...	நேமி ...சொல்...
கிளவியாக்கம்	...	மொழியாக்கமரபு
வேற்றுமையியல்	...	வேற்றுமைமரபு
வேற்றுமைமயங்கியல்	...	உருபுமயங்கியல்
விளிமரபு	...	விளிமரபு
பெயரியல்	...	பெயர்மரபு
வினையியல்	...	வினைமரபு
இடைச்சொல்லியல்	...	இடைச்சொன்மரபு
உரிச்சொல்லியல்	...	உரிச்சொன்மரபு
எச்சவியல்	...	எச்சமரபு

எனவருதல்காண்க.

இதன் சிறப்புப்பாயிரத்துள் 'தொல்காப்பியக்கடலுட் சொற்றீவச் சுற்றளக்கப்-பல்காற்கொண் டேகும் படகென்ப' என இதனைச் சிறப்பித்தோதியவாற்றானும் இதனுண்மை அறியப்படும். தொல்காப்

பியமாகிய பெருநூல்கற்றற்குமுன்னே அதன் வழித்தாயுள்ள இச்சிறு நூலைப்பயில்வது பண்டைவழக்கமென்பது இதற்கு வழங்கும் சின்னூல் என்னும் பெயரானே உய்த்துணரத்தக்கது. இந்நூல் மாறனலங்காரவுரைகாரர், பிரயோகவிவேகவுரைகாரர் முதலாய செந்தமிழறிஞர்களால் எடுத்தாளப்பட்டுள்ளது.

இந்நூலாசிரியர் குணவீரபண்டிதரென்பர். இவர் ஊர் களந்தையென்பது. இவருடைய ஆசிரியர் களந்தைப்பதிக்கண்ணிருந்த வச்சணந்தி முனிவரெனப்படுவார். இவருடைய காலம் இற்றைக்கு 800-வருடங்கட்குமுன் இருந்த திரிபுவன தேவன் எனப்பெயரிய குலோத்துங்க சோழன் காலமாகும். இலக்கணங்களை வெண்பாவிலமைத்துப்பாடுதலில் இவர் மிகவல்லவரென்பது இந்நூலானும் இவரானே இயற்றப்பட்ட வெண்பாப்பாட்டியலானும் அறியலாகும். இவர் ஜைனசமயத்தினர் என்பது இந்நூலினும் வெண்பாப்பாட்டியலினும் கூறிய கடவுள் வாழ்த்துக்களான் நன்குணரப்படும். இந்நூலை நேமிநாதர்பெயரானும், வெண்பாப்பாட்டியலை வச்சணந்தி முனிவர் பெயரானும் முறையே நேமிநாதம் எனவும், வச்சணந்திமாலை எனவும் இவர் வழங்கியவாற்றானே இவரது தீர்த்தங்கரபத்தியும் ஆசாரியபத்தியும் நன்கறியத்தக்கன. இவற்றையெல்லாம்,

'இந்நூல், எய்திய சிறப்பி னெழுத்தையுஞ் சொல்லையு
மெய்தெரி வகையின் விளங்க நாடித்
தேனிமிர் பைம்பொழிற் றென்மயி லாபுரி
நீனிறக் கடவு ணேமிநாதர் தந்திருப்பெயராற் செய்

தமையான் நேமிநாதம் என்னும் பெயர்த்து எனவும்,

'இந்நூல் செய்தார் யாரோவெனின்:—
உளமலி பேரரு ளுயிர்மிசை வைத்த
வளமலி களந்தை வச்சணந்தி முனிவரன்
கொள்கையின் வழாஅக் குணவீர பண்டிதன்

செய்தமைத்தானென்பது' எனவும் வரும் இந்நூற்பாயிரவுரையானும்,

'கற்றவர் புகழுங் களந்தையென் பெரும்பதிக்
குற்றமில் வாய்மைக் குணவீர பண்டிதனாற் செய்யப்

பட்டதும் எனவும்,

எய்திய மணிப்பூ ணிலங்குமணி நெடுந்தேர்
வேந்தர் சூடும் விரைகெழு மலர்த்தாள்
விளங்கெழின் மாடத்துக் களந்தையெம் பெருமான்
வளர்ந்த கீர்த்தி வச்சணந்தி தேவன்

என்னு மாமுனி செய்வித்ததனால் வச்சணந்திமாலை யென்னும் பெயர்த்து' எனவும், 'இந்நூல் யார்காலத்துச்செய்ததோவெனின்;—

குருத்தவா மணிமுடிக் கொற்றவர் கோமான்
திருத்தகு மணிமுடித் திரிபுவன தேவன் என்னும் அரசன் காலத்துச் செய்ததென்றுணர்க' எனவும் வரும் வச்சணந்திமாலைப் பாயிரவுரையானும் அறிந்துகொள்க.

தமிழ்நாவலர்சரிதை யென்னும் நூலுள் "ஒட்டக்கூத்தர், நேமிநாதர் பட்டோலைபிடிக்கப்பாடியது" என ஓர் செய்யுளின் தலைப்பில் எழுதப்பட்டுள்ளது. ஒட்டக்கூத்தரும் திரிபுவனதேவன் காலத்தவராதலான் ஈண்டுக்கூறப்பட்ட நேமிநாதரென்பார் இந்நேமிநாதஞ்செய்த குணவீரபண்டிதரோ என ஊகிக்கப்படுகிறார்.

இனி இதன்உரை சூத்திரம்நுதலியதும், அதன் பொழிப்பும், அதற்குதாரணமும், விசேடணமும், சூத்திரத்தினில்லாத ஆண்டைக்கு வேண்டுவனபலவும் கொண்டு நடைபெறுகின்றவாற்றான் விருத்தியுரை யென வழங்குவது. இவ்வுரையாசிரியர் பெயர் முதலியன ஒன்றும் இப்போது புலப்படவில்லை. இவர் தொல்காப்பியம் அவிநயம் முதலிய பேரிலக்கணங்களினும், பத்துப்பாட்டு எட்டுத்தொகைமுதலிய பேரிலக்கியங்களினும், அவற்றின் நல்லுரைகளினும் செவ்வனம் பயின்றவரென்பது அவருரையிற்கண்ட மேற்கோள்களான் நன்கறியலாம். இவர் இடைச்சொன்மரபுரையில் (பக்கம் அ௫) 'மூத்தனென்கோ' என்னும் திருநூற்றந்தாதிச் செய்யுளினை எடுத்தோதி "என்றார் அவிரோதியாழ்வார்" எனக்கூறலாள் இவர் அவிரோதியாழ்வார்க்குப் பிற்பட்டகாலத்தவரென்பது தெளியப்படுகின்றது.

யான் இத்தமிழ்ச்சங்கத்துக்கு ஏடுதேடிச் சென்றகாலத்து இவ்விருத்தியுரையோடுகூடிய நேமிநாத வட்டுப்பிரதிகள் சில கிடைத்தன. இப்பிரதிகளைவைத்து ஆராயுங்காலத்து அதனையுணர்ந்த தமிழ் நண்பர்கள் சிலர், இச்சங்கத்தின் நன்முயற்சிக்கிரங்கித் தம்மிடத்திலிருந்த இங்

நூலுரைப்பிரதிகளை உதவினார்கள். இப்பிரதிகளையுதவிய நண்பர் பெயரையெல்லாம் இதனடியிற் கண்டுகொள்க. இவர்கள் பால் என்று மறவா நன்றிபாராட்டுங் கடப்பாடுபெரிதுமுடையேன். இப்பிரதிகளுள் மிகப்பழையனவாய்க் காணப்பட்டன சில. இவற்றையெல்லாம்வைத்து என்னறிவுக்கியன்றவரை ஆராய்ந்து அப்பிரதிகளிலுள்ளவாறே இத் தமிழ்ச்சங்கத்தினின்று பிரசுரிக்கப்படும் செந்தமிழ்வாயிலாக இந்நூல் வெளியிடப்பட்டது. இஃதித் தமிழ்ச்சங்கத்துக்குரிய "செந்தமிழின்" ஆறும்பிரசுரமாவது. இந்நூலாராய்ச்சி முழுதுக்கும் எனக்கின்றி யமையாப் பெருந்துணையாகிய "செந்தமிழ்" உதவிப்பத்திராசிரியர், ஸ்ரீமத்-மு. இராகவையங்காரவர்கள் பெருநன்றி என்னால் எழுமையும் பாராட்டற்பாலது.

இச்சங்கத்திற்கு நேமிநாதவிருத்திப்பிரதி உதவிய உபகாரிகள் பெயர்.

திருமயிலை வித்துவான் ம-ா-ா-ஸ்ரீ சண்முகம்பிள்ளையவர்கள்	பிரதி	... க.
இராமநாதபுரம் வித்துவான் ,, மு. இராகவையங்காரவர்கள்	,,	... க.
ஆழ்வார் திருநகரி ஸ்ரீ உ. வே. ஆத்தான்ஸ்வாமிகள்	,,	... க.
திருநெல்வேலி மகா-ா-ா-ஸ்ரீ சோமசுந்தரம்பிள்ளையவர்கள்	,,	... க.
புதுக்கோட்டை பிரும்மஸ்ரீ எஸ். இராதாகிருஷ்ணஐயரவர்கள்	,,	... ரு.
சேற்றூர் மகா-ா-ா-ஸ்ரீ கந்தசாமிக்கவிராயரவர்கள்	,,	... க.
உடுப்பட்டி மகா-ா-ா-ஸ்ரீ சிவசம்புப்புலவரவர்கள்	,,	... க.
கவிஸ்தலம் மகா-ா-ா-ஸ்ரீ சிவலிங்கஉபாத்தியாயரவர்கள்	,,	... க.
	ஆகெ	... கம.

இங்ஙனம்,

சேதுசம்ஸ்தான வித்வான்,

ரா. இராகவையங்கார்,

"செந்தமிழ்" ப்பத்திராசிரியர்.

குணவீரபண்டிதர்

இயற்றிய

நேமிநாதம்

மூலமும் உரையும்.

பாயிரம்.

பூவின்மேல் வந்தருளும் புங்கவன்றன் பொற்பாத
நாவினு ளுளு நவின்றேத்தி—மேவுமுடி
பெல்லா முணர வெழுத்தி னிலக்கணத்தைச்
சொல்லா லுரைப்பன் றெருகுத்து.

உரை. எந்நூலுரைப்பினும் அந்நூற்குப் பாயிரமுரைத்தே நூலுரைக்கவென்பது மரபாகலின் பாயிரமுரைத்தே நூலுரைக்கப்படுமென்க. பாயிரமென்பது முகவுரை.

அப்பாயிரந்தான், பொதுவுஞ் சிறப்புமென இருவகைப்படும்.

அவற்றுட் பொதுப்பாயிரமென்பது எல்லா நூன்முகத்தும் இன்றியமையாதது. "ஈவோன்றன்மை யீதலியற்கை, கொள்வோன்றன்மை கோடன்மரபென, வீரிரண்டென்ப பொதுவின்றொகையே" என்பவாகலின்.

இனிச், சிறப்புப்பாயிரமாவது பலவற்றுட் சிலவருமாறு, "புண்ணிய நூற்பேர் பகர்ந்தோன்பேர் காரணமுந், துன்னு பயனளவுஞ் சொல்லினுன்—முன்னைச், சிறப்பா மவற்றுட் சிலவேறி னுலும், பெறப்படுமா முன்னைப் பெயர்." என்பவாகலின்.

இந்நூலென்ன பெயர்த்தோவெனின், இந்நூல் எய்திய சிறப்பினெழுத்தையுஞ் சொல்லையு, மெய்ந்தரிவகையின் விளங்காடித், தேனிமிர்பைம்பொழிற் றென்மயிலாபுரி, நீனிறக்கடவுணேமிநாதர் தந்திருப் பெயராற் செய்தமையான் நேமிநாதம் என்னும் பெயர்த்து. இந்நூல்

செய்தார் யாரோவெனின், உளமலிபேரரு ளுயிர்மிசை வைத்த வளமலி களந்தை வச்சணந்தி முனிவரன் கொள்கையின வழாஅக் குணவீர பண்டிதன் செய்தமைத்தானென்பது. இந்நூல் செய்தற்குக் காரணம் யாதோவெனின, விரிந்த நூலுணரா மேதினியோர்க்குச் சுருங்கச்செய்தான்; அந்நூல் தெரிவது காரணமாகவென்பது. இந்நூலாற் பயன் யாதோவெனின் எழுத்துஞ் சொல்லு மியல்புணராதோர் வழுத்தீர்விப்பது பயனெனக்கொள்க. இந்நூல் எவ்வளவினதாகச் செய்யப்பட்டதோ வெனிற் றொகுத்துச்செய்தலும், விரித்துச்செய்தலும், தொகைவிரிப் படுத்துச்செய்தலும், மொழிபெயர்த்துச்செய்தலு மென்பன. அவற் றுள், இந்நூல் தொகுத்துரைக்கப்பட்டது.

அற்றேல், இவ்வதிகாரம் என்னுதலியெடுத்துக் கொள்ளப்பட்டதோ வெனின், அதிகார நுதலியதூஉம் அதிகாரத்தின் பெயருரைப்பவே விளங் கும். இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோவெனின், எழுத்ததிகாரமென் னும் பெயர்த்து, எழுத்திலக்கணம் உணர்த்தினமையான். எழுத்து எனைத்து வகையான் உணர்த்தினானோவெனின், எழுவகையானுணர்த் தினான் என்பது. எழுவகையாவன:— எழுத்து இனைத்தென்றலும், இன்ன பெயரினவென்றலும், இன்ன முறையினவென்றலும், இன்ன பிறப்பினவென்றலும், இன்ன மாத்திரையினவென்றலும், இன்னவடிவின வென்றலும், இன்ன புணர்ச்சியினவென்றலுமாம். அவ்வேழும் இந் நூலுள்ளே கண்டுகொள்க.

எட்டுவகையும், எட்டிறந்த பல்வகையும் என்னவேண்டுவாருமுளராக, இந்நூலுடையார் எழுவகையவென்று சொல்லவேண்டிற் றென்னையோ வெனின், அவையெல்லாம் இவ்வேழினுள்ளே அடங்குமாகலான் என்பது. அன்றியும், “எண்பெயர் முறைபிறப் பளவியல் வடிவு, புணர்தலோ டேழும் பொருந்திய வழக்கே” என்றார் அவிநயனார்.

‘பூவின்....றொகுத்து’ என்பது சிறப்புப்பாயிரம் உணர்த்துதனுதலிற்று. “வணக்க மதிகார மென்றிரண்டுஞ் சொல்லச், சிறப்பென்னும் பாயிரமாஞ் சீர்” என்றாராகலின்.

இதன்பொருள். ஆயிரத்தெட்டு இதழுடைய அரவிந்த நாண்மலர் மேல் எழுந்தருளியிருக்கும் ஆதிநாதன் அடிதுதித்து, யாவருமுணர

எப்பெற்றிப்பட்ட எழுத்து முடிபுகளும் சுருங்கும் வகையாற் சொல்லு வன் என்றவாறு.

இது பொழிப்புரை யெனக்கொள்க. "பொழிப்பெனப் படுவது பொருந்திய பொருளைப், பிண்டமாகக் கொண்டுரைப்பதுவே." சொல்லாலுரைப்பன் என்றதென்னை? பிறவாற்றானும் உரைக்குமா றுண்டோ வெனின், உண்மை சொல்லுதல் குற்றமன்று; கண்ணாற் பார்த்தான் வாயாற் சொன்னான் என்றாற்போலவென்க. அன்றியும், எழுத்திலக்கணத்தைச் சொல்லால் உரைப்பதென்னாதபொழுது சொல் லிலக்கணத்தைச் சொல்லாலுணர்த்தி, எழுத்திலக்கணத்தை எழுத்தான் உணர்த்துபவோவென்று கருதுவார்க்குச் சொல்லிலக்கணஞ் சொல்லா லுணர்த்தி, எழுத்திலக்கணமுஞ் சொல்லால் உணர்த்துபவென்றற்கு, இங்ஙனம் சொல்லப்பட்டது. என்போலவெனின், இரும்பினான் மரத் தொடக்கத்தனவற்றையறுப்பார் அவ்விரும்புதன்னையும் இரும்பினால் அறுப்பார்! அதுபோல எனக்கொள்க.*

அவையடக்கம்.

உண்ண முடியாத வோதநீர் வான்வாய்ப்பட்
டெண்ண வமுதான தில்லையோ—மண்ணின்மே
னல்லாரைச் சேர்தலா னன்சொன்ன புன்சொல்லு
மெல்லாருங் கைக்கொள்வ ரீங்கு.

என்பது அவையடக்க முணர்த்துத னுதலிற்று.

இ-ள். உலகத்து யாவர்க்கும் உண்ண முடியாத ஓதநீர், மேகத் தின் வாய்ப்படுதலான் அமுதமானாற்போல, என்னானுரைக்கப்பட்ட புன்சொல்லும் நல்லோர் செவிப்படுதலால் யாவருங் கைக்கொள்வர் எ-று.

பாயிரமுற்றிற்று.

---

* "வயிர வூசியு மயன்வினை யிரும்புஞ், செயிரறு பொன்னைச் செம்மை செய்யாணியுந், தமக்கமை கருவியுந் தாமா மவைபோ, லுரைத்திற முணர்த்தலு முரையது தொழிலே" என்றார் ஆசிரியர் அகத்தியனாரும். (நன்னூல், பெய ரியல், அ. சங்கரநமச்சிவாயப்புலவருரை மேற்கோள்.) "அயிலானே போழ்வ ரயில்" என்பது பழமொழி ௩௯௩.

எழுத்ததிகாரம்.

க ஆவி யகரமுத லாறிரண்டா மாய்தமிடை
மேவுங் ககரமுதன் மெய்களா—மூவாறுங்
கண்ணு முறைமையாற் காட்டியமுப் பத்தொ று
நண்ணுமுதல் வைப்பாகு நன்கு.

என்பது * சூத்திரம். என்னுதலிற்றோவெனின், முதல் வைப்பாகிய முப்பத்தோரெழுத்துமாமாறு உணர்த்துதனுதலிற்று.

இ-ள். அகரமுதல் ஔகாரமீறாய்க் கிடந்த பன்னிரண்டும் உயிரெனப்படும், † அதன் இடையிற் கிடந்த எழுத்து ஆய்தம் எனப்படும், ககரமுதல் னகரமீறாய்க் கிடந்த பதினெட்டும் மெய்யெனப்படும் என்பது

என்னை? "அகர முதலாக வாய்த மிடையா, னகரமீ றாகுமுதல் வைப்பு" என்றாராகலின். (க)

உ ஆன்றவுயி ரீரா றமைங்குறி லேழ்நெடிலா
மேன்றமெய்ம் மூவாறு மெண்ணுங்கா—லூன்றிய
வன்மையே மென்மை யிடைமையாம் வாட்கண்ணாய்
தொன்மை முயற்சியாற் றொக்கு.

எ-ன். உயிரையும் மெய்யையும் வகுத்துணர்த்துதனுதலிற்று.

இ-ள். உயிர் பன்னிரண்டனுள்ளும் அ இ உ எ ஒ என்றவைந்துங் குற்றெழுத்தாம்; ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்றவேழும் நெட்டெழுத்தாம்; மெய்பதினெட்டனுள்ளும், க ச ட த ப ற என்பன வல்லினமும், ங ஞ ண ந ம ன என்பன மெல்லினமும், ய ர ல வ ழ ள என்பன இடையினமுமாம் எ-று.

என்னை? வல்லினம், மெல்லினம், இடையினமென்ற இத்துணையல்லது அவை இவையுவையென்றதில்லையோவெனின், உரையிற்

---

* "ஆசிரியத்தானும் வெண்பாவானுஞ் செய்யவும் படும் சூத்திரம்" என்ப. (தொல், பொரு, மரபியலுரை. ௬00.)

† அதனிடை என்றது முப்பத்தோரெழுத்தினிடை என்றவாறு.

கோடல் என்னுந் தந்திரவுத்தியாற் பெறப்பட்டவாறு; அன்றியுந், "தொன்மை முயற்சியாற் றெருக்கு" என்பதனாலும் பெறப்பட்டவாறு. என்னை? பணிசெய்தார்க்குக் கூலிகொடுவென்றாற் பணிகண்டு கூலி கொடுப்பர்; அதுபோலவெனக்கொள்க. வல்லினங் கன்மேல் விரலிட் டாற் போலவும், மெல்லினம் மணன்மேல் விரலிட்டாற் போலவும், இடையினம் மண்மேல் விரலிட்டாற் போலவும் எனக்கொள்க. (உ)

ங ஒங்குயிர்க ளொற்றின்மே லேறி யுயிர்மெய்யா
யாங்கிரு நூற்றிருபத் தாறாகும்—பாங்குடைய
வல்லொற்று மெல்லொற்று *வர்க்க மளபெடைகள்
சொல்லொற்றி நீட்டத் தொகும்.

எ-ன். இரண்டாம் வைப்பாகிய உயிர் மெய்யெழுத்தும், அவற்றுட் குற்றெழுத்தும் நெட்டெழுத்தும், வருக்கத்தொற்றுக்களாமாறும், ஒற் றளபெடைகள் உயிரளபெடைகளாமாறும் உணர்த்து தனுதலிற்று.

இ-ள். பதினெட்டு ஒற்றுக்களின்மேலும் பன்னிரண்டு உயிர்களும் ஏற அவை இருநூற்றிருபத்தாறும் உயிர்மெய் எனப்படும். என்னை? "உயிரீராறே மெய்ம்மூவாறே, யம்மூவாறு முயிரோடுயிர்ப்ப, விருநூற் றிருபத் தாறுயிர்மெய்யே" என்றாராகலின். இனிக் கவ்வுக்குஙவ்வுஞ் சவ்வுக்குஞவ்வும் டவ்வுக்குணவ்வுந் தவ்வுக்குநவ்வும் பவ்வுக்குமவ்வும் றவ்வுக்குனவ்வும் இவை வருக்கத்தொற்றும். ஒற்றுக்கள் ஊன்றிச் சொல்ல அளபெழும்; அவை ஒற்றளபெடையாம். நெட்டெழுத்தை நீட்டிச்சொல்ல அளபெழும்; அவை உயிரளபெடையாம். அ இ உ எ ஒ என்பன குற்றுயிர், க கி கு கெ கொ என்பன உயிர்மெய்க்குற்றெழுத்து, ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்பன நெட்டுயிர், கா கீ கூ கே கை கோ கௌ என்பன உயிர் மெய் நெட்டெழுத்து, ங ஞ ண ந ம ன வ ய ல ள ஃ என்னும் பதினொரு புள்ளியும் குறிற்கீழும் குறிலிணைக்கீழும் அள பெழும் எ-று.

---

* வர்க்கம்எனத் தற்சமமாய்நின்றது; "நேமிநாதத்தார் வருக்கத் தொற்று வருக்கமளபெடைகள் என்றோது வடமொழியிற் பிறந்தவண்ணமே 'வர்க்கத் தொற்று' 'வர்க்கமளபெடைகள்' என்றாற்போல, யாமுங் கருமதாரயனென் றோது 'கர்மதாரயன்' எனத் தற்சமமாகக் கூறினும்." எனப் பிரயோக விவேக நூலார் கூறியவாற்றான் உணர்க. (சமாசபடலம், ங.)

என்னை? "வன்மையொடு ரஃகான் ழஃகா னொழித்தாங், கன்மெய் யாய்தமொ டளபெழு மொரோவழி." என்பவாகலின்.

வாலாறு. மங்ங்கலம், மஞ்ஞ்சு, மண்ண்ணு, பந்ந்து, அம்ம்பு, மின்ன்னு, தெவ்வ்வர், மெய்ய்யர், வெல்ல்க, கொள்ள்க, எஃஃகு இவை குறிற்கீழ் அளபெழுந்தன. அரங்ங்கம், முழஞ்ஞ்சு, முரண்ண்டு, பருந்ந்து, அரும்ம்பு, முரன்ன்று, குரவ்வ்வை, அரய்ய்ர், குரல்ல்கள், திரள்ள்கள், வரஃஃகு இவை குறிலிணைக்கீழ் அளபெழுந்தன.

இனி, உயிரளபெடையாவன, உயிருள் நெட்டெழுத்தேழும் அளபெடுக்கும்; அவை அளபெடுக்குமிடத்துத் தனிநிலை, முதனிலை, இடைநிலை, இறுதிநிலை யென்னும் நான்கனோடுமுறழ இருபத்தெட்டாம். என்னை? "குன்றிசைமொழிவயி னின்றிசைநிறைக்கு, நெட்டெழுத்திம்பரொத்தகுற்றெழுத்தே" (தொல், எழு, மொழி, அ.) "ஐ ஔ வென்னுமா யிரெழுத்திற், கிகரவுகர மிசைநிறைவாகும்" (ஷை, சு.) என்றாராகலின்.

வ-று. ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ என்பன தனிநிலையளபெடை. மாஅரி, வீஇரம், கூஉரை, ஏஎரி, தைஇயல், ஓஒரி, ஔஉவை இவை முதனிலையளபெடை. படாஅகை, பரீஇயம், கழூஉமணி, பரேஎரம், வளைஇயம், உரோஒசம், அநௌஉகம் இவை இடைநிலையளபெடை. பலாஅ, குரீஇ, கழூஉ, விலேஎ, விரைஇ, உலோஒ, அநௌஉ இவை இறுதிநிலையளபெடை. பிறவுமன்ன. (௩)

௪ தொடர்நொடிற் கீழ்வன்மை மேலுகரம் யப்பின்
படைய வருமிகர மன்றி—மடநல்லாய்
மும்மையிடத் தையௌவுங் குன்றுமுன் னொற்றுண்டேற்
செம்மையுயி ரேறுஞ் செறிந்து.

என்பது குற்றியலுகரமும், குற்றியலிகரமும், ஐகாரக்குறுக்கமும், ஔகாரக்குறுக்கமுமாமாறும், புள்ளியீற்றுநிலைமொழியின்பின் உயிர் வரின் ஏறிமுடியுமென்பதூஉம் உணர்த்துதனுதலிற்று.

இ-ள். தொடர்மொழி யென்பது மூன்றெழுத்து முதலாய்க்கிடந்த மொழியென்றறிக. என்னை? "ஓரெழுத்தொருமொழி யீரெழுத்தொருமொழி, யிரண்டிறந்திசைக்குந் தொடர்மொழியுளப்பட, மூன்றேமொழி

நிலை தோன்றிய நெறியே." (தொல், எழு, மொழி, கஉ.) என்பவாகலின். வல்லொற்றுத் தொடர்மொழி, மெல்லொற்றுத் தொடர்மொழி, இடையொற்றுத் தொடர்மொழி, ஆய்தத் தொடர்மொழி, உயிர்த் தொடர்மொழி, நெடிற்கீழ் என்று சொல்லப்பட்ட சொற்களி னீற்றினின்ற வல்லெழுத்தின்மேல் ஏறியவுகரங் குறுகுமென்க. அக்குற்றுகரத்தின் பின் யகரம் வந்துழி அக்குற்றுகரம் அழிந்து இகரமாய்க் குறுகுமென்க. மொழிக்கு மூன்றிடத்தும்வந்த ஐகார ஔகாரங்கள் குறுகும். ஒற்றெழுத்தின்பின் வந்த உயிர் தனிநில்லாது ஏறி முடியும். என்னே? "நெட்டெழுத்திம்பருந் தொடர்மொழியீற்றுங், குற்றியலுகரம் வல்லாறூர்ந்தே." (தொல், எழு, மொழி, ந.) எனவுங்கூறினாராகலின்.

வ-று. சுக்கு, கொங்கு, தெள்கு, எஃகு, வரகு, நாகு என்பன ககரமூர்ந்துவந்த குற்றியலுகரம். ஒழிந்தனவும் இவ்வாறே யொட்டிக் கொள்க. இனிக் குற்றியலிகரம் வருமாறு:— "யகரம்வருவழி யிகரங் குறுகு, முகரக்கிளவி துவரத்தோன்றாது." (தொல், எழு, குற், ந.) என்பவாகலின். வ-று:— சுக்கியாது, கொங்கியாது, தெள்கியாது, எஃகியாது, வரகியாது, நாகியாது எனக் கண்டுகொள்க. பிறவுமன்ன. இனி ஐகாரக்குறுக்கம் வருமாறு:— ஐப்பசி, மைப்புறம், உடைவாள், மடையன், குவளை, தவளை, திணை, பனை என முதலும் இடையுங் கடையுங் குறுகியவாறு. ஔகாரக்குறுக்கம் வருமாறு:— ஔவை, பௌவம் என முதற்கட் குறுகிற்று. இடையுமீறும் வந்தவழிக் கண்டுகொள்க.

ஐஔவுங் குறுகுமென் றோரிடத்தே கூறினாரயினும் இறுதிவிளக்காகக் கொண்டு, தொடர்நெடிற்கீழ் வன்மைமேலுகரங் குன்றும், யப்பின் படையவரு மிகரங் குன்றும், மும்மையிடத்தும் ஐஔவுங்குன்றும் என எங்கும் ஒட்டிக்கொள்க. என்னே? "புனையுறுசெய்யுட் பொருளையொருவழி, வினைநின்று விளக்கினது விளக்கெனப்படுமே" "முதலிடைகடையென மூவகையான." என்பன அணியியல் ஆகலின்.

இனிப் புள்ளியீற்றுமுன் உயிர் தனித்தியலாது வந்தேறிமுடியுமாறு:— தூணென நிறுத்தி அழகிதென உயிர் முதலாகிய வருமொழிகளை வருவித்து "முன்னொற்றுண்டேற் செம்மையுயி ரேறுஞ்செறிந்து" என்பதனால் தூணழகிதெனமுடிக்க, நிலமழகிது, வானழகிது என்பன

முதலாயினவும் ஒட்டிக் கண்டுகொள்க. என்னை? "புள்ளியீற்றுமுன் னுயிர்தனித் தியலாது, மெய்யொடுசிவணு மவ்வியல்கெடுத்தே" (தொல், எழு, பு, ௩௬.) என்பவாகலின். (௪)

௫ குறினெடில்க ளொன்றிரண்டு மூன்றளவு காலாங்
குறுகுமவ் வாய்த முயிர்மெய்—பெறுமுயிரே
மெய்யாய்தம் இஉக் குறுக்கமரை மென்மொழியா
யையௌ வளவொன் றரை.

எ-ன். மேற்கூறிய எழுத்துக்களுக்கு மாத்திரையாமாறு உணர்த்து தனுதலிற்று.

இ-ள். குற்றெழுத்திற்கு ஒரு மாத்திரை, நெட்டெழுத்திற்கு இரண்டு மாத்திரை, அளபெடைக்கு மூன்று மாத்திரை, மகரக்குறுக்கத் திற்கும் ஆய்தக்குறுக்கத்திற்கும் ஒரோவொன்று கான்மாத்திரை, ஏறிய உயிரின் மாத்திரையே உயிர்மெய்க்கும் மாத்திரையென வறிக. ஒற்றிற் கும், ஆய்தத்திற்கும், குற்றியலிகரத்திற்கும், குற்றியலுகரத்திற்கும், ஒரோவொன்று அரைமாத்திரை. ஐகாரக்குறுக்கத்திற்கும் ஔகாரக் குறுக்கத்திற்கும் ஒரோவொன்று ஒன்றரை மாத்திரை யெனக்கொள்க.

'பெறுமுயிர்' என்றதனுல் ஒற்றளபெழுந்தால் இரண்டொற்றுமாக ஒரு மாத்திரை பெறும். அளபெழாதவழி இரண்டொற்றுக்கூடி நிற் பினும் மாத்திரை பெறு. என்னை? "ஒற்றளபெழாவழிப் பெற்றவல கிலவே." என்பவாகலின். ஐகாரம் ஒரு மாத்திரையுமாம். "குறுமை யெழுத்தி னளவேயை கார, நெடுமையி னீங்கியக் கால்" என்பவாகலின். மாத்திரைக்களவு "கண்ணிமை கைந்நொடி யவ்வே மாத்திரை நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே." (தொல், எழு, நூன், எ.) என்பவாக லின். அதன் பகுப்பு எவ்வாறெனில், "உன்னல்காலே யூன்றலரையே, முறுக்கன்முக்கால் விடுத்தலொன்றே." எனக்கண்டுகொள்க. ஒன்றரை யறிவது எற்றாலோவெனிற் கடவென்புழி டகர அகரம் ஒரு மாத்திரை யாயவாறும், கடாவென்புழி டகர ஆகாரம் இரண்டுமாத்திரையாயவாறும், கடையென்புழி டகர ஐகாரம் ஒரு மாத்திரையிலேறி இரண்டு மாத்திரை யிற் குறைந்தவாறுங் கண்டுகொள்க. அவற்றுள் ஒழிந்தனவும் இவ் வாறே யொட்டிக்கொள்க. (௫)

௬ உந்தியிற் றோன்று முதான வளிப்பிறந்து
கந்தமலி நெஞ்சுதலை கண்டத்து—வந்தபி
ஞசிஞ வண்ண மிதழெயிறு மூக்கெனப்
பேசு மெழுத்தின் பிறப்பு.

எ-ன். எழுத்துக்கட்குப் பிறப்பாமாறு உணர்த்துதனுதலிற்று.

இ-ள். கொப்பூழ் முதலாகத் தோன்றும் உதானவாயுவினிடத்தே தோன்றி, நெஞ்சுந் தலையும் மிடறுமென்னும் முதலிடவகையினும், நாவும், அண்ணமும், இதழும், எயிறும், மூக்கு மென்னும் துணையிட வகையினும் புலப்படும் எழுத்து. எ-று.

என்னை? "உந்தி முதலா முந்துவளி தோன்றித், தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலைஇப், பல்லு மிதழு நாவு மூக்கு, மண்ணமு முளப் பட வெண்முறை நிலையா, னுறுப்புற் றமைய நெறிப்பட நாடி, யெல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப், பிறப்பி னாக்கம் வேறுவே றியல, திறப் படத் தெரியுங் காட்சி யான." (தொல், எழு, பிற, க.) "அவ்வழிப், பன்னீ ருயிருந் தந்நிலை திரியா, மிடற்றுப் பிறந்த வளியி னிசைக்கும்." (ஷை, உ.) "அவற்றுள், அ ஆ வாயிரண் டங்காந் தியலும்." (ஷை, ௩.) "இ ஈ எ ஏ ஐயென விசைக்கு, மப்பா லைந்து மவற்றோ ரன்ன, வவைதா, மண்பன் முதனா விளிம்புற லுடைய." (ஷை, ச.) "உ ஊ ஒ ஓ ஔவென விசைக்கு, மப்பா லைந்து மிதழ் குவிந் தியலும்." (ஷை, ரு.) "தத்தந் திரிபே சிறிய வென்ப." (ஷை, ௬.) "ககார ஙகார முதனா வண்ணம்." (ஷை, எ.) "சகார ஞகார மிடைநா வண்ணம்." (ஷை, அ.) "டகார ணகார நுனிநா வண்ணம்." (ஷை, ௯.) "அவ்வா றெழுத்து மூவகைப் பிறப்பின." (ஷை, க0.) "அண்ண நண்ணிய பன்முதன் மருங்கி, னாநுனி பரந்து மெய்யுற வொற்றத், தாமினி து பிறக்குந் தகார நகாரம்." (ஷை, கக.) "அணரி நுனிநா வண்ண மொற்ற, றஃகா னஃகா னாயிரண்டும் பிறக்கும்." (ஷை, கஉ.) "நுனிநா வணரி யண்ணம் வருட, ரகார ழகார மாயிரண்டும் பிறக்கும்." (ஷை, க௩.) "நாவிளிம்பு வீங்கி யண்பன் முதலுற, வாவயி னண்ண மொற்றவும் வருடவும், லகார ளகாரமா யிரண்டும் பிறக்கும்." (ஷை, கச.) "இதழியைந்து பிறக் கும் பகார மகாரம்." (ஷை, கரு.) "பல்லித ழியைய வகாரம் பிறக்

கும்." (ஷை, கரு.) "அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை, கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்." (ஷை, கஎ.) "மெல்லெழுத் தாறும் பிறப்பி னாக்கஞ், சொல்லிய பள்ளி நிலையின வாயினு, மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்." (ஷை, கஅ.) "சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத், தேர்ந்து வெளிப் படுத்த வேனை மூன்றுந், தத்தஞ் சார்பிற் பிறப்பொடு சிவணி, யொத்த காட்சியிற் றம்மியல் பியலும்." (ஷை, கக.) என்றார் தொல்காப்பியனார். இவைகளை விரித்துரைத்துக் கொள்க. (சு)

எ காட்டு முயிருங் கசதநப மவ்வரியு
மீட்டிய வவ்வரியி னெட்டெழுத்து—மீட்டு
ஞயவின்கண் மும்மூன்று நன்மொழிக்கு முன்னென்
றயர்விலார் கட்டுரைத்தா ராய்ந்து.

எ-ன். மொழிக்கு முதலாம் எழுத்துக்களைத் தெரிந்து உணர்த் துத லுதலிற்று.

இ-ள். உயிர் பன்னிரண்டும், ககரவருக்கம் பன்னிரண்டும், சகரவருக்கம் பன்னிரண்டும், தகரவருக்கம் பன்னிரண்டும், நகரவருக்கம் பன்னிரண்டும், பகரவருக்கம் பன்னிரண்டும், மகரவருக்கம் பன்னிரண்டும், வகரவருக்கத்தில் எட்டும், ஞகரவருக்கத்தில் மூன்றும், யகரவருக்கத்தில் மூன்றும் ஆக இத்தொண்ணூற்றெட்டெழுத்தும் மொழிக்கு முதலாம். எ-று.

உ-ம். அறம், ஆடை, இகல், ஈகை, உடம்பு, ஊழி, எண்கு, ஏகம், ஐயம், ஒக்கல், ஓங்கல், ஔவியம் எனவும்; கட்சி, காடு, கிடங்கு, கீரி, குன்று, கூதிர், கெண்டை, கேதகை, கைதை, கொங்கு, கோங்கு, கௌவை எனவும்; சகடம், சாகாடு, சிரல், சீர்மை, சுவல், சூது, செறல், சேறல், சையம், சொன்றி, சோறு, சௌரியம் எனவும்; தந்தை, தாதை, திரு, தீமை, துத்தி, தூது, தெங்கு, தேயம், தையல், தொன்மை, தோல், தௌவை எனவும்; நடம், நாட்டம், நிறம், நீர்மை, நுகம், நூழில், நெஞ்சு, நேயம், நைவு, நொசிவு, நோக்கு, நௌவி எனவும்; படை, பாடி, பிறை, பீரம், புறம், பூமி, பெற்றம், பேதை, பைதல், பொத்தகம், போதம், பௌவம் எனவும்; மல்லல், மாமை, மிடல், மீளி,

முடி, மூங்கை, மென்மை, மேன்மை, மையல், மொட்டு, * மோத்தை, மௌவல் எனவும்; வங்கம், வாளி, விளக்கு, வீரம், வென்றி, வேழம், வையம், வெளவினர் எனவும்; ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று எனவும்; யானை, யூகம், யோகி எனவும்; இத்தொண்ணூற்றெட்டெழுத்தும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க. ஏனையெழுத்தும் தம்மைக் கூறுமிடத்துத் தாம் முதலாய் நிற்கும். "ரஃகா னொற்றும் பகா விறுதியு, மாரைக் கிளவி யுளப்பட மூன்று, நேரத் தோன்றும் பலாறி சொல்லே." (தொல், சொல், கிள, எ.) என்னும் இந்நிலைமண்டில வாசிரியப் பாவின்கண் ரகரம் முதலாக உச்சரித்தவாறு கண்டுகொள்க. ரகரந்தன்னைச் சொல்லுதலாலெனவறிக. என்னை? "முதலா வேன தம் பெயர் முதலும்" (தொல், எழு, மொழி, ௩௩.) என்பவாகலின்.

ஒற்றெழுத்தை முதலாக உச்சரித்தவாறு என்னையோவெனின்— ஒற்றுத் தன்னைச் சொல்லுதலான் முதலாகக் கொண்டுச்சரித்தான், அகரமேற்றியெனக் கொள்க. என்னை? "மெய்யி னியக்க மகரமொடு † சிவணும்" (ஷை, கங) என்பவாகலின். மற்றுஞ் சிலஉயிரையேற்றி, உச்சரிக்கவுமாமோவெனின்—ஆகாது; அவை கொம்பும், காலும், கட்டும், வீச்சும் வேறுபடுதலின் வடிவு வேறுபடுமாதலான் என்க. (எ)

அ உயிரின்க ணென்பா னுடன்மென்மை யின்மூன்
றயர்வி லிடையினங்க ளாறு—நயனுணர்ந்து
நன்மொழிகட் கீற்றெழுத்தா மென்றுரைப்பர் ஞாலத்துச்
சொன்முடிவு கண்டோர் துணிந்து.

எ-ன். மொழிக்கு ஈறாமெழுத்துக்களது பெயர் வேறுபாடு தெரிந் துணர்த்து தனுதலிற்று.

இ-ள். அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ என்னும் உயிரொன் பதும், ணகர, னகர, மகர மென்னும் மெல்லினம் மூன்றும், ய, ர, ல, வ, ழ, ள என்னும் இடையினமாறும் மொழிக்கு ஈற்றெழுத்தாம். எ-று.

---

* இதனால் "மோத்தையுந் தகரு முதளூ மப்பரும், யாத்த வென்பயாட் டின் கண்ணே" (தொல், பொரு, மர, ௬எ.) என்பதே உண்மைப்பாடமாதல் கண்டுகொள்க.

† 'நிலையல்' எனவும் பிரதி பேதம்.

வ-று. விள, பலா, கிளி, தீ, வேந்து, பூ, சே, பனை, கோ என்பன உயிரீறு; இவற்றை உயிர்மெய்யீறென்னாது உயிரீறு என்றது என்னையோ வெனின்—மொழிகளினீற்றிலே நின்ற உயிர்மெய்யை உயிரீறு என்னலாம்; என்னை? "மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே." (தொல், எழு, நூன், கஅ.) என்றாராகலின். "உயிர்மெய் யீறு முயிரீ றியற்றே." (தொல், எழு, புணரி, ச.) என்பதனாற் பிரித்தால் உடல் முன் உயிர்பின்னும் ஆதலால் எனக்கொள்க. அன்றியும், வாளுங்கூடு மிருப்பின் வாளைக்கொடுவா வென்னுமத்துணை யல்லது கூட்டைக் கொடுவா வென்பது இல்லையாதலான் இங்ஙனம் சொல்லப்பட்டது.

வ-று. மண், மரம், பொன், மெய், தார், மால், தெவ், புகழ், வாள் எனவுங் கண்டுகொள்க.

'நன்மொழி' என்று மிகுத்துச் சொல்லியவதனால் ஒகரம் ஈறாமிடமு முண்டு; அது நொ எனக் காண்க. (அ)

கூ ஆதியுயிர் வவ்வியையி னௌவா மஃதன்றி
நீதியினால் யவ்வியையி னையாகு—மேதமிலா
எஒமெய் புள்ளிபெறு மென்ப சஞயமுன்
அஐயா மாதி யிடை.

எ-ன். சிலவெழுத்துப் போலியும் சிலவெழுத்து வடிவு வேற்றுமையும் ஆமாறுணர்த்து தனுதலிற்று.

இ-ள். அகாரமும் வகரவொற்றுங்கூடி ஔகாரத்தின் பயத்தவாகலும், அகாரமும் யகரவொற்றுங்கூடி ஐகாரத்தின் பயத்தவாகலும், எகர ஒகரங்கள் மெய்கள் புள்ளிபெற்று நிற்றலும், சகர ஞகர யகரங்களின் முன்னாய் மொழிக்கு முதலாய் நின்ற அகாரமும் இடை நின்ற அகாரமும் ஐகாரமாகலுமாம். எ-று.

வ-று. அவ்வை, ஔவை எனவும், அய்யர், ஐயர் எனவும் வரும். எ்ரி, ஒ்தி, மெ்ன்மை, கொ்ங்கு என எகர ஒகரங்களும் மெய்களும் புள்ளிபெற்றவாறு. தச்சு தைச்சு, மஞ்சு மைஞ்சு, தய்யல் தையல் என மொழிக்கு முதலாய் அகாரம் ஐகாரம் ஒத்தவாறு. அரசு அரைசு,

இலஞ்சி இலைஞ்சி, அரயர் அரையர் என மொழியிடையினின்ற அகரம் ஐகாரம் ஒத்தவாறு. இவற்றுள் ஒன்றுஞ் சிறந்ததில்லை. என்னை? "அ ஐ முதலிடை யொக்கு மொரோவழி." என்பவாகலின். (௬)

௧0 அகரத்திற் காவு மிகரத்திற் கையு
முகரத்திற் கௌவு மிருவிற்—ககல்வரிய
வாருமா மேயா மிகரத்திற் கோவாகிச்
சேருமுக ரத்தின் றிறம்.

எ-ன். ஒருசார் வடமொழி முடிபுணர்த்து தனுதலிற்று.

இ-ள். அகரம் ஆகாரமாயும், இகரம் ஐகாரமாயும், உகரம் ஔகாரமாயும், இருவென்பது ஆராயும் வரும் ஒரு சொல்லிடத்து; இனி இரு சொல்லிடத்து இகரம் ஏகாரமாயும் உகரம் ஓகாரமாயும் வரும். எ-று.

வ-று. அருகனென நிறுத்தி இவனைத் தெய்வமாகவுடையான் யாவனெனக் கருதியவிடத்து அகரத்தை ஆகாரமாக்கி, 'ஒற்றுமிகும்' என்பதனாற் ககரவொற்றின்பின்னே தகரவொற்றை மிகுத்து, 'சுட்டு மிகும்' என்பதனால் அகரச்சுட்டை மிகுத்து 'முன்னொற்றுண்டேற் செம்மையுயிரேறுஞ் செறிந்து' என்பதனால் ஒற்றிலே உயிரை ஏற்றி ஆருகதன் என முடிக்க. தசரதன் மகன் தாசரதி யென்புழி நிலைமொழி யீற்றினின்ற அன்னென்னும் பதத்தைக் கெடுத்து இகரச்சுட்டை மிகுத்துத் தகரவொற்றிலே உயிரையேற்றி முதனின்ற தகர அகரத்தை ஆகாரமாக்கித் தாசரதியென முடிக்க. சிவனென நிறுத்தி இவனைத் தெய்வமாகவுடையான் யாவனெனக் கருதிய பொழுது இகரத்தை ஐகாரமாக்கிச் சைவனென முடிக்க. புத்தனென நிறுத்தி இவனைத் தெய்வமாகவுடையான் யாவனெனக் கருதிய போது, உகரத்தை ஔகாரமாக்கிப் பௌத்தனென முடிக்க. இருடிகளென நிறுத்தி இவர்களாற் செய்யப்பட்டது யாதெனக் கருதியபொழுது இருவென்பதனை ஆர் ஆக்கி இகரச்சுட்டை மிகுத்து ரகரவொற்றிலே உயிரையேற்றி, 'கடைக்குறைத்தல்' என்பதனாலும் 'ஓரோர் மருவில் பதங்கெட்டுவரும்' என்பதனாலும் இகள் என்னும் பதத்தைக் கெடுத்து அம்மென்னும் பதத்தை மிகுத்து ஆரிடம் என முடிக்க. இருசொல்லிடத்து நரனென நிறுத்தி இந்திரனென வருவித்து நிலைமொழியிறுதியினின்ற அன்னென்னும் பதத்தைக்

கெடுத்து 'ஏயாமிகாத்திற்கு' என்பதனான் இகரத்தை ஐகாரமாக்கி ரகரவொற்றின்மேல் உயிரையேற்றி நரேந்திரனென முடிக்க. 'ஏயா மிகாத்திற்கு' என்று சிறப்பித்தவதனான் அமரேசனென்னும் ஈகார பதமும் இவ்வாறே முடிக்க. குலம் என நிறுத்தி உத்துங்கனென வருவித்து நிலைமொழியீற்றினின்ற அம்மென்னும் பதைக் கெடுத்து உகரத்தை ஒகாரமாக்கி லகரவொற்றின்மேல் உயிரையேற்றிக் குலோத் துங்கனென முடிக்க. கூப, உதகம் கூபோதகம் என்பதும் அது. பிறவுமன்ன. (௧௦)

கக * நேர்ந்த மொழிப்பொருளை நீக்க வருநகாஞ்
சார்ந்த துடலாயிற் றன்னுடல்போஞ்—சார்ந்ததுதா
னுவியேற் றன்னுவி முன்னாகும் ஐஔவா
மேவிய ஏ ஓவும் விரைந்து.

எ-ன். இதுவும் ஒருசார் வடமொழி முடிபு கூறுகின்றது.

இ-ள். நின்ற மொழியின் பொருளை மாற்றுதற்கு முதனிறுத்திய நகர உயிர்மெய் அப்பொருண் மொழியின் முதலெழுத்து உயிர்மெய்யா கில் அவ்வுயிரொழிய உடல்போம்; அஃது உயிராயின் நகரவுயிர்மெய் பிரிந்து உயிர் முன்னும் உடல் பின்னுமாம்; என்னை "மெய்யின்வழிய துயிர்தோன்று நிலையே." (தொல், எழு, நூன், ௧௮.) என்பதனாற் பிரிந்தால் உயிர் பின்னும் எங்க. மொழி முதனின்ற ஏகாரம் ஐகார மாம்; ஓகாரம் ஔகாரமாம். எ-று.

வ-று. சஞ்சலமென நிறுத்தி இதனையில்லாதான் யாவனெனக் கருதியவிடத்து நகரவுயிர்மெய்யை முன்னே வருவித்துச் 'சார்ந்தது டலாயிற்றன்னுடல்போம்' என்பதனாற் பிரித்து, நகரவொற்றைக்கெடுத்து அசஞ்சலனென முடிக்க. பயம், களங்கம் என இவையும் அவ்விலக்கணத் தான் அபயன் அகளங்கன் என முடிக்க. உபமனென நிறுத்தி, இதனை யில்லாதான் யாவனெனக்கருதியவிடத்து நகரவுயிர்மெய்யை முன்னர்

* " 'நேர்ந்த..................முன்னாகும்' என்பதனான் 'அகளங்கன்' 'அநங் கன்' எனவும், 'அப்பிராமணன்' 'அநச்சுவம்' எனவும், 'அதன்மம்' எனவும் முறையே இன்மை, அன்மை, எதிர்மறை மூன்றினும் நஞ்து வரும்" என்றார் பிரயோகவிவேகநூலார் (சமாசபடலம், ௪௦.)

நிறுத்தி, 'சார்ந்தது தானுவியேற்றன்னுவி முன்னாகும்' என்பதனாற் பிரித்து அகரத்தை முன்னர் நிறுத்தி, நகரவொற்றின்மேல் உயிரை தான் யா[illegible] அநுபமனென முடிக்க. அகமென்பது பாவம்; இதனையில்லா[illegible]யபொழுது இவ்விலக்கணத்தால் அநகன் என்க. உசிதம் என்பது யோக்கிய[illegible]து இல்லாதது அநுசிதம் என முடிக்க. வேரமென நிறுத்தி இதன் முதா[illegible]ெனக்கருதியவிடத்து ஏகாரத்தை ஐகாரமாக்கி வைரமென முடிக்க. கேவலம் கைவலமென்று ஆயிற்று. வேதிகன் வைதிகனென்பதும் அது. கோசலையென நிறுத்தி இதனுட்பிறந்தாள் யாவளெனக் கருதியவிடத்து ஓகாரத்தை ஔகாரமாக்கிக் கௌசலையென முடிக்க. சோமன்புத்திரன் சௌமியனென முடிக்க; சௌமியனாவான் புதன். பிறவுமன்ன. (கக)

கஉ மெய்யீ றுயிரீ றுயிர்முதன் மெய்ம்முதலா
வெய்தும் பெயர்வினையு மிவ்வகையே—செய்தமைத்தாற்
றோன்ற றிரிதல் கெடுதலெனத் தாமொழியாய்
மூன்றென்ப சந்தி முடிவு.

எ-ன். சந்தி முடிக்கப்படாநின்ற சொற்கள் இப்பகுதியவெனப் பொதுவிலக்கண முணர்த்துதனுதலிற்று.

இ-ள். சந்தி முடியுமிடத்து, மெய்யீறாய் மெய்ம்முதலாய் வருவனவும், மெய்யீறாய் உயிர் முதலாய் வருவனவும், உயிரீறாய் உயிர்முதலாய் வருவனவும், உயிரீறாய் மெய்ம்முதலாய் வருவனவுமென இந்நான்கும், பெயரீறாய்ப் பெயர் முதலாய் வருவனவும், பெயரீறாய் வினை முதலாய் வருவனவும், வினையீறாய் வினை முதலாய் வருவனவும், வினையீறாய்ப் பெயர்முதலாய் வருவனவுமென இப்பகுதியாற் பிரித்தால், எழுத்துத் தோன்றி முடிவனவும், திரிந்து முடிவனவும், கெட்டு முடிவனவுமென மூன்று வகையான் முடிக்கப்படும். எ-று. சொல்லுத் தோன்றியும், சொல்லுத் திரிந்தும், சொல்லுக் கெட்டும் முடிவனவும் உளவெனக் கொள்க.

வ-று. பொற்குடமென்பது மெய்யீறாய் மெய்ம்முதலாய் வந்து பெயரீறாய்ப் பெயர்முதலாயிற்று. பொன்னழகிது என்பது மெய்யீறாய் உயிர்முதலாய் வந்து பெயர்முதலாய் வினையீறாயிற்று. உண்டோது

என்பது உயிரீறாய் உயிர்முதலாய் வந்து வினையீறாய் வினைமுதலாயிற்று. உண்டகை என்பது உயிரீறாய் மெய்ம்முதலாய் வந்து வினைமுதலாய்ப் பெயரீறாயிற்று.

'எய்தும்பெயர்' என்று மிகுத்துச் சொல்லியவதனாற் சொற்கள் நிலைமொழி வருமொழி செய்தால் முன்மொழியிலே பொருணிற்பனவும், பின்மொழியிலே பொருணிற்பனவும், இருமொழியினும் பொருணிற்பனவும், இருமொழியுமொழியவேறொருமொழியிலே பொருணிற்பனவும் என நான்கு வகைப்படும். அவை வருமாறு—அரைக்கழஞ்சு என்புழி முன்மொழியிற் பொருணின்றது; வேங்கைப்பூ என்புழிப் பின்மொழியிற் பொருணின்றது; தூணிப்பதக்கு என்புழி இருமொழியினும் பொருணின்றது; பொற்றொடி என்புழி இருமொழியினுட் பொருளின்றி இவற்றையுடையாள் என்னும் வேறொரு மொழியிலே பொருணின்றது.

இனித் தோன்றிய சந்தியும், திரிந்த சந்தியும், கெட்ட சந்தியு மாவன; யானைக்கோடென்பது தோன்றிய சந்தி, மட்குடமென்பது திரிந்த சந்தி, மரவேர் என்பது கெட்ட சந்தியெனக் கொள்க.

சந்தியினை நாலென இயல்பு சந்தியுங்கூட்டி சிலர் சொல்ல இந் நூலுடையார் இயல்பு சந்தியை நீக்கியதென்னையோ வெனின்—இயல்பு சந்திகளின் மிக்குந் திரிந்தும் கெட்டும்வருவன இல்லையாதலான், முடிக்க வேண்டுஞ் சந்திகள் இல்லாமலே நீக்கினார் எனக்கொள்க.

'செய்தமைத்தல்' என்றமையாற் சந்திகள் மும்மொழிக்கூட்ட மாய் இரண்டு சந்தி படுவனவும், இருமொழியாற் பொருள்வேறுபட்டு இரண்டு மூன்று சந்திபடுவனவுமுளவாதலான், அவை, படும்பகுதி அறிந்து ஒருவன் கேட்ட சந்தியை நீ கருதிற்றியாதெனக் கேட்டு முடிக்கப்படுமெனக் கொள்க.

சிறுவழுதுணங்காய் என்புழிச் சிறுமையென நிறுத்தி வழுதுணங் காய் என வருவித்து முடித்தல் செய்க. சிறுவழுதுணை என நிறுத்திக் காய் என வருவித்து முடித்தல் செய்பறக. செம்பொன் பதின்பலம், பொன்னுழி, பெண்ணீத்தார் என்பன பலபொருளாதலான், அவன் கருத்தறிந்து முடிக்க, பிறவுமன்ன. (௧௨)

கரு மூன்றுநான் கொன்பா னுயிர்ப்பின்னு மல்லாத
வான்ற வுயிர்ப்பின்னு மாவிவரிற்—றோன்றும்
யகர வகர மிறுதியிடத் தோரோர்
மகரங் கெடவகர மாம்.

எ-ன். உடம்படுமெய்யாமாறு உணர்த்துதனுதலிற்று.

இ-ள். இகர, ஈகார, ஐகாரமென்னும் இம்மூன்றுயிரும் நிலைமொழி யீற்றினிற்க, வருமொழிக்கு முதலாக யாதானுமோருயிர்வரின், நடுவு யகரவொற்றுத் தோன்றும்; அகர, ஆகார, உகர, ஊகார, ஏகார, ஓகார மென்னும் இவ்வாறுயிரும் நிலைமொழியீற்றினிற்க, வருமொழிக்கு முதலாக யாதானுமோருயிர்வரின் நடுவு வகரவொற்றுத்தோன்றும்; உயிர் வரின் நிலைமொழியிறுதியினின்ற மகரம் ஓரோவிடத்தழிந்து வகரந் தோன்றுதலுமுண்டு. எ-று.

வ-று மணி, தீ, கதையென நிறுத்தி அழகிது என உயிர் முதலாகிய சொற்களை வருவித்து, இவ்விலக்கணத்தான் யகரவொற்றை நடுவு மிகுத்து 'முன்னொற்றுண்டேற் செம்மையுயிரேறுஞ் செறிந்து' என்பதனான் ஒற்றின்மேல் உயிரையேற்றி மணியழகிது, தீயழகிது, கதையழகிது எனமுடிக்க. அல்லாத உயிர்கள் வருமாறு—விள, பலா, கடு, பூ, சே, கோ என நிறுத்தி, உயிர்முதலாகிய சொற்களை வருவித்து இவ்விலக்கணத்தான் நடுவு வகரவொற்றை மிகுத்து உயிரை யேற்றி விளவழகிது, பலாவழகிது, கடுவழகிது, பூவழகிது, சேவழகிது, கோவழகிது என முடிக்க. மரமென நிறுத்தி உயிர்முதலாகிய சொற் களை வருவித்து இவ்விலக்கணத்தான் மகரவொற்றைக் கெடுத்து வகர வொற்றை மிகுத்து உயிரையேற்றி மரவடியென முடிக்க. குண்டல வொளி, வெண்கலவோசை என்பனவும் அது. பிறவுமன்ன. (கரு)

கச குற்றுகர மாவி வரிற்சிதையுங் கூறியுவல்
லொற்றுமுன் றோன்றுதலு முண்டாகு—முற்றோன்று
மென்மையதன் வல்லெழுத்தாம் வேற்கண்ணாய் முற்றுகரத்
தன்மையும்போ மாவியினைச் சார்ந்து.

எ-ன். குற்றுகாவீற்று நிலைமொழியும் முற்றுகாவீற்று நிலை மொழியும் முடியுமாறுணர்த்துதனுதலிற்று.

இ-ள். குற்றுகரவீற்று நிலைமொழியின்பின் யாதானுமோருயிர் வந்தால் உகரம் அழிந்து வந்த உயிர் ஏறி முடியும்; முன்னொற்றில்லாத குற்றுகரத்தின்பின் யாதானும் ஒரு சொல் வந்தால், அவ்வுகரம் ஏறின வொற்றின் முன்பே, தனக்குப்பொருந்திய வல்லொற்றுத் தோன்றி முடிதலுமுண்டு; குற்றியலுகரத்தின்முன் ஒரு மெல்லொற்று நின்றால் அது வல்லொற்றாய் முடியவும் பெறும்; உயிர் வந்தால் முற்றுகரம் அழிந்து முடியவும் பெறும். எ-று.

முன்னின்ற வல்லொற்று என்னாது தோன்றுமென்று மிகுத்துச் சொல்லியவதனான், வல்லொற்றுத் தோன்றுவதும், மெல்லொற்று வல் லொற்றாவதும் பெயர் வந்துழியன்றி வினைவரின் இயல்பாய் முடியுமெனக் கொள்க.

வ-று. நாகு என நிறுத்தி அழகிதென உயிர் முதலாகிய சொற் களை வருவித்து இவ்விலக்கணத்தால் உகரத்தையழித்து அகரத்தை யேற்றி நாகழகிதென முடிக்க. அல்லாத குற்றுகரமும் இவ்வாறே முடிக்க. காடு, பகடு, யாறு, கவறு என நிறுத்தி ஏற்ற சொற்களை வருவித்து இவ்விலக்கணத்தாற் காட்டுவழி, பகட்டுநிலை, யாற்றுவரவு, கவற்றுக்கை; காட்டிடம், பகட்டேர், யாற்றூறல், கவற்றுப்பால் என முடிக்க. அவைதாம் வினைச்சொல் வந்தவிடத்து யாறுவந்தது, யாடு வந்தது, பகடுவந்தது, கவறுவந்தது என இயல்பாய் முடிந்தவாறு கண்டுகொள்க. வழியென்பது பெயர்ச்சொல்; வந்தது என்பது வினைச் சொல் என அறிக.

‘வல்லொற்று முன்றோன்றுதலுமுண்டாகும்’ என்ற உம்மையாற் பெயர்ச்சொல் வருவித்தாலும் வல்லொற்றுத்தோன்றாச் சொற்களும் உள; அவை காசு, கிழி, பொதி, பயறு, துவரை இவை முதலாயின எனக் கொள்க.

இனிக் குரங்கு, கழஞ்சு, நஞ்சு, எண்கு, மருந்து, கரும்பு, அன்பு என நிறுத்தி ஏற்ற சொற்களை வருவித்துக் குரக்குவிரல், கழச்சுக்கோல், நச்சுக்குழல், எட்குக்குட்டி, மருத்துப்பை, கருப்புவேலி, அற்புத்தளை; குரக்கிறைச்சி, கழச்சிற்பாதி, நச்சுறை, எட்கிரல், நத்தின்கோடு, கருப் பிலை, அற்புறுத்தல் என வரும். பிறவுமன்ன. அவையே வினைச்சொல்

வந்தால் குரங்கு வந்தது, கழஞ்சு கொண்டார், எண்கு கரிது, மருந்து பறித்தது, கரும்பு கிழித்தது, அன்பு பெரிது என இயல்பாயினவாறு கண்டுகொள்க. கதவு என முற்றுகரத்தை நிறுத்தி உயிர் முதலாகிய சொல்லை வருவித்து இவ்விலக்கணத்தான் உகரத்தையழித்து உயிரை யேற்றிக் கதவழகிதென முடிக்க. பிறவுமன்ன. (கச)

கரு குற்றொற் றிரட்டுமுயிர் வந்தால் யரழக்க
ணிற்கப்பின் வல்லெழுத்து நேருமே—லொற்றும்
பிணைந்த வருக்கம் பெயர்த்தியல்பு சந்தி
யிணைந்தபடி யேமுடியு மேய்ந்து.

எ-ன். ஒரு சார் ஒற்றீறு முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள். தனிக்குற் றெழுத்தின் பின்னின்ற ஒற்றுக்கள் வரு மொழிக்கு முதலாக யாதானும் ஒருயிர்வரின் அவ்வொற்றிரட்டித்து வந்த உயிரேறி முடியும்; நிலைமொழி யிறுதியி னின்ற யரழ ஒற்றுக்குப் பின்னாக வல்லெழுத்து வரின், தன் வர்க்கத்து வல்லொற்றுதல் மெல் லொற்றுதல் மிக்கு ஈரொற்றுடனிலையாய் முடியும் என்க; இயல்புசந்தி கள் விகாரப்படாது நிலைமொழியும் வருமொழியும் நிறுத்தியபடியே நின்று முடியும். எ-ம்.

வ-று. மண், கம், பொன், மெய், சொல், தெவ், முள் என நிறுத்தி அழகிதென உயிர் முதலாகிய சொற்களை வருவித்துக் 'குற்றொற்றிரட்டு முயிர்வந்தால்' என்பதனான் ஒற்றைபிரட்டித்துச் 'செம்மையுயிரேறுஞ் செறிந்து' என்பதனான் மெய்யொடுயிரைக் கூட்டி மண்ணழகிது, கம்மழ கிது, பொன்னழகிது, மெய்யழகிது, சொல்லழகிது, தெவ்வழகிது, முள் ளழகிது என முடிக்க. பிறவுமன்ன. வேய், உகாய், கதிர், சேர், பாழ், யாழ் என நிறுத்தி வல்லெழுத்து முதலாகிய சொற்களை வருவித்து வேய்த்தோள், உகாய்ப்பழம், கதிர்ச்செந்நெல், சேர்ம்பழம், பாழ்ங்குடில், யாழ்க்கோடு என முடிக்க. என்னை? "ய ர ழ வென்னு மூன்று மொற் றக், கசதப, ஙஞநம வீரொற் றாகும்." (தொல், எழு, மொழி, கரு) எனபவாகலின்.

'பெயர்த்து' என்று மிகுத்துச் சொல்லியவதனான் வினைச்சொல் வந்தவிடத்து யரழவொற்றுக்கள் இயல்பாய் முடியும். அவை வரு மாறு:—செய்காத்தான் நீர்கொண்டான் என வரும்.

'பெயர்த்து' என்று மிகுத்துச் சொல்லியவதனாற் போலும், மருளும் என்னும் இருமொழிகளினும் லகர ளகரங்களினேறி நின்ற உகரவுயிர் கெட்டு இறுதியினின்ற மகரவொற்றானே, லகர ளகரங்கள் னகர ணகரங்களாய்ப் போன்ம், மருண்ம் என ஈரொற்றாய் நிற்கும்; இவ்விடம் மகரக்குறுக்கமென அறிக. "ணனவின்முன்னர் மகரங்குறுகும்" என்பவாகலின்.

'பின்' என்ற மிகையான் யரழக்கள் வல்லெழுத்து வாராதே மெல்லெழுத்து வந்து ஈரொற்றாவனவுமுள; அவை மெய்ம்மொழி, பொய்ம்மதி, செய்ங்நீண்டது எனவாம்.

இயல்பு சந்தியாவன:—குவளை, தவளை என நிறுத்தி மலர், வாய் என வருவித்துக் குவளைமலர், தவளைவாய் என முடிக்க. (கரு)

கசு வாய்ந்த வுயிர்ப்பின் வருமெழுத்தின் வர்க்கத்தொற்
றேய்ந்து புகுத மியல்புமா—மாய்ந்த
விறுதி வருமெழுத்தா மீறரா மோரோர்
மறுவில்பதங் கெட்டு வரும்.

எ-ன். இதுவுஞ் சில உயிரீற்றுச் சந்திகளும் ஒற்றீற்றுச் சந்திகளும் முடியுமாறுணர்த்து தனுதலிற்று.

இ-ள். உயிரீற்று நிலைமொழியின்பின் யாதானும் ஒரு சொல் வருமாயின் வந்த வெழுத்தின் ஒற்றாதல், வர்க்கத்தொற்றால் மிக்கு முடிவனவும் இயல்பாய் நின்று முடிவனவுமுள; நிலைமொழி யீற்றினின்ற னகரவொற்று வருமொழிமுதல் வந்த எழுத்தின் ஒற்றாய்த்திரியும்; மகரமாய்த் திரிதலுமுண்டு; நிலைமொழி பிறுதியி னின்ற அன் ஆர் ஆகத்திரிதலுமுண்டு. நிலைமொழி யீற்றி னின்ற சொற்கள் கெட்டு முடிவனவுமுள. எ-று.

வ-று. பலா, மா, சுறு, விளா, படை, ஆ, பூ, பை, வை, கை என நிறுத்தி, ஏற்றசொற்களை வருவித்துப் பலாக்காய், மாங்காய், சுறுத்தலை, விளாம்பழம், படைத்தொழில், ஆந்தளிர், பூம்பொழில், பைங்நாகம், வைந்நுதி, கைம்மணி என வரும்; அம்மணி, அவ்விரல், அஞ்ஞாலம் இவை சுட்டின்முன் மிக்கவை. பிறவுமன்ன.

'இயல்புமாம்' என்பதனுன் ஆகொண்டார், மாகொண்டார், நகை மதி, வைவேல் என்பன இயல்பாய் முடிந்தன.

'வாய்ந்த வுயிர்' என்ற மிகையான் இவ்விரண்டு முடிவும் பெற்று முடிவனவுமுள. அவை கிளிகடிந்தார், கிளிக்கடிந்தார்; பனைபிளந்தார், பனைப்பிளந்தார் என வரும். பிறவுமன்ன.

சாலியன், கோலிகன், தேன் என நிறுத்தி ஏற்ற சொற்களை வருவித்துச் சாலியத்தறி, கோலிகத்தறி, தேத்தடம் என இறுதினகரவொற்று வருமெழுத்தா மென்பதனுன் முடிக்க.

முக்குடை, முச்சந்தி, முத்தொகை, முப்புவனம் என்பன வெல்லாம் செய்கை செய்து நிறுத்தி முடிக்க. செய்கையாவது:—மூன்று என நிறுத்திக் குடையென வருவித்து 'ஆங்குயிர்மெய் போம்' என்பதனுன் றகரஉயிர் மெய்யையழித்துத் 'திருந்தும் விகாரங்க டோர்ந்தாறு மூன்றும், பொருந்து மிடங் கண்டு புகல்' என்பதனுன் மூன்றென் பதனைக் 'குறுக்கும் வழிக்குறுக்கல்' என்னும் விகாரத்தான் முன் என நிறுத்தி 'இறுதிவருமெழுத்தாம்' என்பதனுன் னகரத்தை வருமெழுத்தின் ஒற்ருய்த்திரித்து முக்குடை எனக்காண்டலாம். ஈறராமென் பதனுற் சாலியன், கோலிகன் என நிறுத்திச் சாலியர்குளம், கோலிகர் குளம் என முடிக்க. இது னகரம் ரகரமாய்த் திரிந்தது.

இனி 'ஓரோர்மருவில் பதங்கெட்டுவரும்' என்பதனுற் சோழன் என நிறுத்தி நாடெனவருவித்து அன்னென்னும் பதத்தைக் கெடுத்துச் சோழநாடு என முடிக்க. பாண்டியன் என நிறுத்தி நாடென வருவித்து அன்னென்னும் பதத்தைக் கெடுத்து 'ஒற்றுப்போம்' என்பதனுன் யகரவொற்றை யழித்துப் பாண்டிநாடென முடிக்க. பல்லவத்தின் சந்தமென்புழிப் பல்லவமென நிறுத்திச் சந்தமென வருவித்து அத்தும் இன்னும் என்னும் இரண்டிடைச் சொற்களை நிறுத்தி நிலைமொழி யீற்றி னின்ற அம்மென்னும் பதத்தைக் கெடுத்து 'முன்னொற் றுண்டேற் செம்மை யுயிரேறுஞ் செறிந்து' என்பதனுன் வகர ஒற்றின்மேல் அகர உயிரை யேற்றிப்பல்லவத்தின் சந்தமென முடிக்க. (கசு)

கஎ வன்மை வரினே ளணலன மாண்டறவா
மென்மை வரினே ளலணனவாம்—தந்நக்கண்
முன்பின்னுந் தப்பி னணவியல்பாத் தட்டறவா
மொன்றழிந்து போதலு முண்டு.

எ-ன். ளணலனமெய்கள் முடியுமாறுணர்த்து தனுதலிற்று.

இ-ள். நிலைமொழி யிறுதியி னின்ற ளகார ணகார லகார னகாரங்கள் இயல்பாய்நிற்க, வருமொழிக்கு முதலாக வல்லெழுத்து வந்தால் ளகார ணகாரங்கள் டகாரமாம்; லகார னகாரங்கள் றகாரமாம். நிலைமொழி யிறுதியி னின்ற ளகார லகாரங்கள், வருமொழிக்கு முதலாக மெல்லெழுத்து வந்தால் ளகாரம் ணகாரமாம்; லகாரம் னகாரமாம். இவை நிரனிறை யெனக் கொள்க. தந்நக்கள் முன் பின்னு மென்பது டகாரங்களின் பின்வந்த தகாரமும் டகாரமாம்; றகாரங்களின் பின்வந்த தகாரமும் றகாரமாம். ணகாரங்களின பின்வந்த நகாரமும் ணகாரமாம்; னகாரங்களின் பின்வந்த நகாரமும் னகாரமாம். 'தப்பினணவியல்பாத் தட்டறவாம்' என்பது நிலைமொழி யிறுதியி னின்ற ணகார னகாரங்கள் இயல்பாய்நிற்க வருமொழிக்கு முதலாகத் தகாரம் வந்தால் ணகாரத்தின் பின்வந்த தகாரமும் டகாரமாம்; னகாரத்தின் பின்வந்த தகாரமும் றகாரமாம்.

'ஒன்றழிந்து போதல்' என்பது, நிலைமொழி யீற்றி னின்ற ளகார லகாரம் இயல்பாய் நிற்க வருமொழிக்கு முதலாக வல்லெழுத்து வந்தால் நிலைமொழி யீற்றி னின்ற ளகார லகாரம் அழிந்து முடியவும் பெறும். எ-று.

வ-று. முள், மண், கல், பொன் என நிறுத்தி ஏற்ற சொற்களை வருவித்து இவ்விலக்கணத்தான் முட்கூரிது, மட்கலம், கற்பெரிது, பொற்பூண் என முடிக்க 'மென்மை வரினே ள ல ண ன வாம்' என்பது முள், சொல் என நிறுத்தி மெல்லெழுத்து வருவித்து முண்முரிந்தது சொன்முரண் என முடிக்க 'தந்நக்கள் முன் பின்னும்' என்பது வல்லெழுத்தாகிய தகாரமும் மெல்லெழுத்தாகிய நகாரமும் வருமொழிக்கு முதலாகவரின் டகார றகாரங்களின் பின்வந்த தகாரத்தை யழித்து டகார றகாரமாக்கி முட்டாமரை, கற்றாமரை எனவும் னகார

ணகாரங்களின் பின்வந்த நகாரத்தை னகார ணகாரமாக்கி வின்னன்று, பொன்னன்று, விண்ணீண்டது, கண்ணொந்தான் எனவும் முடிக்க. இனித் 'தப்பினணவியல் பாத்தட்டறவாம்' என்பது மண், பொன் என நிறுத்தித் தண்ணிதெனத் தகர முதலாகிய சொற்களை வருவித்து மண்டண்ணிது, பொன்றண்ணிது என முடிக்க. இனி 'ஒன்றழிந்து போதலுமுண்டு' என்பதனான் வாள், வேல் என நிறுத்தி வருமொழியினின்ற தகாரத்தை டகார றகாரமாக்கி இவ்விலக்கணத்தால் நிலைமொழி ஒற்றையழித்து வாடோய்ந்தது, வேறோய்ந்தது என முடிக்க.

'ஒன்றழிந்து போதலுமுண்டு' என்ற உம்மையால் அழியாமையுமுண்டு; அது வாட்டடங்கண், கோற்றொடி என வரும். தொடர்மொழிப் பின்னும் நெடிற்பின்னும் வந்தால் ஒன்றழிகை னகாரத்துக்கும் ணகாரத்துக்கும் ஒக்குமெனவறிக. வரலாறு:—தூணன்று, அரணன்று, சாணன்று, மானன்று, வானன்று, அகனன்று என வரும்.

உண்டென்ற மிகையால் தனிக் குற்றெழுத்தின் கீழ் ளகார லகாரங்கள் நிற்க ஒன்றழியில், இடையே ஆய்தமும் புகுந்து முடியும்; அவை ஆய்தகுறுக்கமென உணர்க. வரலாறு:—முள், கல் என நிறுத்தித் தீதென வருவித்து முஃடீது, கஃறீது எனவும், அல், பல் என நிறுத்தித் திணை, தொடை என வருவித்து அஃறிணை, பஃறொடை எனவும் முடிக்க. பிறவுமன்ன. (கஎ)

கஅ மகரந்தான் வன்மைவரின் வர்க்கத்தொற் றுரும்
புகரிலா மென்மைவரிற் பொன்று—நிகரில்
வகரம்வந் தாற்குறுகும் வவ்வழிந்து மவ்வா
மகரந் தவயவாம் வந்து.

எ-ன். மகரவீற்று நிலைமொழி முடிபு பெறுமாறுணர்த்துதனுதலிற்று.

நிலைமொழியீற்றினின்ற மகரம் வருமொழிக்கு முதலாக வல்லெழுத்து வந்தால் வந்த வல்லெழுத்தின் வர்க்கத்தொற்றாய்த் திரியும்; மெல்லெழுத்து வந்தால் மகரம் அழிந்து முடியும்; நிலைமொழியீற்றினின்ற மகரம் வருமொழிக்கு முதலாக வகரம் வரின் மகரந் தான்மாத்

திரையாய்க் குறுகும்; நிலைமொழி யிறுதியி னின்ற வகரந் திரிந்து மகரமாகவும் பெறும்; பண்பான சொற்களின் பின்னின்ற மகரந் திரிந்து தகர, வகர, யகரமாகவும் பெறும். எ-று.

வ-று. மரமென நிறுத்திக் கலம், குறிது, சிறிது, செதிள், தூண், தடிந்தார், பாவை என வல்லெழுத்து முதலான சொற்களை வருவித்து, மரக்கலம், மரங்குறிது, மரஞ்சிறிது, மரச்செதிள், மரத்தூண், மரந் தடிந்தார், மரப்பாவை யென முடிக்க. மரமென நிறுத்தி ஞான்றது, நீண்டது, மாண்டது என வருவித்து மகாரத்தை யழித்து, மரஞான் றது, மரநீண்டது, மரமாண்டது என முடிக்க. காலம் என நிறுத்தி வந்ததென வருவித்துக் காலம் வந்ததென முடிக்க. இவ்விடத்தில் மகரங் கான் மாத்திரையாய்க் குறுகிற்று. ஞாலம் விளங்கிற்றென்பதும் அது. தெவ் என நிறுத்தி முனையென வருவித்து இவ்விலக்கணத்தால் தெம்முனை யென முடிக்க.

மகரத்தினது திரிபு உணர்த்திய எடுத்துக்கொண்டு வகரத் திரிபு காட்டிய தென்னையோ வெனின்:—மகரத்தைவிட்டு மற்றொரு முடிபு சொல்லிற்றில்லை. மகரத்தையே சொல்லுதலாற் பெறும்; என்னை? 'ஒப்பின் முடித்தல' என்பது தந்திரவுத்தியாதலால் என்பது.

இனிச் செம்மை யென நிறுத்தி ஆம்பலென்பது வருவித்து 'ஆங் குயிர் மெய்போம்' என்பதனுல் மகர ஐகாரத்தை யழித்து 'மகரந் தவய வாம்' என்பதனுல் மகரவொற்றைத் தகரமாக்கி முதலுயிரை நீட்டிச் 'செம்மை யுயிரேறுஞ் செறிந்து' என்பதனுல் தகரவொற்றிலே உயிரை யேற்றிச் சேதாம்பல் என முடிக்க. செம்மை என நிறுத்தி அலரி, ஆடையென வருவித்து மகர ஐகாரத்தை யழித்து முன்னின்ற மகர வொற்றை வகரமாக்கிக் 'குற்றொற் றிரட்டும்' என்பதனுல் வகர வொற்றை யிரட்டித்து 'ஒற்றுண்டேற் செம்மை யுயிரேறுஞ் செறிந்து' என்பதனுல் வகர வொற்றில் உயிரை யேற்றிச் செவ்வலரி, செவ்வாடை என முடிக்க. ஐம்மையென நிறுத்தி அரியென வருவித்து மகர ஐகாரத்தை யழித்து மகர வொற்றை யகரமாக்கி 'முன்னொற் றுண்டேற் செம்மை யுயிரேறுஞ் செறிந்து' என்பதனுல் ஐயரியென முடிக்க.

பண்பீற்று நிலைமொழியில் மகரம், தகர, வகர, யகரமாவது வரு மொழிக்கு முதலாக உயிர்வரினென அறிக. பிறவுமன்ன.

'நிகரில் வகரம் வந்தால்' என்று மிகுத்துச் சொல்லியவதனால் வகரத்தைக்கண்டு மகரங் கெடுமிடமும் உள. அவை மரவேர், சுரவழி என அறிக. (கஅ)

கக உரிவரி னாழியி னீற்றுயிர்மெய் யைந்தாம்
வருமுயிரோன் றென்பான் மயங்குந்—தெரியத்
திரிந்தும் விகாரங்க டேர்ந்தாறு மூன்றும்
பொருந்துமிடங் கண்டு புகல்.

எ-ன். இதுவுஞ்சில உயிரீற்றளவுப் பெயர் முடிபு பெறுமாறும், விகாரங்களாமாறும் உணர்த்துதனுதலிற்று.

இ-ள். நாழியென்னுஞ் சொல்லின்பின் உரியென்னுஞ் சொல் வந்தால் நிலைமொழி யிறுதியி னின்ற ழுகர விகரம் அழிந்து டகரமாய் உகர மேறி முடியவும் பெறும்; சில சந்திகள் அகர நின்றனவுந் திரிந்து ஐகாரமாம்; ஐகார நின்றனவுந் திரிந்து அகரமாம். அறுவகைப்பட்ட விகாரமும் மூன்று வகைப்பட்ட விகாரமும் வந்தால் விகாரப்படுமிட மறிந்து முடிக்க. எ-று.

வ-று. நாழியென நிறுத்தி உரியென வருவித்து நிலைமொழி யீற்றி னின்ற ழுகர இகரத்தை யழித்து ழுகரத்தை டகரமாக்கி உகரத்தை யேற்றி நாடுரி, இரு நாடுரி யென முடிக்க. பசுமை யென நிறுத்திக் கிளி, சுனை, தளிர், பொழில் என வல்லெழுத்து முதலான சொற்களை வருவித்து 'ஓரோர் மறுவில் பதங்கெட்டு வரும்' என்பதனாற் சுமை யென்னும் பதத்தைக் கெடுத்து, பகரவொற்றில் அகரத்தைப் பிரித்து ஐகாரமாக்கி 'வாய்ந்த வுயிர்ப்பின் வருமெழுத்தின் வர்க்கத் தொற் றேய்ந்து புகுதுமியல்புமாம்' என்பதனால் வர்க்கத்தொற்றை மிகுத்துப் பைங்கிளி, பைஞ்சுனை, பைந்தளிர், பைம்பொழில் என முடிக்க. பசுங்கிளி யென்ற பொழுது நிலைமொழி யிறுதியி னின்ற உயிர் மெய் யைக் கெடுத்து, இவ்விடத்து 'வாய்ந்த வுயிர்ப்பின் வருமெழுத்தின் வர்க்கத் தொற்றேய்ந்து புகுதுமியல்புமாம்' என்பதனால் ஙகரவொற்றை மிகுத்து முடிக்க. இனிப் பாசிழை யென்னும் பொழுது * உமையென்

* "பச்சை என நிறுத்தி இழை என வருவித்து நிலைமொழியீற்றிற் 'சை' என்னும் பதத்தைக்கெடுத்து" எனவும் பிரதிகளிற் காணப்படுகின்றது.

னும் பதத்தைக் கெடுத்து 'நீட்டும்வழி நீட்டல்' என்னும் விகாரத்தாற் பகரத்தில் அகரத்தைப் பிரித்து நெட்டெழுத்தாக்கிச் சகர வொற்றிலே உயிரை யேற்றிப் பாசிழை யென முடிக்க. பனை, ஆவிரை, கூவிளை, வழுதுணை யென நிறுத்தி, வல்லெழுத்து முதலான சொற்களை வருவித்து ஐகாரத்தைப் பிரித்து அகரமாக்கி, 'வர்க்கத் தொற்றேய்ந்து புகுதும்' என்பதனால் பொருந்திய வொற்றை மிகுத்துப் பனங்காய், பனஞ்சோறு, ஆவிரப்பூ, கூவிளந்தளிர், வழுதுணங்காய் என முடிக்க.

'வருமுயிர்' என்று மிகுத்துச் சொல்லியவதனால் ஐகாரம் அகாரமாம் பொழுது, வல்லெழுத்து வந்தாலன்றி யாகாது. ஒழிந்த மெல்லினமும், இடையினமும், உயிரும் வந்தால் இயல்பேயாம். அவை வருமாறு:—முறி, வேர், இலை யென்பன வந்தாற் பனைமுறி, கூவிளை வேர், கூவிளையிலை யென முடிக்க.

இன்னும் அவ்விதப்பினான் வினைச்சொல் வந்தாலும் ஐகாரம் திரியாது நிற்கும்; பனைகுறிது, ஆவிரைசிறிது, கூவிளைசிறிது என முடிக்க.

இனி விகாரங்கள் ஆறு மூன்றுமாவன:— "அந்நாற் சொல்லுந் தொடுக்குங் காலை, வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும், விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழித் தொகுத்தலும், நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும், நாட்டல்வலிய வென்மனார் புலவர்" (தொல், சொல், எச், எ.) "குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி யறிதல்" (ஷை, நஎ.) "குறைத்தன வாயினு நிறைப்பெய ரியல" (ஷை, நஅ.) என்பன விரித்துக்கொள்க. அவை வருமாறு:— குன்றியலுகரமென்பது மெலிக்கும் வழிமெலித்தல்; குறுந்தாட் பூதமென்பது வலிக்கும்வழி வலித்தல்; தண்ணந் துறைவனென்பது விரிக்கும்வழி விரித்தல்; 'நீலுண்டு கிலிகை' யென்பது தொகுக்கும்வழித் தொகுத்தல், பாசிழை யென்பது நீட்டும்வழி நீட்டல்; 'திருத்தார் நன்றென்றேன் றியேன்' என்பது குறுக்கும்வழிக் குறுக்கல்; மரையிதழ் என்பது தலைக்குறைத்தல்; 'வேதிந வெரிநி ஞேதிமுது போத்து' என்பது இடைக் குறைத்தல்; ஆலென்பது கடைக் குறைத்தல்; இதை ஏற்புழிக் கோடல் என்பதனால் அறிந்து கொள்க. (கக)

உ0 நின்றமுதற் குற்றுயிர்தா னீளுமுத னெட்டுயிர்தான்
குன்று முயிருயிர்மெய் கூடுமே—லொன்றியவெண்
பத்தினிடை யாய்தமுமாம் பஃநீண்டு நீளாது
மற்றவைபோ யீறு வரும்.

எ-ன். சில எண்மொழிகள் முடிபுபெறுமாறு உணர்த்துதனுத விற்று.

இ-ள். நிலைமொழியின் முதனின்றவுயிர் குற்றுயிராயின், வருமொழிக்கு முதலாக உயிர் வந்தால் முன்னின்ற குற்றுயிர் நெட்டுயிராம்; முதனின்ற உயிர் நெட்டுயிராயின், வருமொழிக்கு முதல் உயிர்மெய் வந்தால் முன்னின்ற நெட்டுயிர் குற்றுயிராம். பத்தென்பது வருமொழியாயின் அதனிடையி னின்ற வொற்று ஆய்தம் ஆகவும் பெறும்; உம்மைமையால் ஆய்தமாகாது ஏய்ந்த வொற்றுக் கெட்டு முடியவும் பெறும். இன்னும் பத்தென்பது வருமொழியாயும் நிலைமொழியாயும் வரில் அம்முறையே பகரத்தில் அகர நீண்டும் நீளாதேயும் இடையும் இறுதியுங் கெட்டு ஈற்றெற்றாகிய னகரமிகு மெனவறிக. எ-று.

எண்ணென்பது மத்திம தீபம். என்னை? "புனையுறு செய்யுட் பொருளை யொருவழி, வினைநின்று விளக்கினது விளக்கெனப் படுமே" "முதலிடை கடையென மூவகை யாயின" என்பது அணியியலாகலின்.

வ-று. இரண்டு என நிறுத்தி ஒன்று என வருவித்து அண்டென்னும் பதத்தைக் கெடுத்து ரகர வொற்றிலே உயிரை யேற்றி முதலுயிரை நீட்டி ஈரொன்று, ஈராயிரமென முடிக்க. ஆறு என நிறுத்தி மூன்று நான்கு என வருவித்து முதலுயிரைக் குறுக்கி அறுமூன்று அறுநான்கு என முடிக்க. அறுபது என்பதுமது. இவை நீளுவதுங் குறுகுவதும், ஐந்தும் எட்டும் ஒன்பதும் ஒழியவெனக் கொள்க. ஏழு என நிறுத்திப் பத்தென வருவித்தால் எழுபஃது என்றுமாம்; ஒருபஃது, முப்பஃது என்பனவுமது. ஆய்தமாகாது அவ்வொற்றுக் கெட்டு எழுபது என இயல்பாய் நிற்கவும் பெறும். அது பெறுமாறென்னையோ வெனின்:—ஆய்தமுமா மென்றதனால் ஆகாமையும் பெறப் பட்டது. பத்து என நிறுத்திப் பத்தென வருவித்து, இன்சாரியை கொடுத்துப் பதின்பத்தென முடிக்க. பதிற்றுப் பத்தென்பதுமது.

இவையும் ஞாபகத்தாலே பெற்றன. ஆறு என நிறுத்திப் பத்தென வருவித்தால் பஃநீண்டு இடையுமிறுதியுங் கெட்டு னகர மிகுந்து அறுபான் என்றாகும். பத்தென நிறுத்தி இரண்டென வருவித்தாற் பஃநீளாது இடையுமிறுதியுங் கெட்டு னகர மிகுந்து பன்னிரண்டென முடியவும் பெறும். மற்றென்ற மிகையாற் பத்தென நிறுத்தி மூன்றென வருவித்தால் இன்சாரியை பெற்று பதின்மூன்றெனவும், பன்மூன்றெனவும் முடிந்தவாறு கண்டுகொள்க. இவையும் பத்தென்று நின்ற எண் முடிவு பெற்றவாறு. (உ0)

உக ஒன்பா னொடுபத்து நூறதனை யோதுங்கான்
முன்பாந் தகரணள முன்பிரட்டும்—பின்பான
வெல்லாங்கெட் டாறிரண் டாவியின்பின் வல்லுகர
நல்லா யிரமீறாய் நாட்டு.

எ-ன். இதுவுஞ் சிலவெண் முடிபுபெறுமாறு உணர்த்துதனுதலிற்று.

இ-ள். தொண்ணூறு, தொள்ளாயிரம் என்னும் எண்ணைச் சொல்லுமிடத்து ஒன்பானுடன் பத்தும் நூறும் புணருங்கால் ஒன்பானென்னும் எண்ணின் முதனின்ற ஒகரந் தகர ஒகரமாம்; இடை நின்ற னகரவொற்று ணகர ளகரமாய் இரட்டும்; பின் முன்னின்ற எழுத்தெல்லாங் கெட்டு ஊகாரமும் ஆகாரமும் பெற்று, றகர வுகாரமும் இரமும் ஈறாய் முடியும். எ-று.

வ-று. ஒன்பான் என நிறுத்தி, பத்து என வருவித்து ஒகரத்தைத் தகர ஒகரமாகத் தொவ்வென நிறுத்தி, இடை நின்ற னகர வொற்றை ணகர ஒற்றாய் இரட்டித்துப், பின்னின்ற பான் பத்து என்னும் பதத்தைக் கெடுத்து ணகர வொற்றிலே ஊகார வுயிரை ஏற்றி றகர உகாரத்தை ஈற்றிலே வருவித்துத் தொண்ணூறு என முடிக்க. தொள்ளாயிரம் என்னும் பொழுது ஒன்பான் என நிறுத்தி நூறு என வருவித்து, முன்போலத் தகர ஒகாரத்தை நிறுத்தி னகர ஒற்றை ளகர ஒற்றாயிரட்டித்து பான் நூறு என்னும் பதத்தைக் கெடுத்து ஆகார வுயிரை யேற்றி இரமென்னும் பதத்தை வருவித்து 'தோன்றும் யகர வகரம்' என்பதனால் யகர உடம்படு மெய்யை வருவித்துச் 'செம்மை யுயிரேறுஞ் செறிந்து' என்பதனால் இகரத்தை ஏற்றித் தொள்ளாயிரம் என முடிக்க. (உக)

உஉ மேய விருசொற் பொருடோன்ற வேறிருத்தி
யாய விடைச்சொ லடைவித்தாற்—றூயசீ
ராவிபோ மொற்றுப்போ மாங்குயிர்மெய் போமன்றி
மேவியசுட் டாங்கே மிகும்.

எ-ன். சொற்கள் பகுதி விகுதி செய்யுமாறும், சாரியைச் சொற்கள் முடியுமாறும் உணர்த்துதனுதலிற்று.

இ-ள். பொருந்தி யிருந்தன இரண்டு சொல்லை முடித்துக் காட்டுகவென்றால், அச்சொற்க ளிரண்டையும் பொருடோன்ற வேறே யிருத்தி அவ்விடத்துக் கேற்ற இடைச் சொற்களை வருவித்து முடிக்குமிடத்து, உயிரழிந்து முடிவனவும், மெய்யழிந்து முடிவனவும், உயிர் மெய்யழிந்து முடிவனவும், சுட்டுமிக்கு முடிவனவுமுள. சுட்டாவன:—அ இ உ என்பன. இவை வேண்டுமிடங்களிலே தோன்றி முடியவும் பெறும். எ-று.

அவற்றுட்சில வருமாறு:—வேணவா என்பதனைப் பிரிக்குமிடத்து, வேட்கை யென நிறுத்தி அவாவென வருவித்து முடிக்க, மூவாறென்புழி, மூன்றென நிறுத்தி ஆறென வருவிக்க. வெள்ளாடை யென்றால் வெண்மை யென நிறுத்தி ஆடை யென வருவிக்க. சேயிழை என்றால் செம்மை யென நிறுத்தி இழை யென வருவிக்க. இவை, இவ்வகை நிறுத்திப் படும்பகுதி அறிந்து முடிக்க.

அன்றியும், வேண் என நிறுத்தி அவாவெனவு மாகாது; மூவென நிறுத்தி ஆறெனவு மாகாது; வெள் என நிறுத்தி ஆடையெனவு மாகாது; சேய் என நிறுத்தி இழையெனவு மாகாது. என்னை? "இரு பொரு ளியைதலி னப்பொருள் படுமொழி, யிதுவென வேறுவைத் திசைத்தல் வேண்டும்' என்றாராகலின். இடைச்சொல் வருமாறு:— "அவைதாம் இன்னேவற்றே யத்தே யம்மே, ஒன்னே யானே யக்கே யிக்கே, யன்னென் கிளவி யுளப் படப் பிறவு, மன்ன வென்ப சாரியை மொழியே" (தொல், எழு, புண, கஎ.) எனக்காண்க.

அவை சில வருமாறு:— பதினெண்கண மென்பது இன்சாரியை வந்தது. பலவற்றுக் கோடென்பது வற்றுச்சாரியை வந்தது. வெயிலத்துச் சென்றாரென்பது அத்துச்சாரியை வந்தது. புளியங்காய் என்பது அம்முச்சாரியை வந்தது. ஆறன்மருங்கென்பது அன்சாரியை

வந்தது. தாழக்கோல் என்பது அக்குச்சாரியை வந்தது. கழச்சிக் கோல் என்பது இக்குச்சாரியை வந்தது. பதிற்றுப்பத்தென்பது இற்றுச்சாரியை வந்தது. கலனே தூணிப்பதக்கென்பது ஏயென்னுஞ் சாரியை வந்தது. பிறவுமன்ன.

'தோழியுங்கலுழ்மே' என்புழிக்கலுழுமே யென்ற ழகரத்தில் உகரவுயிர் கெட்டு முடிந்தது. பிலத்துவாய் என்பது பிலவாய் என ஒற்றுமுயிர் மெய்யுங்கெட்டு முடிந்தது. யாம் போகும் புழையென்பது போம் புழை யென்று உயிர்மெய் கெட்டது. அரியும் வாளென்பது அரிவாளென உயிர் மெய்யும் ஒற்றுங்கெட்டது. * (உஉ)

உரு உற்றவா கார மகரமா யோங்குகரம்
பெற்றிடுநீ யாமாவின் பின்னிறுதி—யொற்றணையுஞ்
சாவவக மென்புழிச் சார்ந்த விறுதியிடைப்
போவதுயிர் மெய்யென்றே போற்று.

எ-ன். ஒருசார் உயிரீறும் மெய்யீறும் முடியுமாறு உணர்த்துதனுதலிற்று.

இ-ள். ஆகார உயிரீறாய் நின்ற சொற்கள், அகரவீறாய்ப் பின்னே ஒரு உகரம் வந்து வகர உடம்படுமெய் மிக்குமுடியும். நீ, ஆ, மா என்னுஞ் சொற்கள் இறுதியிலே னகரவொற்றுப் பெற்றுமுடியும். சாவ, அகம் என நின்ற சொற்களின்பின் ஏற்ற சொல் வந்தால் சாவ வென்பதனிறுதியி னின்ற வகர உயிர் மெய்யும், அகமென்னுஞ் சொல்லிடையினின்ற ககர உயிர் மெய்யும் அழிந்து முடியும். எ-று.

வ-று. இரா, நிலா, சுறா, புறா என்னுஞ் சொற்களின் இறுதியினின்ற ஆகாரத்தை அகரமாக்கிப் பின்னே உகரத்தை மிகுத்து 'அல்லாதவான்ற வுயிர்ப்பின்னு மாவிவரில் வகரந்தோன்றும்' என்பதனால் வகரவொற்றை மிகுத்து உகரத்தை யேற்றி 'இரவு மனை யிறந்த' எனவும், 'நிலவுக்கு வித்த' எனவும், 'சுறவுத்தலை யேய்க்கும்' எனவும், 'புறவுத்துயர்' எனவும் வரும். பிறவுமன்ன. இனி நீ யென்பது குறுகி நின்கை, நின்செவி, நின்புறம், நின்வாய் என்றாயிற்று. "நீயென் றொரு

* சுட்டுமிக்கு முடிவனவற்றிற் குதாரணங் காட்டவில்லை.

பெயர் நெடுமுதல் குறுகு, மாவயி னகர மொற்று கும்மே" (தொல், எழு, உரு, எ.) என்றாராகலின். ஆ வென நிறுத்திக் கோடு, செவி, தலை, புறம் என வருவித்து ஆன்கோடு, ஆன்செவி, ஆன்றலை, ஆன்புறம் என முடிக்க. மாவென நிறுத்திக் கோடு, செவி, தோல், புறம் என வருவித்து மான்கோடு, மான்செவி, மான்றோல், மான்புறம் என முடிக்க.

'உற்ற' வென்று மிகுத்துச் சொல்லியவதனால் ஆவென்றும் மாவென்றும் வருஞ் சொற்களின இயங்குதிணையைப்பற்றிச் சொன்னார்; நிலைத்திணையல்ல என்க. நிலைத்திணையாயின் ஆங்கோடு, மாங்கோடு என்றல்ல தாராது. "வெறிகமழ் தண்சிலம்பின் வேட்டமே யன்றிப், பிறிதுங் குறையுடையான் போலுஞ்—செறிதொடீஇ, தேமா னிதணத்தேம் யாமாக நம்புனத்து, வாமான்பின் வந்த மகன்" இதனுள், தேமான் இதணத்தேம் என்று நிலைத்திணையிலே னகரத்தை மிகுத்த விடத்து மாபுவழு வாயிற் றென்றறிக. என்னை? "முன்னிலை நெடிலு, மாவு, மின்மிகப் புணருமியங்குதிணை யான" என்றாராகலின்.

சாவ, அகம் என்புழி ஏற்றசொல் வந்து வகரமுங் ககரமுங் கெட்டுச் சாக்குத்தினான், அங்கை யென்றாயின. (உரு)

உச ஐந்தாறு மாறு பதினாறு மொற்றுமிகும்
வந்துறழு மன்ன வயனலக்கள்—சந்திகளி
னல்லா தனவு மடக்குவாய் கண்டடக்க
வெல்லா முடியு மினிது.

எ-ன். இதுவுஞ்சில ஒற்றுச்சந்திகள் முடியுமாறு உணர்த்துதனுதலிற்று.

இ-ள். ஐந்தா முடலாகிய டகாரம் ஆறு முடலாகிய ணகாரமாம்; ஆறு முடலாகிய ணகாரம் பதினாறு முடலாகிய ளகாரமாம்; ஒற்று மிகுமென்பது எச்சவும்மை யாதலால் ஒற்றும் மிகும், உயிரும் மிகும், உயிர் மெய்யும் மிகும், மகரமும் னகரமும் தம்மிலொன்றாய் மயங்கவும் பெறும், வகரமும் யகரமும் தம்மிலொன்றாய் மயங்கவும் பெறும், ளகாரமும் லகாரமும் தம்மிலொன்றாய் மயங்கவும் பெறும், அடக்கும் வாயறிந் தடக்கி முடிக்க; முடியாதனவில்லை. எ-று.

வ-று. வேட்கையென நிறுத்தி அவாவென வருவித்து 'ஆங்குயிர் மெய்போம்' என்பதனால் ககர ஐகாரத்தை யழித்து டகாரத்தை ணகார மாக்கி உயிரை யேற்றி வேணவா என முடிக்க. வெண்மையென நிறுத்தி அலரியென வருவித்து மகர ஐகாரத்தை யழித்து ணகாரத்தை ளகார மாக்கிக் 'குற்றொற்றிரட்டு முயிர் வந்தால்' என்பதனால் ஒற்றை யிரட்டித்து உயிரை யேற்றி வெள்ளலரியென முடிக்க. வெள்ளோலை யென் பதுமது. மூன்றென நிறுத்திக் காதமென வருவித்துத் தகாத்துக்கு முன்னே வகர வுயிர் மெய்யை மிகுத்து மூன்று காவத மென முடிக்க. 'வந்துறமு மன்ன வயனலக்கள்' என்பதனன், தொல்காப்பியனென நிறுத்தி இவனாற் செய்யப்பட்டது யாதெனக் கருதின பொழுது தொல் காப்பியம் என முடிக்க. அவிநய மென்பதுமது. கலம் கலன், புலம் புலன், நிலம் நிலன் இவை னகரமு மகரமும் மயங்கின. கோயில் கோவில் இவை யகரமும் வகரமும் மயங்கின. மென்மையென நிறுத்தி இயலென வருவித்து மகர ஐகாரத்தை அழித்து னகரத்தை லகரமாக்கி 'குற்றொற் றிரட்டு முயிர் வந்தால்' என்பதனால் ஒற்றை இரட்டித்து இகரத்தை யேற்றி மெல்லியலென முடிக்க.

'எல்லா முடியும்' என்பதனால் முன்னென நிறுத்தி இல்லென வருவித்து நடுவு றகர வொற்றை மிகுத்து முன்றிலென முடிக்க. பொன்னந்தார் பொலந்தார் என்பதும், நலங்கிள்ளி யென்பதும் அது. பிறவுமன்ன. (௨௪)

எழுத்ததிகாரம்

முற்றும்.

சொல்லதிகாரம்.

மொழியாக்க மரபு.

பாயிரம்.

தாதார் மலர்ப்பிண்டித் தத்துவனை வந்தித்துப்
போதார் நறுந்தெரியற் போர்வேற்கட்—பேதாய்
விரித்துரைத்த நூல்களினும் வேண்டுவன கொண்டு
தெரித்துரைப்பன் சொல்லின் றிறம்.

என்பது சூத்திரம். இவ்வதிகார மென்னுதலிற்றோ வெனின்:— அதிகார நுதலியதூஉம் அதிகாரத்தினது பெயருரைப்பவே விளங்கும். ஆயின், இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோ வெனின்:—சொல்லதிகார மென்னும் பெயர்த்து; சொல்லின திலக்கண முணர்த்தினமையான். போக பூமியான காலத்து எழுத்தின்றிக் கன்ம பூமியான காலத்து எழுத்துத் தோன்றின; இத்துணையல்லது, சொற்போல எக்காலத்துந் தொடர்ந்து வாராத எழுத்தினை முன்வைத்தல் பிழை; சொல்லையே முன்வைக்கற் பால தெனின்:—அற்றன்று; எழுத்தாலே வந்த சொல் லாதலால், ஆக்குவதனை முன்னுணர்த்தி அதனாலாயதனைப் பின்னுணர்த் திறற் பிழை யன்று; மரபென்க. இஃது எழுத்ததிகாரத் தோடியையு. அஃதாக, இதன் முதலடையக் கிடந்த வோத்து என்ன பெயர்த்தோ வெனின்:—மொழியாக்க மரபென்னும் பெயர்த்து. என்னை? ஒருவன் மேலாமாறிது, ஒருத்தி மேலாமாறிது, பலர் மேலாமாறிது, ஒன்றன் மேலாமாறிது, பலவற்றின் மேலாமாறிது, வழூவா மாறிது, வழுவமையு மாறிது என மொழிகள் மேலாமாறு உணர்த்தினமையின். அஃதேல், இவ்வோத்தினுள் இத்தலைச் சூத்திர மென்னுதலிற்றோ வெனின்:— சிறப்புப் பாயிர முணர்த்துதனுதலிற்று. சிறப்புப் பாயிரமும் பொதுப் பாயிரமும் முன் பகர்ந்த வெல்லா முரைத்துக் கொள்க.

இ-ள். பழையவாய்ப் பரந்து கிடந்த நூல்களினும், புதியவாய் நல்லோராற் சொல்லப்பட்டு நடைபெற்றுவரு நஞ் சொற்களினும், வேண்டுவன கொண்டு சொல்லினை யாராய்ந்து கூறுப்படுத்துச் சொல்லுவன். எ-று.

புதிய வாய சொற்கள் பெற்றவாறு என்னையோ வெனின்:—நூல்களினும் என்ற வும்மை எதிரது போற்ற லென்னும் எச்ச வும்மை யாதலாற் பெறப்பட்டது.

சொல் எனைத்து வகையான் ஆராய்ந்தானோ வெனின்:—எட்டு வகையான் ஆராய்ந்தான். அவை மேலைச் சூத்திரத்திற் சொல்லுதும்.

"போதார் நறுந்தெரியற் போர்வேற்கட் பேதாய்" என்பது மகடூஉ முன்னிலை.

க ஏற்ற திணையிரண்டும் பாலைந்து மேழ்வழூவும்
வேற்றுமை யெட்டுந் தொகையாறு—மாற்றரிய
மூன்றிடமுங் காலங்கண் மூன்று மிரண்டிடத்தாற்
றோன்ற வுரைப்பதாஞ் சொல்.

எ-ன். ஆராயப்பட்ட சொல் இனைத்து வகைப்படு மென்பது உணர்த்துதனுதலிற்று.

இ-ள். இரண்டு திணை வகுத்தும், அத்திணைக்கண் ஐந்து பால் வகுத்தும், ஏழுவழு வகுத்தும், எட்டு வகைப்பட்ட வேற்றுமை வகுத்தும், ஆறு தொகை வகுத்தும், மூன்று இடம் வகுத்தும், மூன்று காலம் வகுத்தும், இரண்டிடத்தான் ஆராயப்பட்டது சொல். எ-று.

அவற்றுள், இரண்டு திணையாவன:— உயர்திணை, அஃறிணை என்பன. ஐந்து பாலாவன:— ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல என்பன. ஏழுவழுவாவன:—திணைவழு, பால்வழு, மரபுவழு, வினைவழு, செப்புவழு, காலவழு, இடவழு என்பன; என்னை? "திணைபான் மரபு வினைச் செப்புக்கால, மிடனோடே ழாகு மிழுக்கு" என்றாராகலின். வேற்றுமை யெட்டாவன:—பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி யென்பன. தொகையாறாவன:—வேற்றுமைத்தொகை, உம்மைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமத்தொகை, அன்மொழித்தொகை என்பன. என்னை? "வேற்றுமை யும்மை வினைபண் புவமை, யன்மொழி யென்றிவை தொகையாறுமே" என்றாராகலின். மூன்றிடமாவன:—தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன. முக்கால

மாவன:—இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்பன. இரண்டிடமாவன:— வழக்கு, செய்யுள் என்பன. இவ்வெட்டு முகத்தானும் ஆராயப்பட்டது சொல் என்றவாறு.

இவ்வெட்டினையுஞ் சொல்ல ஒன்பதோத்தும், எழுபது சூத்திரமும் வேண்டிற்றோ வெனின்:— வேண்டிற்று; எட்டின் புடை பெயர்ச்சிகளையும் போக்கற ஆராய வேண்டுதலினென்க. (க)

உ மக்க ணரகரே வானோ ரெனும்பொருள்க
டொக்க வுயர்திணையாந் தூமொழியாய்—மிக்க
வுயிருள் ளனவு முயிரில் லனவுஞ்
செயிரி லஃறிணையாஞ் சென்று.

எ-ன். உயர்திணைப் பொருளும் அஃறிணைப் பொருளும் ஆமா றுணர்த்துதனுதலிற்று.

இ-ள். மக்களென்றும், நரகரென்றும், தேவரென்றும் சொல்லப் பட்டன உயர்திணைப் பொருளாம். இம் மூன்றினையுஞ் சொல்லும் சொல்லும் உயர்திணைச் சொல்லாம். இவர்களொழியக்கிடந்த உயிருள் ளனவும், உயிரில்லனவும் அஃறிணைப் பொருளாம். இவ்விரண்டனையுஞ் சொல்லுஞ் சொல்லும் அஃறிணைச் சொல்லாம். எ-று.

எனவே, உயர்திணைப் பொருளும், உயர்திணைச் சொல்லும், அஃறிணைப் பொருளும், அஃறிணைச் சொல்லுமெனச் சொல்லும் பொருளும் வரையறுத்தானும். (உ)

ந ஒருவ னொருத்திபல ரொன்றுபல வென்று
மருவியபா லைந்தும் வகுப்பின்—பொருவிலா
வோங்கு திணைப்பா லொருமூன் றொழிந்தவை
பாங்கி லஃறிணைப்பா லாம்.

எ-ன். உயர்திணை முப்பாலும் அஃறிணை யிருபாலுமா மாறுணர்த் துதனுதலிற்று.

இ-ள். ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பலவென்று சொல்லப் பட்ட ஐந்து பாலினும், உயர்திணை: ஒருவன், ஒருத்தி, பலர் என மூன்று பாற்படும். அஃறிணை: ஒன்று பலவென இரண்டு பாற்படும். எ-று.

இவ்வாறு பால் விளங்கி நிற்பன படர்க்கைக் கண்ணென்றவாறு. என்னை? "ஒருவ னொருத்தி பலரென்று மூன்றே, உயர்திணை மருங்கிற் படர்க்கைப் பாலே, யொன்றன் படர்க்கை பலவற்றுப் படர்க்கை, யன்றி யனைத்து மஃறிணைப் பால" என்றார் அவிநயனார்.

ஒரு சாராசிரியர் இருதிணை ஐம்பாலைச் சொல்லுமாறு:— "உயர் திணை யென்மனார் மக்கட் சுட்டே, அஃறிணை யென்மனார வரல பிறவே, ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே" "ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல், பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி, யம்முப் பாற்சொல் லுயிர்திணை யவ்வே" "ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென், றாயிரு பாற்சொ லஃறிணை யவ்வே" "பெண்மை சுட்டிய வுயர்திணை மருங்கி, னாண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியுந், தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியு, மிவ்வென வறியு மந்தந் தமக்கிலவே, வுயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்" (தொல், சொல், கிளவி, க, உ, ௩, ௪.) என்றா ராகலின். (௩)

௪ அன்னானு மள்ளாளும் அர்ஆர்பவ் வீறுமா
முன்னை யுயர்திணைப்பான் மூன்றற்குந்—தன்வினைகொண்
டாய்ந்த துறுடுவும் அஆவவ் வீறுமா
மேய்ந்த வஃறிணைப்பாற் கீங்கு.

எ-ன். திணைகளின்கண் ஐந்து பாலும் அறியுஞ் சொற்களின் ஈற்றெழுத்திவை யென்ப துணர்த்துத னுதலிற்று.

இ-ள். தத் தமக்குப் பொருந்திய வினையையும், வினைக் குறிப்பை யுங் கொண்டு, உயர்திணைக்கு, அன் ஆன் இறுதியாய் வருவன ஆடூஉ வறிசொல். அள், ஆள் இறுதியாய் வருவன மகடூஉ வறிசொல். அர், ஆர், ப இறுதியாய் வருவன பலரறி சொல். அவ்வண்ணமே, அஃறிணைக்கும், வினையையும் வினைக் குறிப்பையுங் கொண்டு, துவ்வும், றுவ்வும், டுவ்வும் இறுதியாய் வருவன ஒன்றறிசொல். அவ்வும், ஆவும், வவ்வும் இறுதியாய் வருவன பலவறி சொல். எ-று. தன்வினை கொண் டென்பது மத்திம தீபம்.

வினைக் குறிப் பென்பது பெற்றவாறு என்னையோ வெனின்:— வினைக் குறிப்பும் வினையின் வேறல்ல; ஆதலாற் பெறும்.

வ-று. அன்-உண்டனன், உண்ணா நின்றனன், உண்குவன் எனவும், ஆன்-உண்டான், உண்ணா நின்றான், உண்பான் எனவும், இவை காலத்தியறலான் வினை. கரியன், செய்யன், கரியான், செய்யான் இவை காலந்தோன் றாமையான் வினைக்குறிப்பு. அள்-உண்டனள், உண்ணா நின்றனள், உண்குவள் எனவும், ஆள் உண்டாள், உண்ணா நின்றாள், உண்பாள் எனவும் இவை வினை. கரியள், செய்யள், கரியாள், செய்யாள் இவை வினைக் குறிப்பு. அர்-உண்டனர், உண்ணா நின்றனர், உண்குவர் எனவும், ஆர்-உண்டார், உண்ணா நின்றார், உண்பார் எனவும் இவை வினை. கரியர், செய்யர், கரியார், செய்யார் இவை வினைக் குறிப்பு. ப-உண்ப, தின்ப எனவும் இவை வினை. உயர்திணை முப்பாலும் அடைவே கண்டுகொள்க. து-உண்டது, உண்ணா நின்றது, உண்பது இவை வினை. கரியது, செய்யது இவை வினைக் குறிப்பு. று-கூயிற்று, தாயிற்று இவை வினை. கோடின்று, குளம்பின்று இவை வினைக் குறிப்பு. டு-குண்டுகட்டு, குறுந்தாட்டு என்பனவும் அவை. அ-உண்டன, உண்ணா நின்றன, உண்பன இவை வினை, கரிய, செய்ய இவை வினைக் குறிப்பு. ஆ-உண்ணா, தின்னா என்பன எதிர்மறுத்து வந்தனவாயினும், வினை. வ-உண்குவ, தின்குவ இவை வினை. அஃறிணை யிருபாலும் அடைவே கண்டுகொள்க.

'முன்னை' என்று மிகுத்துச் சொல்லியவதனால், பெயரொடு வந்தாலும், பால் தோன்றுவனவுமுள. அவை:— யாவன், யாவள், யாவர், யாது, யாவை, அவன், அவள், அவர், அது, அவை எனவும், ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல எனவுங் கண்டுகொள்க. (௪)

௫ பாலே திணையே விஞவே பகர்மரபே
காலமே செப்பே கருதிடமே—போலும்
பிறழ்வுஞ் சினைமுத லொவ்வாப் பிறசொல்
லுறழ்வுஞ் சிதைந்த வுரை.

எ-ன். வழூச் சொல்லாமா றுணர்த்துத லுதலிற்று.

இ-ள். பால் மயக்கம், திணை மயக்கம், விஞ மயக்கம், மரபு மயக்கம், கால மயக்கம், செப்பு மயக்கம், இட மயக்கம் என்று சொல்லப்பட்ட ஏழு மயக்கமும் படாமற் சொல்லுக. மயங்கில் வழூவாம்.

சினைச் சொல்லும் முதற் சொல்லும் தம்மில் ஒத்த பொருளை உவமியா தொழியினும் வழுவாம். எ-று.

திணைவழு வாவன:— அவன் வந்தது என உயர் திணை யாண்பா லொருமை அஃறிணை ஒருமைப்பாலில் வழுவிற்று. அவன் வந்தன என உயர்திணையாண்பா லொருமை அஃறிணைப் பன்மைப்பாலில் வழு விற்று. அவள் வந்தது என உயர்திணைப் பெண்பா லொருமை யஃறிணை பொருமைப் பாலில் வழுவிற்று. அவள் வந்தன என உயர் திணைப் பெண்பா லொருமை யஃறிணைப் பன்மைப் பாலில் வழுவிற்று. அவர் வந்தது என உயர்திணைப் பன்மை யஃறிணை யொருமையில் வழுவிற்று. அவர் வந்தன என உயர்திணைப் பன்மை யஃறிணைப் பன்மையில் வழுவிற்று. என உயர்திணை யஃறிணைமேற் சென்று வழு வினவாறு கண்டுகொள்க. அது வந்தான் என அஃறிணை யொருமை உயர்திணை யாண்பா லொருமையில் வழுவிற்று. அது வந்தாளென அஃறிணை யொருமை உயர்திணைப் பெண்பா லொருமையில் வழுவிற்று. அது வந்தார் என அஃறிணை யொருமை உயர்திணைப் பன்மையில் வழு விற்று. அவை வந்தான் என அஃறிணைப் பன்மை உயர்திணை யாண்பா லொருமையில் வழுவிற்று. அவை வந்தாள் என அஃறிணைப் பன்மை உயர்திணைப் பெண்பா லொருமையில் வழுவிற்று. அவை வந்தார் என அஃறிணைப் பன்மை உயர்திணைப் பன்மையில் வழுவிற்று. என இவை அஃறிணை உயர்திணைமேற் சென்று வழுவினவாறு கண்டுகொள்க. இவை பன்னிரண்டும் திணைவழு.

பால்வழுவாவன:— அவன் வந்தாள் என ஆண்பால் பெண்பாலில் வழுவிற்று. அவன் வந்தார் என ஆண்பா லொருமை பன்மையில் வழுவிற்று. அவள் வந்தான் என உயர்திணைப் பெண்பால் ஆண்பாலில் வழுவிற்று. அவள் வந்தார் எனப் பெண்பா லொருமை பன்மைப் பாலில் வழுவிற்று. அவர் வந்தான் என உயர்திணைப் பன்மை ஆண்பா லொருமையில் வழுவிற்று. அவர் வந்தாள் என உயர்திணைப் பன்மை பெண்மைப் பாலொருமையில் வழுவிற்று. அது வந்தன என அஃறிணை பொருமை பன்மையில் வழுவிற்று. அவை வந்தது என அஃறிணைப் பன்மை யொருமையில் வழுவிற்று. என இவை இருபதுங் கண்டு கொள்க.

இனி, வினைநிற்பப் பெயர்மேல் வந்து வழுவின இருபதும் வருமாறு:—வந்தது அவன், வந்தன அவன், வந்தது அவள், வந்தன அவள், வந்தது அவர், வந்தன அவர் என அஃறிணை வினைநிற்ப உயர்திணைப் பெயர்மேல் வழுவிற்று.

வந்தான் அது, வந்தாள் அது, வந்தார் அது, வந்தான் அவை, வந்தாள் அவை, வந்தார் அவை என உயர்திணை வினைநிற்ப அஃறிணைப் பெயர்மேல் வழுவிற்று.

வந்தான் அவள், வந்தான் அவர், வந்தாள் அவன், வந்தாள் அவர், வந்தார் அவன், வந்தார் அவள், வந்தன அது, வந்தது அவை என வினைநிற்பப் பெயர்மேல் வந்து பால்வழுவினவாறு கண்டுகொள்க.

வினாவழுவாவது:—கறக்கின்ற எருமை சினையோ பாலோ வென்றல். மரபுவழுவாவது:—யானை மேய்ப்பானை இடையனென்றும், பசு மேய்ப்பானைப் பாகனென்றுஞ் சொல்லுதல். காலவழுவாவது:—செத்தானைச்சா மென்றல், குளம் நீர்புகுந்து நிறைந்ததெனற் பாலதனை நிறையுமென்றும் சொல்லுதல். நீர் புகுத நிறையு மென்னுமையான் வழுவாயிற்று. செப்புவழுவாவது:—கடம்பூர்க்கு வழியாதோ வென்றால் இடம்பூணி என் ஆவின்கன் றென்றல். இடவழுவாவது:—உண்டேன் நீ, உண்டான் யான், உண்டேன் அவன் என்பன. இவ்வேழும் பிறழாமற் சொல்லுமாறு:—உண்டான் அவன், உண்டாள் அவள், உண்டார் அவர், உண்டது அது, உண்டன அவை இவை திணையும் பாலும் வழுவாது வந்தன. நுந்நாடி யாதென்றால், தமிழ் நாடென்றல் வினாவாலுஞ் செப்பாலும் வழுவாமல் வந்தது. யாட்டுமறி, யானைக் கன்று என்பன மரபுவழுவாமல் வந்தன. யான் உண்டேன், நீயுண்டாய், அவன் உண்டான் என்பன இட மூன்றும் வழுவாமல் வந்தன. பிறவு மன்ன.

சினையும் முதலும் தம்மி லொவ்வாதன வற்றைப் பிறழ உவமிக்குமாறு:—சாத்தன் நல்லனோ கொற்றன்றோள் நல்லவோ என்றல்—இது முதலுஞ் சினையும் பிறழ உறழ்ந்தது. சாத்தன்கண் நல்லவோ, கொற்றன் செவி நல்லவோ என்றல்—இது சினையுஞ்சினையும் பிறழ

உறழ்ந்தது. நும்மூர் அரசன் நல்லனோ எம்மூர்க் கோலிக னல்லனோ என்றல்—இது முதலும் முதலும் பிறழ உறழ்ந்தது. இவை சினையு முதலும் தம்மிலொவ்வாத சொற்கள் வந்து பிறழ்ந்தன கண்டு கொள்க. இனிப் பிறழாது வருமாறு:—கொற்றன்றோள் நல்லவோ சாத்தன்றோள் நல்லவோ என்றால் கொற்றன்றோளிற் சாத்தன்றோணல்ல; சாத்தன்றோளிற் கொற்றன்றோள் நல்ல என்றலும், எம்மூர் அரசன் நல்லனோ நும்மூர் அரசன் நல்லனோ என்றால் எம்மூர் அரசனினும் நும்மூர் அரசன் நல்லன்; நும்மூர் அரசனினும் எம்மூர் அரசன் நல்லன் என்றலும்; இவை வினாவாலும் விடையாலும் வழுவாமல் வந்தன. 'மேற்று ணிருந்த வுயர்சினை கொன்றானிற், றேற்று வொழுக்கம் படுவ கொன், மாற்று, ரூறுமாண் சாய்த்தா னுயர்குடந்தை யாட்டி சிறுமருங் குல் செற்ற முலே' எனவும், உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தா, னுத்தர மாமதுரைக் கச்சென்ப—விப்பக்க, மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப், போதார் புனற்கூடற் கச்சு' எனவும், 'நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப், பிறர்நாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி, பற நாட்டுப் பெண்டிரடி' எனவும் இவை பிறழ்வல்ல என வறிக. உப கேசியாவாள்—நப்பின்னைப் பிராட்டியார். மாதாநு பங்கி யாவார்—திருவள்ளுவதேவர்.

'பகர்' என்று மிகுத்துச் சொல்லியவதனால், வினா ஐந்து வகைப் படும்; அறியான் வினாதல், அறிவொப்புக் காண்டல், ஐய மறுத்தல், அவனறிவு தான்கோடல், மெய்யவற்குக் காட்டல் என. அவற்றுள், அறியான் வினாதலென்பது இச்சூத்திரத்துக்குப் பொருளென்னையோ என்றல். அறிவொப்புக்காண்டலென்பது இச்சூத்திரத்துப் பொருள் யானறிந்தபடி யறிந்தானோ வேறு படவறிந்தானோ என வினாதல். ஐயமறுத்தலென்பது இச்சூத்திரத்துக்குப் பொருள் தெளியாது நின் றான் ஐயந்தீர வினாதல். அவனறிவுதான் கோடலென்பது இச் சூத்திரத்துக்குப் பொருள் இவனுரைக்குமாறு காண்டுமென்று வினாதல். மெய்யவற்குக் காட்டலென்பது இச் சூத்திரத்துக்குப் பொருள் வழுவ உணர்ந்தானென் றவனைப்பிழைப்புத் தெருட்டி நன்குணர்த்துவான் வினாதல் எனக் கொள்க. என்னை? 'அறியான் வினாதலறி வொப்புக் காண்ட, லையமறுத்த லவனறிவு தான்கோடல், மெய்யவற்குக் காட்டலோ டைவகை வினாவே' என்று ராகலின்,

'கருது' என்று மிகுத்துச் சொல்லியவதனால், உவமை நான்கு வகைப்படும். அவையாவன:—வினை, பயன், மெய், உரு என. அவற்றுள், வினையுவமை யாவது புலிபாய்ந் தாங்குப் பாய்ந்தா னென்றல். பயனுவமை யாவது மழைபோன்ற வண்கை என்றல். மெய்யுவமை யாவது துடியிடை யென்றல். உருவுவமை யாவது பொன்மேனி என்றல். என்னை? 'வினைபய மெய்யுரு வென்ற நான்கே, வகைபெற வந்த வுவமத் தோற்றம்' (தொல், பொரு, உவ, க.) என்றாராகலின். (ரு)

சு ஓது மெதிர்வினா வுற்ற துரைத்தலு
மேவ லுறுவதுகூற் றிந்நான்கும்—பேதாய்
மறுத்த லுடன்படுத லன்றெனினு மன்ற
விறுத்தலே போலு மிவை.

எ-ன். வழுவமைத் தலையுணர்த்துத லுதலிற்று.

இ-ள். வினாவெதிர் வினாதலும், உற்ற துரைத்தலும், ஏவுதலும், உறுவது கூறலுமென நான்கும் உடன்படுதலும் மறுத்தலுமே யாயினும், வினாவிற்கு இறைபட வருதலால் வழூவென்றெனக.

அவை வருமாறு:— சாத்தா கருவூர்க்குச் செல்லாயோ என்றால் செல்லேனோ என்றல் வினாவெதிர் வினாதல். இது செல்வே னென்னும் பொருள் பட்டது; ஆதலால், உடம்பாடாயிற்று. சாத்தா கருவூர்க்குச் செல்லாயோ என்றால் என்கால் முட்குத்திற்று என்றல் உற்ற துரைத்தல். சாத்தா கருவூர்க்குச் செல்லாயோ என்றால் நீ செல் என்றல் ஏவுதல். சாத்தா கருவூர்க்குச் செல்லாயோ என்றால் பகைவர் எறிவர் என்றல் உறுவது கூறல். இவை மூன்றும் செல்லே னென்னும் பொருள் பட்டன; ஆதலால், உடம்பாடன்றாயிற்று; ஆதலால், உடன்படுதலும் மறுத்தலுமேயாய் அடங்கிற் றெனக் கொள்க. (சு)

எ ஐயந் திணைபாலிற் றோன்றுமே லவ்விரண்டு
மெய்தும் பொதுமொழியா லீண்டுரைக்க—மெய்தெரிந்தா
லன்மை துணிபெருண்மேல் வைக்கவொரு பேர்ப்பொதுச்சொல்
பன்மைசிறப் பாலுரைத்தல் பண்பு.

எ-ன். திணையையமும் பாலையமுந் தோன்றினவழிச் சொல் நிகழுமாறும், ஐயந்தீர்ந்தாற் சொல் நிகழுமாறும், ஒரு பெயர்ப் பொதுச் சொல்லாமாறு முணர்த்துத லுதலிற்று.

இ-ள். உயர்திணையோ அஃறிணையோ வென்று ஐயந்தோன்றிய விடத்தும், ஒருவனோ ஒருத்தியோ வென்று ஐயந்தோன்றிய விடத்தும், ஒன்றோ பலவோ வென்று ஐயந்தோன்றின விடத்தும் ஐயப்பட்ட பொருள் இரண்டிற்கும் உரித்தாகச் சொல்லுக; இவ்வையந் தீர்ந்தவழிப் பிறக்கும் அன்மைச்சொல்லைத் துணிந்த பொருண் மேலேற்றிச் சொல்லுக; ஒரு பெயர்ப் பொதுச் சொற்களைப் பன்மையாலும் தலைமையாலும் பெயர் கொடுத்துச் சொல்லுக எ-று.

அவை வருமாறு:—குற்றி கொல்லோ மகன் கொல்லோ தோன்றுகின்ற வுருவென்றும், ஒருவன் கொல்லோ ஒருத்தி கொல்லோ தோன்றுகின்ற அவரென்றும், ஒன்று கொல்லோ பல கொல்லோ பைங்கூழ் மேய்ந்த பெற்ற மென்றும் உரைக்க. அவை துணிந்தாற் குற்றியல்லன் மகனென்றும், மகனன்று குற்றி யென்றும், ஒருவ னல்லள் ஒருத்தி யென்றும், ஒருத்தி யல்லன் ஒருவ னென்றும், ஒன்றல்ல பலவென்றும், பலவன்று ஒன்றென்றும் உரைக்க. என்னை? "தன்மை சுட்டலு முரித் தென மொழிப, அன்மைக் கிளவி வேறிடத்தான" (தொல், சொல், கிள, உரு.) என்றா ராகலின். ஒரு பெயர்ப் பொதுச் சொல்லாவன:— தோட்டம், சேரி, காடு, நாடு முதலியன. இஞ்சித் தோட்டம், மஞ்சட் டோட்ட மென்பன பன்மையாற் பெயர் பெற்றன. மாந் தோட்டம், பலாத் தோட்ட மென்பன தலைமையாற் பெயர் பெற்றன. கமுகந் தோட்டம், தெங்கந் தோட்ட மென்பன பன்மையாலுந், தலைமையாலும் பெயர் பெற்றன. இடைச் சேரி, வாணிகச் சேரி என்பன பன்மையாற் பெயர் பெறறன. செங்கோன் சேரி, செவ்வண்ணச் சேரி என்பன தலைமையாற் பெயர் பெற்றன. காரைக் காடு என்பது பன்மையாற் பெயர் பெற்றது. ஆலங் காடு என்பது தலைமையாற் பெயர் பெற்றது. எயினர் நாடு என்பது பன்மையாற் பெயர் பெற்றது. பாண்டி நாடு என்பது தலைமையாற் பெயர் பெற்றது. பிறவு மன்ன. என்னை? "ஒருபெயர்ப் பொதுச்சொ லுள்பொரு ளொழியத், தெரிபுவேறு கிளத்த றலைமையும் பன்மையு, முயர்திணை மருங்கினு மஃறிணை மருங்கினும்' (தொல், சொல், கிள, சகூ.) எனக் கொள்க. (எ)

அ குழுவடிமை வேந்து குழவி விருந்து
வழுவுறுப்புத் திங்கண் மகவும்—பழுதி
லுயர்திணைப் பண்போ டுயிருறுப்பு மெய்யு
மயர்வி லஃறிணையே யாம்.

எ-ன். உயர்திணையை அஃறிணைபோற் சொல்லுதல் வழுவே யாயினும் அமைக்க வென்பதனை யுணர்த்துத லுதலிற்று.

இ-ள். குழுமுதலாய்க் கிடந்த பன்னிரண்டும் உயர் திணைப் பெயராயினும் அஃறிணையாகச் சொல்லுதல் வழுவன்றென்க. எ-று.

அவை வருமாறு:—குழுவிருந்தது, அடிமை வந்தது, வேந்து எழுந்தது, குழவி யழுதது, விருந்து வந்தது எனவும், வழுவுறுப்பு—குருடு வந்தது, செவிடு போயிற்று, அலி நின்றது எனவும், திங்கள் எழுந்தது, மகவு கிடந்தது எனவும், உயர்திணைப் பண்புகளிற் குடிமை நன்று, ஆண்மை நன்று, கல்வி நன்று எனவும், உயிர் போயிற்று எனவும், உறுப்பு—கண் கெட்டது எனவும், மெய்—உடம்பு நலிந்தது எனவும், அடைவே கண்டுகொள்க. என்னை? "குடிமை யாண்மை யிளமை மூப்பே, யடிமை வன்மை விருந்தே குழுவே, பெண்மை யரசே மகவே குழவி, தன்மை திரிபெய ருறுப்பின் கிளவி, காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொலென், றுவறு மூன்று முளப்படத் தொகைஇ, யன்ன பிறவு மவற்றொடு சிவணி, முன்னத்தி னுணருங் கிளவி யெல்லா, முயர்திணை மருங்கி னிலையின வாயினு, மஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்" (தொல், சொல், கிள, நஎ.) என்றூ ராகலின். பிறவு மன்ன.

'அயர்விலஃறிணை' என்று மிகுத்துச் சொல்லியவதனால், இவற்றுள், உயர்திணையாய் நடப்பனவுமுள. அவை:—வேந்து நல்லன், குடிமை நல்லன், உடம்பு மெலிந்தான் எனவுங் கொள்க. பிறவு மன்ன. (அ)

கூ எண்ணு மிருதிணையு மெய்து மஃறிணையா
வெண்ணிவியங் கொள்க விருதிணையு—மெண்ணினுற்
றன்மையா யஃறிணையுஞ் சொன்னமொழி தன்னினத்தை
யுன்னி முடித்தலு முண்டு.

எ-ன். வழுவமைத்தலும் அருத்தாபத்தியுமாமாறு உணர்த்துத னுதலிற்று.

இ-ள். உயர்திணையையும் அஃறிணையையுங் கூட எண்ணி அஃறிணையாலே முடித்தலும், இருதிணையையுங் கூட எண்ணி ஒக்க வியங்கொள்கையும், அஃறிணையையும் தன்மைச் சொல்லோடே கூட எண்ணித் தன்மைச் சொல்லாலே முடித்தலும், எடுத்தமொழி தன்னினத்துப் பொருளைக் காட்டலுமுடைய. எ-று.

அவை வருமாறு:— "வடுக ரருவாளர் வான்கரு நாடர் சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறுங், குறுகா ரறிவுடை யார்" எனவும், "கொடிறும் பேதையுங் கொண்டது விடா" எனவும் இவை உயர்திணையையும் அஃறிணையையுங்கூட எண்ணி அஃறிணையாலே முடிந்தன. "பலவயினானு மெண்ணுத்திணை விரவுப்பெய, ரஃறிணை முடிபின செய்யுளுள்ளே" (தொல், சொல், கிளவி, ருக.) என்றாராகலின். இனி, ஆவும் ஆயனுஞ் செல்க, யானையும் பாகனும் வருக என இருதிணையும் எண்ணி வியங்கோளிடத் தொத்தன. வியங்கோளாதல்—ஏவுதல். என்னை? "வியங்கோ ளெண்ணுப் பெயர் திணைவிரவு வரையார்" (தொல், சொல், கிளவி, சரு.) என்றாராகலின். "யானுமென் னெஃகமுஞ் சாறு மவனுடைய, யானைக்குஞ் சேனைக்கு நேர்" எனவும், "ஆழியா யானு வநங்கனு மென்னுடைய, தோழியா யூர்காவலன் றுடியாய்-வாழி-புறங்காவலாகும் புனலே சூழ்நாட்டி, லுறங்கா தமைவே மூளேம்" எனவும் அஃறிணையையும் உயர்திணையையுந் தன்மையோடே கூட்டித் தன்மையாயின வாறு கண்டுகொள்க. என்னை? "தன்மைச் சொல்லே யஃறிணைக் கிளவி யென், றெண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்" (தொல், சொல், கிளவி, சங.) என்றாராகலின். "தன்மையோடி சைந்தன தன்மை யாகும், முன்னிலை மொழியொடு படர்க்கையு மற்றே" அவை வருமாறு:— நீயுநின் படைக்கலமுஞ்சாரீர்; அவனுந்தன் களிறுஞ் சாரும். மேலைச்சேரி வென்றதென்றாற் கீழைச்சேரி தோற்றதென்பது சொல்லாமல் முடிந்தது. இது அருத்தாபத்தி.

முடித்தலுமென்ற உம்மையான் முடியாதனவுமுள. அவை வருமாறு:— ஆவாழ்க என்றால் அந்தணர் கெடுக என்றாகாது.

அருத்தாபத்தியாவது "எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே"

இனி 'உன்னிய' என்று மிகுத்துச் சொல்லிய வதனால் உயர் திணையையும் அஃறிணையையுங் கூட எண்ணி உயர்திணையாலே முடிவனவு முள. அவை "அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந் திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற்-றிங்கண், மறுவாற்றுஞ் சான்றோ ரஃதாற்றார் தெருமந்து, தெய்வ ரொருமா சுறின்" (நாலடியார், மேன்மக்கள், க.) எனவும், "தன்பான் மனையா ளயலான்றலைக் கண்டுபின்னும், மின்பா லடிசிற் சிவர்கின்றகைப் பேடிபோலா, நன்பால் பசுவே துறந்தார் பெண்டிர் பாலர் பார்ப்பா, ரென்பாரை யோம்பே னெனில்யானவனாகவென்றான்" (சீவகசிந்தாமணி, கோவிந்தையார், ருரு.) அவனென்றது கட்டியங்காரனை எனவும், "தம்முடைய தண்ணளியுந் தாமுந்த மான்றேரு, மெம்மை நினையாது விட்டனரேல் விட்டகல்க, வம்மெனிணா வடம்புகா ளன்னங்கா, ணம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால்" (சிலப்பதிகாரம், கானல்வரி, ருஉ.) எனவும் இவை இருதிணையுமெண்ணி உயர்திணையான் முடிந்தன. பிறவு மன்ன. (கூ)

கO உயர்வு மிழிவு முவப்புஞ் சிறப்பு
மயர்வி றிணைபான் மயங்குஞ்—செயிரில்
வழக்குந் தகுதியுமாய் வந்தொழுகுஞ் சொற்க
ளிழுக்கல்ல முன்னை யியல்பு.

எ-ன். இதுவும் வழுவமைத்தலை யுணர்த்து தனுதலிற்று.

இ-ள். ஒரு பொருளை உயர்த்தும், இழித்தும், உவந்தும், சிறப்பித்தும் சொல்லும் பொழுது, திணையும் பாலும் மயங்கி வரப்பெறும்; வழக்கினும் தகுதியானும் நடக்குஞ் சொற்கள் வழுவல்ல; தொன்றுதொட்டு வருதலால். எ-று.

தகுதி மூன்று வகைப்படும்; குழுவின் வந்த குறுநிலை வழக்கும், இடக்கரடக்கிக் கூறுதலும், மங்கலமரபினாற் கூறுதலுமென.

அவை வருமாறு:— குரிசில் வந்தது, பெருவிறல் வந்தது இவை உயர்வுபற்றி வந்தன. பொறியறை வந்தது, குருடு வந்தது என இரண்டும் இழிவுபற்றி வந்தன. என் யானை வந்தது என்ப ஒருவனை, என் பாவை வந்தது என்ப ஒருத்தியை, எந்தை வந்தா னென்ப ஓரெருத்தினை, என் அன்னை வந்தா ளென்ப ஓர் பசுவினை; இவை உவப்புப்

பற்றி வந்தன. பெருவிறல் வந்தது, கூற்று வந்தது இவையும் உவப்பு. சாத்தனர் வந்தார், நரியார் வந்தார் என இவை சிறப்புப்பற்றி வந்தன. என இவை பாலுந் திணையு மயங்கினவாறு கண்டு கொள்க. என்னை? "உவப்பினு முயர்வினு மிழிப்பினுஞ் சிறப்பினும், பாலுந் திணையு மயங்குதல் வரையார்" என்பவாகலின்.

சிறிது பெரிது என்கையும், கிழக்கு மேற்கு என்கையும், வெள் ளாடு என்கையும் இவை வழக்கால் நடை பெற்றன.

யானைப் பாகர் ஆடையைக் காரை யென்றலும், வண்ணக்கர் காணத்தை நீலமென்றலும், பொற் கொல்லர் பொன்னைப் பறியென்றலும் இவை குழுவின் வந்த குறுநிலை வழக்கு. கான்மேனீர்பெய்து வருதும், கண்கழீ இவருதும், கைகுறியா யிருந்தார், இது தீண்டாத பொழுது, பிள்ளைப்பேறு, பொறையு யிர்த்தார் என்பன இடக்கரடக்கிக் கூறுதல். ஓலையைத் திருமுகம் என்றலும், செத்தாரைத் துஞ்சினர் என்றலும், விளக்குப் பெருகிற்று என்றலும் இவை மங்கல மரபினாற் சொல்லின வெனக் கொள்க. என்னை? "தகுதியும் வழக்குந் தழீஇயின வொழுகும், பகுதிக் கிளவிவரை நிலையிலவே" (தொல், சொல், கிளவி, கஎ.) என்றாராகலின். 'செயிர்' என்று மிகுத்துச் சொல்லியவதனால், ஒருவன் ஒன்று குறித்துச் சொன்னாற் றெரித்துச் சொல்லுக என்றவாறு. என்னை? "குறித்தோன் கூற்றந் தெரித்து மொழிகிளவி" (தொல், சொல், கிளவி, ருரு.) என்றாராகலின். அது வருமாறு:—*"புல்லேங் குவளை புலாஅன் மகன்மார்பிற், புல்லெருக்கங் கண்ணி நறிது" என்

* இதனை "ஒல்லேங் குவளை" எனப் பாடங்கொண்டு "குவளை புலானாறு தற்கும் எருக்கங் கண்ணி நறிதாதற்கும் காரணங் கூறாமையின் வழுவாம் பிறவெனின்;—புதல்வற் பயந்த பூங்குழன் மடந்தை பரத்தையிற் பிரிந்து வந்த கிழவனோடு புலந்துரைக்கின்றாளாகலிற் குவளை புலானாறுதற்கு அவன் றவற் றொடுகூடிய அவள் காதல் காரணமென்பதூஉம், எருக்கங் கண்ணி நறிதாதற்கு மகிழ்நன் செய்த துனிகூர் வெப்பம் முகிழ்நகை முகத்தாற் றணிக்கும் புதல்வன் மேல் ஒருகாலைக் கொருகாற் பெருகுமன்பு காரணமென்பதூஉம் பெறப்படுதலின் வழுவாகாதென்பது' என்பர் ஆசிரியர் சேனாவரையர். "'ஒல்லேங்......... நறிது' எனத் தெரித்து மொழியாதா யிற்றாயினும் தலைவன்தவறும், புதல்வன் மேலன்பும் காரணமாகக் கூறலும் வழுவன் றென்றலும் ஒன்று" என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியரும். (தொல், சொல், கிளவி, ருசு.)

னற்க. *"பல்லார்தோ டோய்ந்து வருதலாற் பாய்புனல், நல்வய லூர நின் ஞர்புலால்-புல்லெருக்க, மாசின் மணிப்பூணெம் மைந்தன் மலைந் தமையாற், காதற்ருய் நாறு மெமக்கு" எனத் தெரித்துச் சொல்லுக. †"உலற்றமின்றிப் பயின்ருர் ஒரு சான்ருர் மயிர்நீட்டி உலறி நின்ருரைக் கண்டு ஒருவன், எம்பெருமான், உலறி நின்றீரால் என்றக்கால் வாளாதே உலறி நின்றேன் என்னற்க. தனக்கு உற்றதுரைத்து இது காரணத் தால் உலறி நின்றேன் என்க." பிறவு மன்ன. (கo)

கக பெண்ணு ணொழிந்த பெயர்தொழி லாகியசொ
லுண்மை யிருதிணைமே லுய்த்தறிக—வெண்ணி
யினைத்தென் றறிந்த சினைமுதற்பேர்க் கெல்லாம்
வினைப்படுப்பி னும்மை மிகும்.

எ-ன். பெண்ணொழி மிகுசொல்லும், ஆணொழி மிகுசொல்லும், உம்மை யிடைச் சொன் மிகுவ தோரிடமு முணர்த்துத னுதலிற்று.

பெண்ணொழி மிகுசொல், ஆணொழி மிகுசொல் என்பனவற்றைப் பெயரானும் தொழிலானும் உறழ நான்காம். இவற்றை உயர்திணை யஃறிணை யானுறழ எட்டாம். அவையாவன உயர்திணை யிடத்துப் பெயரிற் ரேன்றும் பெண்ணொழி மிகுசொல்லும், தொழிலிற் ரேன்றும் பெண்ணொழி மிகுசொல்லும், பெயரிற் ரேன்றும் ஆணொழி மிகு சொல்லும், தொழிலிற் ரேன்றும் ஆணொழி மிகுசொல்லும் என நான்கு வகைப்படும். என நான்கு காட்டியவழி, அஃறிணை மேலும் இந் நான்கும் வர எட்டாம். எண்ணிவரை யறுக்கப்பட்ட சினைச்சொல்லும் முதற்சொல்லும் வினைப்படுத்துச் சொல்லும் பொழுது, உம்மை கொடுத் துச் சொல்லுக. எ-று.

அவை வருமாறு:— அரசன் நூறுமக்க ளொடும் வந்தான் என்றல் உயர்திணை யிடத்துப் பெயரிற் ரேன்றும் பெண்ணொழி மிகுசொல். கீழைச் சேரியாரும் மேலைச் சேரியாரும் பொருவர் என்றல் உயர்திணை

---

* இது இளம்பூரணவடிகள், கல்லாடர், நச்சினார்க்கினியருரை மேற்கோள் (தொல், சொல், கிளவி, ருசு.)

† 'உலற்றமின்றி' முதலாகக் கூறியன ஷை சூத்திரத்து இளம்பூரணவடிக ளுரையினுங் காணப்பட்டன.

யிடத்துத் தொழிலிற் றோன்றும் பெண்ணொழி மிகுசொல். பெருந் தேவி பொறை யுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்களுளர் என்றல் உயர் திணை யிடத்துப் பெயரிற் றோன்றும் ஆணொழி மிகுசொல். இன்று இச்சேரியார் தைநீராடுவர் என்றல் உயர்திணை யிடத்துத் தொழிலிற் றோன்றும் ஆணொழி மிகுசொல். இவை நான்கும் உயர்திணை யெனக் கொள்க. அரசன் நூறியானை யுடைய னென்றல் அஃறிணை யிடத்துப் பெயரிற் றோன்றும் பெண்ணொழி மிகுசொல். இன்று இவ்வூர்ப் பெற்ற மெல்லாம் உழவொழிந்தன என்றல் அஃறிணை யிடத்துத் தொழிலிற் றோன்றும் பெண்ணொழி மிகுசொல். நம்பிநூறு எருமை உடையன் என்றல் அஃறிணை யிடத்துப் பெயரிற் றோன்றும் ஆணொழி மிகுசொல். இன்று இவ்வூரிற் பெற்ற மெல்லாம் அறத்திற்குக் கறக்கும் என்றல் அஃறிணை யிடத்துத் தொழிலிற் றோன்றும் ஆணொழி மிகுசொல். இவை நான்கும் அஃறிணை யெனக் கொள்க. நங்கை முலையிரண்டும் வீங்கின; நம்பி தோளிரண்டும் வீங்கின என்பன சினைச்சொல் உம்மை பெற்றன. தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்; தேவர் முப்பத்து மூவரும் வந்தார் என்பன முதற்சொல் உம்மை பெற்றன. "கண் களியாச் சென்றமர்ப்பக் கைநாஞ்சின் மேலசைஇ, யொண்குழை யொன் றொல்கி யெருத்தலைப்ப—வொண்சுடர்ப்பூ, ணோர்மலர்த்தா ரைவர் நீர்மை யுடைத்தரோ, நீர்மணிப்பூண் வெள்ளை நிலை" எனவும், 'எருமை நாற்கா னீர்க்கீ ழவ்வே' எனவும் உம்மையில்லை; செய்யுளாதலால் தொக்கு நின்ற தென்று அறிக.

எல்லாமென்று மிகுத்துச் சொல்லியவதனால், இல்லாப் பொருளைச் சொல்லு மிடத்தும் உம்மை கொடுத்துச் சொல்லுக. என்னை? "இனைத் தெனவறிந்த சினைமுதற் கிளவிக்கு, வினைப்படு தொகுதியி னும்மை வேண்டும்" (தொல், சொல், கிளவி, ௩௩.) மன்னுப்பொருளு மன்ன வியற்றே" (தொல், சொல், கிளவி, ௩௪.) என்பவாகலின், அவை வரு மாறு:— பவளக்கோட்டு நீலயானை சாதவாகனன் கோயிலுள்ளும் இல்லை. அம்மிப் பித்தும் துன்னூசிக் குடரும் சக்கிரவர்த்தி கோயிலுள்ளும் இல்லை. இவை என்று மில்லை எனவு முரைக்க. (௩௩)

கஉ பொதுப்பிரிபா லெண்ணொருமைக் கண்ணன்றிப் போகா
பொதுத்தொழிலை யொன்றாற் புகலார்—மதித்த
வொருபொருண்மேற் பல்பெயருண் டானு லவற்றிற்
கொருவினையே சொல்லுக வோர்ந்து.

எ-ன். வழுவமைக்கின்றது உணர்த்துத னுதலிற்று.

இ-ள். உயர்திணைப் பாற்குப் பொது ஒருவர் இருவர் என்றல். அது பிரிதலாவது ஒருவன் ஒருத்தி என்றல். அது பொதுப் பிரிந்த பொழுது, ஒருமை மாத்திரமே யல்லது எண்ணேடாது; எனவே, பொதுப் பிரியாது நின்ற பொழுது, எவ்வளவும் எண்ணேடும் எனக் கொள்க. பொதுத் தொழிலை யுடைய வற்றை ஒன்றன் றொழிலாற் சொல்லா தொழிக. ஒரு பொருட்குப் பலபெயர் உண்டான விடத்துத் தொழில் கொடுக்கும் பொழுது, அப்பெயர்களை யெல்லாம் எண்ணி ஒரு தொழிலாற் சொல்லுவது. பெயர் தோறும் வேறு தொழில் கொடுக்கிற் பொருளும் வேறு பட்டதாம்; ஆதலால் ஆகாது. எ-று.

அவை வருமாறு:— ஒருவன் என நின்ற பின்பு, இருவன், மூவன் என லாகாது. ஒருத்தி என நின்ற பின்பு, இருத்தி முத்தி என லாகாது. இது பொதுப் பிரிந்த சொல்லாதலால், ஒருமைக் கண்ணே எண்ணேடினவாறு கண்டு கொள்க. ஒருவர் என நின்ற விடத்து இருவர் மூவர் நால்வர் என்று எங்கும் ஓட்டிக் கொள்க. என்னை? "ஒருமை எண்ணின் பொதுப்பிரி பாற்சொ, லொருமைக் கல்ல தெண்ணு முறைநில்லா" (தொல், சொல், கிளவி, ௪௪.) என்றா ராகலின். இது பொதுப் பிரியாத சொல்லாதலால் எவ்வளவும் எண்ணேடினபடி கண்டு கொள்க. பொதுத் தொழில் என்றது ஆகு பெயர். பலபெயர்ப் பொதுத் தொழி லுடையன வற்றை ஒன்றன் றொழிலாற் சொல்லார்; எனவே எல்லாப் பெயர்களையுஞ் சொல்லிப் பொதுத் தொழிலாலே முடித்தல். பொதுப் பெயரைச் சொல்லிப் பொதுத் தொழிலாலே முடித்தல் செய்வது. அவை வருமாறு:— முடியுங் கடகமுங் குழையு நெடுநாணும் அணிந்தார். இது எல்லாப் பேர்களையும் எண்ணிப் பொதுத் தொழிலான் முடிந்தவாறு கண்டு கொள்க. அணிகலம் அணிந்தார், இயமரம் இயம்பினார், அடிசில் அயின்றார் என்று சொல்வன பொதுப் பெயரைச் சொல்லிப் பொதுத் தொழிலாலே முடிந்தவாறு.

என்னை? "வேறுவினைப் பொதுச்சொ லொருவினை கிளவார்" "எண்ணுங் காலை யதுவதன் மாபே" (தொல், சொல், கிளவி, சகூ, சஎ.) என்று ராகலின். இனி, ஒரு பொருண்மேற் பலபெயர் வருமாறு:— ஆசிரியன் பேரூர்கிழான், செயிற்றியன், இளங்கண்ணன் வந்தான் என்றுமாம்; அன்றி, ஆசிரியன் வந்தான், பேரூர்கிழான் வந்தான், செயிற்றியன் வந்தான், இளங்கண்ணன் வந்தான் என்றுமாம். இவ்வாறன்றி, ஆசிரியன் வந்தான், பேரூர்கிழான் இருந்தான், செயிற்றியன் கிடந்தான், இளங்கண்ணன் நின்றான் என்று பலவினை கொடுத்து உரையற்க. என்னை? "ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி, தொழில்வேறு கிளப்பி னொன்றிட னிலவே" என்றாகலின். செக்கினுள் எள்பெய்து ஆட்டுவா ரில்லா மோட்டுமுதுகிழவி மன்றத்து இருந்த வன்றிறல் இளைஞரைச் சென்றுகைபற்றி எந்தைவருக, எம்மான் வருக, மைந்தன் வருக, மணாளன் வருக என்றால் இது வழுவாகற் பாலதோ எனின், அறியாது சொன்னாய்; ஒரு பொருண்மேற் பலபெயர் அல்லாமையால் ஆகாது. தேமலராலங்கற் றிருவே புகுதுக; மாமலர்க்கோதை மணாளன் புகுதுக; காமன் புகுதுக; காளை புகுதுக; நாம எழில் விஞ்சை நம்பி புகுதுக; என்பன உவப்பினால் அமைக்க. (கஉ)

கா ஒப்பிகந்த பல்பொருண்மேற் சொல்லு மொருசொல்லைத்
தப்பா வினையினஞ் சார்பினாற்—செப்புக
சாதி முதலாஞ் சிறப்புப்பேர் தன்முன்ன
ரோதா ரியற்பெயரை யுய்த்து.

எ-ன். வினை வேறு படும் பலபொரு ளொரு சொல்லும், ஒருவர்க்குச் சிறப்புப் பெயரும் இயற் பெயரும் உண்டானவிடத்துச் சொலலக் கடவ முறையும் உணர்த்துத னுதலிற்று.

இ-ள். ஒவ்வாத பலபொருண்மேற் சொல்லும் ஒரு சொல்லை வினையினானும் இனத்தினானும் சார்பினானும் அறியப்படும். ஒருவர்க்குச் சிறப்புப் பெயரும் இயற்பெயரும் உண்டானவிடத்துச் சிறப்புப் பெயரை முன் வைத்து இயற் பெயரைப் பின் வைத்துச் சொல்லுக. எ-று.

அவை வருமாறு:— மாகோல் வாள் என்றாற் பொருளறிய ஒண்ணுதன. இவற்றை வினையினானும் இனத்தினானும் சார்பினானும்

12480

அறியுமாறு மாப்பூத்தது என்றால் மாமரத்தின்மேல் நிற்கும், இதுவினை. மாவும் பலாவும் ஓங்கின என்றால் இனத்தினால் அறியப்பட்டது. விற் பற்றி நின்று கோல்தா என்பதும் பலகைபற்றி நின்று வாள்தா என் பதும் சார்பினான் அறியப்பட்டன.

'தப்பா' என்று மிகுத்துச் சொல்லியவதனால் இம்மூன்றி னானும் அறியப்படாத பலபொரு ளொரு சொற்களைக் கிளந்தறிக. அவை பலகன்று ஓரிடத்து உளவான பொழுது நீரூட்டுக என்ற பொழுது இன்ன கன்று நீரூட்டுக என்று தெரித்துச் சொல்லுக. எ-று. "வினை வேறுபடாப் பலபொரு ளொரு சொன், னிலையுங் காலைக் கிளந்தாங் கியலும்" (தொல், சொல், கிளவி, ருரு.)

இனி:— சோழன் நலங்கிள்ளி, பாண்டியன் மாறன், சேரமான் சேரலாதன் எனவும், படைத்தலைவன் கொற்றன் எனவும் சிறப்புப் பெயரின் பின் இயற்பெயர் வந்தவாறு. இவை மறுக்கில் வழுவாமென்று அறிக. "சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கு, மியற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்" (தொல், சொல், கிளவி, சக.)

'உய்த்து' என்று மிகுத்துச் சொல்லியவதனால் இயற்பெயர் முன் வரிற் பண்பு ஒட்டி வலித்தல்லது வாராது. அவை நலங்கிள்ளிச் சோழன், கொற்றப் படைத்தலைவன் எனக் கொள்க. (கரு)

கச இனமின்றிப் பண்புண்டாஞ் செய்யுள் வழக்கே
லினமுண்டாய்ப் பண்புவந் தெய்தும்—புனையிழாய்
திண்ண மடையுஞ் சினையு முதலுமாய்
வண்ணச் சினைச்சொல் வரும்.

எ-ன். செய்யுளிடத்தும் வழக்கிடத்தும் பண்புச் சொற்பெயர் பெறுமாறும், அடைச் சொற்பெயர் பெறுமாறும் உணர்த்துத லுதலிற்று.

இ-ள். சொற்கட்குப் பண்பு கொடுக்கும் பொழுது செய்யுளிடத்து இனமின்றியே பண்பு கொண்டுவரப் பெறும். வழக்கினிடத்து இன முண்டாய்ப் பண்பு கொண்டுவரப் பெறும். அடையும் சினையு முதலும் பற்றி இவ்வடைவே வருஞ் சொற்கள் வண்ணச் சினைச் சொல் என்று பெயராம். எ-று.

அவை வருமாறு:— செஞ்ஞாயிற்றுக் கவினை என்றும், வெண் கோட்டி யானை என்றும், நெடு வெண்டிங்கள் என்றும் இவை இனமின்றிப் பண்பு முதலிய கொண்டு செய்யு ளிடத்து வந்தன. செய்ய தேவன் என்றும், நெடிய கூத்தன் என்றும், சிறு நாதன் என்றும் இனமுண் டாய்ப் பண்பு கொண்டு வழக்கிடத்து வந்தன. குறுஞ்சூலி, நெடுந் தடி என்பனவும், பெருவண்ணான் என்பதும் இனமின்றிப் பண்பு கொண்டு வழக்கிடத்து வந்தன எனின்;— அறியாது கடாயினாய்; பண்பு கொள் பெயரல்ல; குறுமையைப் பிரித்தாற் சூலி என்றும், நெடுமையைப் பிரித்தாற் றடி என்றும் பெய ராகாமையின். சிறப்பினாற் பெருவண் ணான் என்றாயிற்று. இவை இனஞ்சுட்டி வந்தனவல்ல என்றறிக. செங்கால் நாரை, செங்கால் அன்னம், செங்கண் வரால், நெட்டிலைத்தெங்கு நெட்டிலை யிருப்பபை, தடமருப் பெருமை, தடங்கோட்டி யானைப் பெருந் தோண் மன்னவன் என்பன வண்ணச் சினைச் சொல் என்னை? "அடை சினை முதலென முறைமூன்று மயங்காமை, நடைபெற்றியலும் வண்ணச் சினைச் சொல்" (தொல், சொல், கிளவி, உசு.)

அடை யென்பது பண்பு. பண்பு எனினுங் குணம் எனினும் விசேடம் எனினும் ஒக்கும். இவை குணம் இரண்டடுக்கி முதலொடும் வரும் வழக்கினுள்; செய்யுளுட் குண மிரண்டடுக்கிச் சினையொடு வரவும் பெறும். அவை சிறுகருஞ்சாத்தன், இது வழக்கு. சிறுபைந்தூவி இது செய்யுள். என்னை? "முதலொடு குண மிரண்டடுக்குதல் வழக்கி யல், சினையோ டடுக்குதல் செய் யுளாறே" திண்ணம் என்று மிகுத்துச் சொல்லியவதனால் செல்லும், கொடுக்கும், வரும், தரும் என்பன பெயர்க்கு உரியவாம் பொழுது செல்லும் கொடுக்கும் என்பன படர்க் கைக்கு உரியன. வரும், தரும் என்பன தன்மைக்கு முன்னிலைக்கும் உரிய; ஆயினும், விரவி வரவும் பெறும். என்னை? "செலவினும் வர வினும தரவினும் கொடையினும், நிலைபெறத் தோன்று மந்நாற் சொல் லுந், தன்மை முன்னிலை படர்க்கை யென்னு மம்மூ விடத்து முரிய வென்ப" "அவற்றுட், டருசொல் வருசொல் லாயிரு கிளவியுந், தன்மை முன்னிலை யாயீரிடத்த, வனையிரண்டு மேனை யிடத்த" (தொல், சொல், கிளவி, உஅ, உகூ.) என்றாராகலின். அவை வருமாறு:— அவர்க்குச் செல்லும், அவர்க்குக் கொடுக்குங் காணம் என்பன படர்க்கை யிடத்து

வந்தன. எனக்கு வருங் காணம், எனக்குத் தருங் காணம், நினக்கு வருங் காணம், நினக்குத் தருங் காணம் என்பன தன்மையினும் முன்னிலையினும் வந்தன. இவை விரவி வருமாறு:— "தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது" எனவும் 'புனறரு பசுங்காய்' எனவும் இவை விரவி வந்தன. பிறவு மன்ன. (கச)

மொழியாக்கமரபு

முற்றும்.

இரண்டாவது.

வேற்றுமைமரபு.

கரு காண்டகுபே ரையொடுகு வின்னது கண்விளியென்
நீண்டுரைப்பின் வேற்றுமை யெட்டாகு—மூண்டவைதாந்
தோற்றும் பெயர்முன்ன ரேழுந் தொடர்ந்தியலு
மேற்ற பொருள்செய் யிடத்து.

என்பது சூத்திரம். இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், வேற்றுமைமரபு என்னும் பெயர்த்து. இவ்வோத்தினுள், இத்தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ எனின், வேற்றுமைகட்குப் பெயரும் முறையும் தொகையும் பொதுவிலக்கணமாமாறும் உணர்த்துதனுதலிற்று.

இ-ள். பெயரும் முறையும் தொகையும் அவைதாமே; வேற்றுமைகளிற் பெயர் வேற்றுமையின் பின் பெயரொழிந்த ஏழும் தமக்கேற்ற பொருட் கீடாக வரும். எ-று.

'தோற்றும்' என்று மிகுத்துச் சொல்லிய வதனால் வேற்றுமைகளை ஏலாத பெயரும் திரிந்தேற்கும் என்றவாறு. "எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றிய, யவ்விய னிலையல் செவ்வி தென்ப" (தொல், சொல், வேற்றுமையியல், எ.)

அவை வருமாறு:— யான் என்பது என்னை என்னொடு எனக்கு எனவும், யாம் என்பது எம்மை எம்மொடு எமக்கு எனவும், நாம் என்பது நம்மை நம்மொடு நமக்கு எனவும் இவை தன்மை; நீ என்பது நின்னை நின்னொடு நினக்கு எனவும், நீர் என்பது நும்மை நும்மொடு நுமக்கு எனவும் இவை முன்னிலை; தான் என்பது தன்னை தன்னொடு தனக்கு எனவும், தாம் என்பது தம்மை தம்மொடு தமக்கு எனவும் இவை படர்க்கை; இவ்வாறு தன்மையினும், முன்னிலையினும், படர்க்கையினும் இவை திரிந்து ஏற்றபடி அடைவே கண்டு கொள்க. (க)

கசு *பெயரெழுவாய் வேற்றுமையாம் பின்பதுதா னாறு
பயனிலையு மேற்கப் படுதல்—கயல்விழியா
யீற்றி னுருபாறு மேற்றன்முக் காலமுந்
தோற்றுமை நிற்ற றுணிபு.

எ-ன். எழுவாய் வேற்றுமையாமாறு உணர்த்துத னுதலிற்று.

இ-ள். எழுவாய் வேற்றுமை என்பது பெயர்; அது தான் பொருண்மை சுட்டல், வியங்கோள் வருதல், வினைநிலை யுரைத்தல், வினாவிற் கேற்றல், பண்புகொள வருதல், பெயர்கொள வருதல் என்னும் ஆறு பயனிலையும் ஏற்றலும், இறுதியில் ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்னும் ஆறுருபும் ஏற்றலும், காலம் மூன்றுந் தோன்றுமையும் என்னும் இலக்கணத்தை உடைத்து. எ-று.

அது பயனிலை யாறும் ஏற்கப்படுத லாவது:— பொருண்மை சுட்டல்-ஆ உண்டு என்றல். வியங்கோள் வருதல்-ஆ செல்க என்றல். வினைநிலை யுரைத்தல்-ஆ கிடந்தது என்றல். வினாவிற் கேற்றல்-ஆ வோ என்றல். பண்புகொள வருதல்-ஆ கரிது என்றல். பெயர்கொள வருதல்-ஆ ஒன்று என்றல். என்னை? “பொருண்மை சுட்டல் வியங் கோள் வருதல், வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல், பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென், றன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே” (தொல், சொல், வேற்றுமையியல், ரு.) என்றாராகலின்.

---

* “பின்னூல் செய்த குணவீரபண்டிதரும்” ‘பெயரெழுவாய்.......... நிற்ற றுணிவு’ என நேமிநாதத்துட் கூறினர்; ஆதலால், பெயரொழிந்த ‘பிறவுரு போராறும் வேற்றுமை தோன்ற நிற்கும்’ என்றும்” பிரயோகவிவேக நூலார். (காரக படலம், அ.)

இனி, உருபு ஆறும் ஏற்ற லாவது:— ஆவை, ஆவொடு, ஆவிற்கு, ஆவின், ஆவினது, ஆவின்கண் என உருபு ஏற்றல். என்னை? "கூறிய முறையி னுருபுநிலை திரியா, தீறுபெயர்க் காகு மியற்கைய வென்ப" (தொல், சொல், வேற்றுமையியல், அ.) என்றூ ராகலின்.

'பின்பு' என்று மிகுத்துச் சொல்லிய வதனால், தொகைச் சொற்களும், பயனிலையும் உருபும் ஏற்று எழுவாய் வேற்றுமையாய் நடக்கும் எனக் கொள்க. அவை வருமாறு:— யானைக் கோடுண்டு, யானைக் கோடு செல்க, யானைக் கோடு வீழ்ந்தது, யானைக் கோடோ, யானைக் கோடு வெளிது, யானைக் கோடு இரண்டு என்பன பயனிலை பெற்றவாறு. இனி, யானைக் கோட்டை, யானைக் கோட்டொடு, யானைக் கோட்டிற்கு, யானைக் கோட்டின், யானைக் கோட்டது, யானைக் கோட்டின்கண் என உருபேற்றவாறு கண்டு கொள்க. "பெயரி னாகிய தொகையுமா ருளவே, யவ்வு முரிய வப்பா லான" (தொல், சொல், வேற்றுமையியல், சு.) "பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா, தொழினிலை யொட்டு மொன்றலங் கடையே" (தொல், சொல், வேற்றுமையியல், கூ.) (உ)

சஎ ஐயென் னுருபிரண் டாவ ததுவினையு
மெய்துங் குறிப்பு மியலவருந்—தையலா
யானொடு மூன்று வதுதான் வினைமுதலு
மேனைக் கருவியுமா மீங்கு.

எ-ன். இரண்டாம் வேற்றுமையும் மூன்றாம் வேற்றுமையும் ஆமாறு உணர்த்துத லுதலிற்று.

இ-ள். ஐ என்பது இரண்டாம் வேற்றுமை; அது வினையையும் வினைக் குறிப்பையும் பற்றி வரும்; ஆன், ஆல், ஒடு என்பன மூன்றாம் வேற்றுமை; அது வினை முதலும் கருவி முதலுமாய் வரும். எ-று.

அவை வருமாறு:— ஊரைக் காக்கும், அறத்தை நோக்கும், அரிசியை யளக்கும், அடைக்காயை யெண்ணும் இவை வினை. குழையை யுடையன், பொருளை யிலன் இவை வினைக் குறிப்பு. பிறவு மன்ன.

ஆல்-தச்சனாற் செய்யப் பட்டது சிறுமாவையம், கபிலராற் பாடப் பட்டது கவி; இவை வினை முதல். ஆன்-வாணிகத்தா னாயினான் காணத் தாற கொண்ட அரிசி; இவை கருவி முதல்.

இனி, ஒடு-"புலியொடு பொருத புன்கண்கூர் யானை" "நெய்யொடு விராய குய்புடை யடிசில்" எனக் கொள்க. ஆல் என்னும் உருபு ஆனாய்த் திரிந்த தொக்கும். பிறவு மன்ன. (ரு)

கஅ ஓதுங் குகர வுருபுநான் காவதஃ
தியாதிடத்து மீபொருளை யேற்குமாங்—கோதிலா
தின்னுருபைந் தாவ திதனினித் தன்மைத்தி
தென்னு மொருநான் கிடத்து.

எ-ன். நான்காம் வேற்றுமையும் ஐந்தாம் வேற்றுமையும் ஆமாறு உணர்த்துத னுதலிற்று.

இ-ள். குகர வுருபு நான்காம் வேற்றுமை; அஃது எவ்விடத்தும் ஈ பொருளை ஏற்ற நிற்கும்; இன் னுருபு ஐந்தாம் வேற்றுமை; அது தான் இதனின் இத்தன்மைத்து இது என்னும் உவமம், நீக்கம், எல்லை, ஏது என்னும் நான்கிடத்தும் வரும். எ-று.

அவை வருமாறு:— கரும்பிற்கு வேலி, சாத்தற்கு மக்களுடம் பட்டார், கடி சூத்திரத்திற்குப் பொன், வரிசைக்கு உழும் என்பன பிறவு மன்ன. ஊரிற் றீர்ந்தான், பனையின் வீழ்பழம் இவை நீக்கத்தின் கண் வந்தன. கருவூரின் கிழக்கு, மருவூரின் மேற்கு இவை எல்லைக் கண் வந்தன. காக்கையிற் கரிது களம்பழம், இதனின் இற்று இது இவை உவமைக்கண் வந்தன. முயற்சி யிறத்தலின் இசைநிலையாது, தவத்திற் பெற்றான் வீடு இவை ஏதுப் பொருட்கண் வந்தன. என்னை? "உவம நீக்க மெல்லை யேதுவென், றவைநான் கென்ப வைந்தா முருபே" என்றாராகலின்.

'கோதிலா' என்று மிகுத்துச் சொல்லிய வதனால், ஏதுப் பொருளிடத்து மூன்றாம் வேற்றுமையும் ஐந்தாம் வேற்றுமையும் ஒக்கும். அவை "வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன், கோனோக்கி வாழுங் குடி" (திருக்குறள், ருசஉ) என்புழி, வானோக்கி வாழும் என்றால் வானுடைய பயனோக்கி வாழும், வானினுடைய பயனோக்கி வாழும் எனக் கொள்க. பிறவு மன்ன. (சு)

கக அதுவென்ப தாறு முருபா மிதன
திதுவென் கிழமையிரண் டெய்தும்—விதிமுறையாற்
கண்ணென்ப தேழா முருபாகுங் காலநில
நண்ணும் வினையிடத்து நன்கு.

எ-ன். ஆறும் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் ஆமாறு உணர்த்துத னுதலிற்று.

இ-ள். அது வென்பது ஆறும் வேற்றுமை; அது தான் தற்கிழமையினும் பிறிதின் கிழமையினும் இதனது இது என்று நிற்கும். கண் என்பது ஏழாம் வேற்றுமை; அது காலத்தையும், வினைசெய்யிடத்தையும், நிலத்தையும் பற்றி வரும். எ-று.

அவை வருமாறு:— சாத்தனதுவாள், கொற்றனதுவேல்; இவை பிறிதின் கிழமை.

தற் கிழமை ஐந்து வகைப்படும்; ஒன்றுபல குழீஇய தற் கிழமையும், வேறுபல குழீஇய தற் கிழமையும், ஒன்றிய தற் கிழமையும். உறுப்பின் றற் கிழமையும், மெய்திரிந்தாகிய தற் கிழமையும் என. அவை வருமாறு:— ஒன்றுபல குழீஇய தற் கிழமை-எள்ளது குப்பை. வேறுபல குழீஇய தற் கிழமை-படையது குழாம். ஒன்றிய தற் கிழமை-நிலத்தது அகலம். உறுப்பின் றற் கிழமை-யானையது கோடு, மெய்திரிந்தாகிய தற் கிழமை-எள்ளது சாந்து. பிறவு மன்ன.

'விதிமுறையால்' என்று மிகுத்துச் சொல்லியவதனால் அது வென்பது விகாரப்பட்டு ஆது என்று நின்று நினது குதிரை நினது குதிரை, எனது வேல் எனது வேல் என வரும். ஆறும் வேற்றுமை அகரமாய் நிற்கவும் பெறும். அது வருமாறு:— உத்தியகண் கரிய, கோளரியகண் பெரிய, யானையகோடு பெரிய, ஆனேற்றகோடு கூரிய என்பன. பிறவு மன்ன.

ஏழாம் வேற்றுமை உருபுகண் என்றாராயினும், பலவும் இடப்பொருளைப் பற்றி வரும். அவை:— கண், கால், புறம், அகம், உள், உழை, கீழ், மேல், பின்சார், அயல், புடை, தேவகை, முன், இடை, கடை, தலை, வலம், இடம் இவை முதலாயின. அவை வருமாறு:—

ஊர்க்கண் இருந்தான், ஊர்க்கால் இருந்தான், ஊர்ப்புறத் திருந்தான், கையகத்துள்ளது கொடுத்தான், ஊருள்இருந்தான், சான்றோருழை யிருந்தான், மாளிகைக்கீழ் இருந்தான், மாளிகைமேல் இருந்தான், ஏர்ப் பின் சென்றான், காட்டுச்சார் ஓடுங்களிறு, சான்றோரயல் இருந்தான், தேர்ப்புடை வந்தான், [(தேவகை என்பது திசைக்கூற்று.) தேர்முன் சென்றான், வேந்தரிடை யிருந்தான், கோயிற்கடை சென்றான், தந்தை தலைச் சென்றான், கைவலத்துள்ளது வேல், பூசலிடத்து வென்றான் இவை இடத்தில் வந்தன. மாரியுள் வந்தான் என்பது காலம்பற்றி வந்தது. வாசினையில் வந்தான் என்பது வினையிடம்பற்றி வந்தது. பிறவு மன்ன. என்னை? "ஏழாகுவதே, கண்ணெனப் பெயரிய வேற் றுமைக்கிளவி, வினைசெய் யிடத்தி னிலத்திற் காலத்தி, னனைவகைக் குறிப்பிற் றோன்று மதுவே" "கண்கால் புறமக முள்ளுழை கீழ்மேல், பின்சா ரயல்புடை தேவகை யெனாஅ, முன்னிடை கடைதலை வலமிட மெனாஅ, வன்ன பிறவு மதன்பால வென்மனார்" (தொல், சொல், வேற்றுமையியல், ௨0, ௨க.) என்றாராகலின். (ரு)

வேற்றுமைமரபு

முற்றும்.

மூன்றாவது.

உருபுமயங்கியல்.

௨0 வேற்றுமை யொன்ற னுரிமைக்கண் வேறொன்று
தோற்ற லுருபு தொகவருத—லேற்றபொருண்
மாறினுந் தானிற்றல் வந்தொன்றி னென்றேற்ற
றேறவரு மெய்ந்நூற் றெளிவு.

என்பது சூத்திரம். இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், * உருபுமயங்கியல் என்னும் பெயர்த்து. இவ்வோத்தினுள், இத்தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின் அவ்வேற்றுமைகட்கு எய்தியதோர் இலக்கணம் உணர்த்துத னுதலிற்று.

---

* வேற்றுமை மயங்கியல் எனவும் பிரதி பேதம்.

இ-ள். ஒரு வேற்றுமைக்கு உரியவிடத்தே, பிறிதொரு வேற்றுமை தோற்றவும் பெறும்; வேற்றுமையுருபு தொக்கு நிற்கவும் பெறும்; வேற்றுமைப் பொருளை எதிர்மறுத்துச் சொன்னாலும், அவ்வேற்றுமை யாயே நிற்கவும் பெறும்; ஆறும் வேற்றுமையானது தன்னையொழியப் பிறிதினை ஏற்கவும் பெறும். எ-று.

அவற்றுட்சில வருமாறு:— தூணைச் சார்ந்தான் என்புழித், தூணின் கட் சார்ந்தான் என்றும், அரசரைச் சார்ந்தான் என்புழி, அரசர்கட் சார்ந்தான் என்றும், வாணிகத்தின் ஆயினான் என்புழி, வாணிகத்தான் ஆயினான் என்றுமாம். காட்டது யானை என்புழி, காட்டுள் யானை என்றும், நாகரது பலி என்புழி, நாகர்க்குப் பலி என்றுமாம். கள்ளரின் அஞ்சும் என்புழிக் கள்ளரை அஞ்சும் என்றுமாம். பிறவு மன்ன.

இனி உருபு தொக்கது:— நிலத்தைக் கடந்தான் என்புழி, நிலங் கடந்தான் என்றும், தாயொடு மூவர் என்புழித் தாய் மூவர் என்றும், நாகர்க்குப் பலி என்புழி நாகர் பலி என்றும், வரையின் வீழருவி என் புழி வரை வீழருவி என்றும், தெங்கினது காய் என்புழித் தேங்காய் என்றும், குன்றத்துக்கட் கூகை என்புழிக், குன்றத்துக் கூகை என்றும் அடைவே ஆறுருபும் தொக்கவாறு கண்டுகொள்க.

அறத்தை நோக்கும் என்புழி அறத்தை நோக்கான் என்றும், கோலாலளக்கும் என்புழிக் கோலால் அளவான் என்றும், சாத்தற்குக் கொடுக்கும் என்புழிச் சாத்தற்குக் கொடான் என்றும், கள்ளரின் அஞ் சும் என்புழிக் கள்ளரின் அஞ்சான் என்றும், கொற்றனது வேலாம் என்புழிக், கொற்றனது வேலன்று என்றும் மன்னர்கட் செல்லும் என் புழி, மன்னர்கட் செல்லான் என்றும் வேற்றுமைப் பொருளை எதிர் மறுத்துச் சொன்னவிடத்தும் வேற்றுமை அழியாது ஏற்றவாறு அடைவே கண்டு கொள்க.

சாத்தனது என்புழிச் சாத்தனதனை என்றும், சாத்தனதனான் என்றும், சாத்தனதற்கு என்றும், சாத்தனதனின் என்றும், சாத்தன தன்கண் என்றும் இவை ஆறும் வேற்றுமையிற் பிறிது வேற்றுமை ஏற்றவாறு கண்டு கொள்க. பிறவு மன்ன.

'தேறவரும்' என்று மிகுத்துச் சொல்லிய வதனால், இரண்டு பொருளை ஒக்க வினைகொடுத்துச் சொல்லுமிடத்து, ஒடுச்சொல்லினை உயர்ச்சியின் பின் வைத்துச் சொல்லுக. என்னை? "ஒருவினை யொடுச்சொ லுயர்பின் வழித்தே" (தொல், சொல், வேற்றுமை மயங்கியல், அ.) என்றாராகலின். அரசரோடு வந்தார் சேவகர், தாயொடு வந்தாள் மகள் என இவை உயிர்பின் வழி வந்தவாறு. நாயொடு வந்தான் நம்பி என இது உபகார வுயர்ச்சி பற்றி வந்தது. பிறவு மன்ன. (க)

உக இருசொல் விறுதி யிரண்டே ழலாத
வுருபு தொகாதென் றுரைப்ப—வுருபுதான்
றொக்க விடத்துடனே தொக்கும் விரியுமிடத்
தொக்கவிரி சொல்லு முள.

எ-ன். இதுவும் அப்பொருண்மேல் நின்றது.

இ-ள். இரண்டு சொல்வி னிடையின் எல்லா வுருபும் தொக்கும் விரிந்தும் நிற்குமென்றார். இனி இருசொல்லிறுதி இரண்டாம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் ஒழிய அல்லாத வேற்றுமைகள் விரிந்த நிற்கும் தொகப்பெறா; வேற்றுமைகள் தொகுமிடத்துச் சில சொற்களுடனே தொக்கும் விரியுமிடத்துக் கூடவிரிந்தும் நிற்குஞ் சொற்களும் உள என்றவாறு. எ-று.

அவை வருமாறு:— கடந்தான் நிலம், கடந்தான் நிலத்தை என்றும், இருந்தான் குன்றத்து, இருந்தான் குன்றத்துக் கண் என்றும் இருசொல் இறுதி இரண்டாம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் தொக்கும் விரிந்தும் நின்றன. இனிக் குறைத்தான் மழுவினால், வந்தான் சாத்தனொடு, கொடுத்தான் சாத்தற்கு, வலியன் சாத்தனின், ஆடை சாத்தனது என நான்கு வேற்றுமையும் இருசொல் விறுதியிற் றொகப்பெறாது விரிந்து நின்றவாறு. தொகிற் பொருள் வேறுபட்டுக் கெடும். இனிக் குதிரைத்தேர் என்புழி மூன்றும் வேற்றுமை தொக்கது. அது விரியுமிடத்துக், குதிரையாற் பூட்டப்பட்ட தேர் என்று சில சொல்லோடே விரிந்தது. கருப்புவேலி என்பதுமது. பிறவு மன்ன.

(உ)

௨௨ ஒன்றன்பே ரொன்றற் குரைப்பதா மாகுபெயர்
சென்றவைதாந் தம்முதலிற் சேர்தலோ—டொன்றாத
வேறொன்றிற் சேர்த லெனவிரண்டாம் வேற்கண்ணா
யீறு திரிதலுமுண் டுண்டு.

எ-ன். ஆகுபெயராமா றுணர்த்துத லுதலிற்று.

இ-ள். ஆகுபெயராவது ஒன்றன் பெயரை ஒன்றற்கு இட்டுச் சொல்லுமது; அதுதான் தன்னொடு தொடுத்த பொருண்மேல் வருதலும், தனக்கு எவ்வியைபும் இல்லாத தன்மேல் வருதலும் என இரண்டாம். அவை தாம் ஈறு திரிந்து நிற்கவும் பெறும். எ-று.

அவை வருமாறு:— கடுவினது காய் தின்றானைக் கடுத்தின்றான் என்றும், புளியினது பழந் தின்றானைப் புளித் தின்றான் என்றும் இவை தம்முதலொடு சார்ந்த ஆகு பெயர். பூநட்டு வாழும், இலை நட்டு வாழும். இவை சினையாகு பெயர். நீலம் அடுத்ததனை நீலம் என்றும், சிவப்பு அடுத்ததனைச் சிவப்பு என்றும், ஏறுபட்ட விடத்தை ஏறு என்றும், அடிபட்டதனை அடி என்றும், வெள்ளாளர் காணியிற் பிறந்ததனை 'வெள்ளாளர் காணி என்றும், சாலியனாற் செய்யப்பட்ட தனைச் சாலியன் என்றும், நாழியால் அளக்கப்பட்டதனை நாழி என் றும், துலாத்தால் எடுக்கப் பட்டதனைத் துலாம் என்றும் வருவன தம் முதலுக்கு அடையாய் வரும் ஆகு பெயர். இனித், தொல்காப்பியம், அவிநயம்வில்லி, வாளி என்பன ஈறு திரிந்து வந்தன. பிறவு மன்ன.

'சென்று' என்று மிகுத்துச் சொல்லியவதனால், இருபெய ரொட் டாய் வரும் ஆகு பெயரும் உள. அவை பொற்றொடி, வெள்ளாடை, கனங்குழை என்பன; அன்மொழித் தொகையாய்க் காட்டப்பட்டன வாயினும், ஆகு பெயர்த் தன்மைக்கு ஈங்குப் பெறும். என்னை? "முத லிற் கூறுஞ் சினையறி கிளவியுஞ், சினையிற் கூறு முதலறி கிளவியும், பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரு, மியன்றது மொழிதலு மிருபெய ரொட்டும், வினைமுத லுரைக்குங் கிளவியொடு தொகைஇ, யனைய மரபினவேயாகு பெயர்க் கிளவி" (தொல், சொல், வேற்றுமை மயங்கியல், ௩௧.) என்றாராகலின். (௩)

உருபுமயங்கியல்

முற்றும்.

நான்காவது.

விளிமரபு.

உரு ஈறு திரிதலு மீற்றய னீடலும்
வேறு வருதலு மெய்யியல்புங்—கூறு
மிரண்டீற்று மூவகைப்பேர் முன்னிலைக்கண் ணென்றூந்
திரண்டுவிளி யேற்குந் திறம்.

என்பது சூத்திரம். இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின்:— விளிமரபு என்னும் பெயர்த்து. இவ்வோத்தினுள், இத்தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின்:— விளிவேற்றுமையது பொதுவிலக்கணம் உணர்த்துத னுதலிற்று.

இ-ள். உயிரிறுதியும் ஒற்றிறுதியும் ஆகிய உயர்திணைப் பெயரும், அஃறிணைப் பெயரும், விரவுப் பெயரும் முன்னிலைக்கண் விளியேற்குமிடத்து, ஈறு திரிதலும், ஈற்றயல் நீடலும், பிறிதுவந் தடைதலும், இயல்பாதலும் என நான்கு வகைப்படும். எ-று. அவை மேற்சொல்லுதும். (க)

உச இகரமீ காரமா மையாயா மேயா
முகரவோ கார வுயிர்கள்—பகர்விளிக
ளண்மை யிடத்து மளபெடைப் பேர்க்கண்ணு
முண்மை யியல்பா யுறும்.

எ-ன். இ, ஐ, உ, ஓ என்னும் நான்கு வகைப்பட்ட உயிரீற்றுப் பெயரும் விளி ஏற்குமாறு உணர்த்துத னுதலிற்று.

இ-ள். இகர ஈற்றுப் பெயர் ஈகாரமாய் விளியேற்கும்; ஐகார ஈற்றுப் பெயர் ஆயாய் விளியேற்கும்; உகர ஈற்றுப் பெயரும் ஓகார ஈற்றுப் பெயரும் ஏகாரமாய் விளியேறகும். இவை நான்கும், அணியாரைக்கூவு மிடத்து, இயல்பாய் விளியேற்கும்; உயிரீற்று அளபெடைப் பெயரும் அவ்வளபெடுத்தபடியே விளியேற்கும். எ-று.

அவை வருமாறு:— நம்பி-நம்பீ எனவும், நங்கை-நங்காய் எனவும், வேந்து-வேந்தே எனவும், கோ-கோவே எனவும் விளியேற்றன. இவை அணியாரைக் கூவுமிடத்து, நம்பி வருக, நங்கை வருக, வேந்து வருக, கோ வருக என்று இயல்பாய் விளியேற்றன. தோழீஇ என்னும் அளபெடைப் பெயரும் அளபெடுத்தபடியே இயல்பாய் விளியேற்றதெனக் கொள்க. பிறவு மன்ன.

'உண்மை' என்று மிகுத்துச் சொல்லியவதனால், ஐகார ஈற்றுப் பெயர்களில் ஆண்டை என்னும் சொல்லீறும் பெயர்களும், முறைப் பெயர்களில் அத்தை அம்மை என்னும் பெயர்களும் ஏகாரம் பெற்றே விளியேற்கும் எனக் கொள்க அவை வருமாறு:— கூத்தாண்டை-கூத்தாண்டே என்றும், அத்தை-அத்தே என்றும், அம்மை-அம்மே என்றும் விளியேற்கும் எனக் கொள்க. பிறவு மன்ன. (உ)

உரு அன்னிறுதி யாவாகு மண்மைக் ககரமா
மின்னு முறைப்பெயரே லேயாகு—முன்னியல்பா
மானு மளபெடையு மானீற்றுப் பண்புதொழின்
மான்விழி யாயாய் வரும்.

எ-ன். ஒற்றீற்றுப் பெயர்களுள், னகர ஈற்றுப் பெயர் விளியேற்கு மாறு உணர்த்துத னுதலிற்று.

இ-ள். அன்னிறுதிப் பெயர் ஆவாய் விளியேற்கும்; அவை அணியாரைக் கூவுமிடத்து அகரமாய் விளியேற்கும்; அவை முறைப் பெயராயின் ஏகாரம் பெற்று விளியேற்கும்; ஆன் ஈற்றுப் பெயர் இயல்பாய் விளியேற்கும்; அளபெடைப் பெயர் அளபெடுத்த படியே இயல்பாய் விளியேற்கும்; ஆன் ஈற்றுப் பண்புப் பெயரும் தொழிற் பெயரும் ஆயாய் விளியேற்கும். எ-று.

அவை வருமாறு:— சாத்தன்-சாத்தா என்றும், கொற்றன்-கொற்றா என்றும் அன்னிறுதி ஆவாய் விளியேற்றது. சாத்த, கொற்ற என்று அணியாரைக் கூவுமிடத்து அகரமாய் விளியேற்றது. மகன், மருமகன் என்னும் முறைப் பெயர் மகனே, மருமகனே என ஏகாரம் பெற்று விளியேற்றன. சேரமான், மலையமான் என்னும் ஆன் ஈற்றுப் பெயர்கள் இயல்பாய் நின்று விளியேற்றன. அழாஅன், புழாஅன் என்னும்

அளபெடைப் பெயர்கள் இயல்பாய் நின்று விளியேற்றன. கரியான், செய்யான் என்னும் ஆன் ஈற்றுப் பண்புப் பெயர் கரியாய், செய்யாய் என ஆயாய் விளியேற்றன. உண்டான், தின்றான் என்னும் ஆன் ஈற்றுத் தொழிற் பெயர் உண்டாய், தின்றாய் என ஆயாய் விளியேற்றன.

'ஒன்றின முடித்த றன்னின முடித்தல்' என்பதனால், அன் என்னும் இறுதியும் ஆயாய் விளியேற்கும். பண்பினும் தொழிலினும் கரியன்-கரியாய், உடையன்-உடையாய் என வரும்.

'முன்' என்று மிகுத்துச் சொல்லியவதனால், இரண்டு குறிற்கீழ் வரும் அன்னீற்றுப் பெயர்கள் விளியேற்குமிடத்து ஏகாரம் பெற்று விளியேற்கும் என்றவாறு. அவை வருமாறு:— அயன்-அயனே, சிவன்-சிவனே, நளன்-நளனே, தரன்-தரனே, பரன்-பரனே என விளியேற்றன.

மகன்-மகனே என்று விளியேற்குமுடிவே இவற்றிற்கும் அமையாதோ எனின்:- அமையாது; அது முறைப்பெயராதலானும், முறைப்பெயர் இரண்டு குறிற்கீழல்லது வாராது என்னும் யாப்புறவு இன்மையானும், ஈண்டுச் சொல்லவேண்டிற்று. பிறவு மன்ன. (௫)

உகூ ஈராகு மர்ஆ ரிதன்மேலு மேகார
மோரோ விடத்துளதா மோங்களபாம்—பேர்க
ளியல்பாம் விளியேலா வெவ்வீற்றுப் பேரும்
புயல்போலுங் கூந்தலாய் போற்று.

எ-ன். ரகாரவீற்றுப் பெயர் விளியேற்குமாறும், விளியேலாப் பெயரும் உணர்த்துத னுதலிற்று.

இ-ள். அர் ஆர் என்னும் பெயர்கள் ஈராய் விளியேற்கும்; அவற்றுட் சில சொல் ஈரோடு ஏகாரம் பெற்று விளியேற்கும்; ரகார ஈற்று அளபெடைப் பெயர்கள் இயல்பாய் விளியேற்கும். சொல்லப்பட்ட எவ்வீற்றுப் பெயர்களினும் விளியேலாதனவும் உள. எ-று.

அவை வருமாறு:— அந்தணர்-அந்தணீர் என்றும், குறவர்-குறவீர் என்னும் அர் ஈராய் விளியேற்றது. சான்றார்-சான்றீர் என்றும்,

மூத்தார்-மூத்தீர் என்றும், பெரியார்-பெரியீர் என்றும் ஆர் ஈராய் விளியேற்றது. செட்டியார்-செட்டியீரே என்றும், கணியார்-கணியீரே என்றும் ஈரோடு ஏகாரம் பெற்று விளியேற்றன.

'ஓங்கு' என்று மிகுத்துச் சொல்லியவதனால், பண்புந் தொழிலும் ஆர் ஈறாயின், ஈரோடு ஏகாரம் பெற்று விளியேற்கும் எனக் கொள்க. கரியார்-கரியீரே, உண்டார்-உண்டீரே எனப் பண்பும் தொழிலும் ஈரோடு ஏகாரம் பெற்று விளியேற்றன.

மகாஅர், சிறாஅர் என்பன அளபெடுத்தபடியே இயல்பாய் விளியேற்றன. பிறவு மன்ன.

தான், அவன், இவன், உவன், யான், எவன், யாவன் எனவும்; அவர், இவர், உவர், எவர், யாவர் எனவும்; அவள், இவள், உவள், எவள், யாவள் எனவும்; நீ, நீர் எனவும் இவை விளியேலாத பெயர் என்றறிக. பிறவு மன்ன. (௬)

௨௭ ஈற்றய னீடும் ளளக்கடா மேகாரந்
தோற்று முறைப்பெயர்க டுன்னுங்கா—லாற்ற
வயனெடிதாம் பேரு மளபெடையாம் பேரு
மியல்பாம் விளிக்கு மிடத்து.

எ-ன். லகார வீற்றுப் பெயரும், ளகார வீற்றுப் பெயரும் விளியேற்குமாறு உணர்த்துத னுதலிற்று.

இ-ள். லகார வீறும், ளகார வீறும் விளியேற்கு மிடத்து ஈற்றெழுத்தின் அயலெழுத்தாகிய குற்றுயிர் நெட்டுயிராய் விளியேற்கும்; அவை முறைப் பெயராயின், ஏகாரம் பெற்று விளியேற்கும்; முன்பே அயனெடிதாம் பெயராயின் இயல்பாய் விளியேற்கும்; அளபெடைப் பெயராயின், அளபெடுத்தபடியே இயல்பாய் நின்று விளியேற்கும். எ-று.

அவை வருமாறு:— குரிசில்-குரிசீல், தோன்றல்-தோன்றால், மக்கள்-மக்காள் என ஈற்றயல் நீண்டு விளியேற்றன. மகள்-மகளே, மருமகள்-மருமகளே என முறைப் பெயர் ஏகாரம் பெற்று விளியேற்றன. திருமால், கருமால், சிறியாள், பெரியாள் இவை முன்பே அயல் நெடிலாய் நிற்றலால், இயல்பாய் விளியேற்றன.

'துன்னும்' என்று மிகுத்துச் சொல்லியவதனால், தொழிலும், பண்பும் ளகார வீறுயின், இயல்பாய் நின்று விளியேற்கும் என்றவாறு. அவை யாவன:— துணையிருந்தாள், வையமளந்தாள், செய்யாள், கரியாள் என்பன.

அளபெடைப் பெயர் "மாஅனிறம் போல மழையிருட் பட்டதே, கோஒன் குலக்கோடு கொண்டு" என அளபெடை அளபெடுத்தபடியே நின்று விளியேற்றது.

'ஆற்ற' என்று மிகுத்துச் சொல்லியவதனால், உயர்திணையிடத்து யகாரமாய் விளியேற்பனவும் உள. "விளங்குமணிக் கொடும்பூணாய்" என விளியேற்றது. பிறவு மன்ன. (ரு)

உஅ விரவுப்பே ரெல்லாம் விளிக்குங்கான் முன்னை
மரபிற்ற மஃறிணைப்பேர் வந்தான்—மரபிற்
கொளவருமே காரமுங் கூவுங்காற் செய்மைக்
களவிறப்ப நீளு மவை.

எ-ன். விரவுப் பெயரும், அஃறிணைப் பெயரும் விளியேற்கு மாறும், மூன்று வகைப் பெயரும் சேய்மைவிளி யேற்குமிடத்து மாத்திரை மிகுமென்பதூஉம் உணர்த்துத னுதலிற்று.

இ-ள். எல்லா வீற்று விரவுப் பெயரும் விளியேற்கு மிடத்து முன்பு உயர்திணைக்குச் சொன்னபடியே விளியேற்கும்; அஃறிணைப் பெயர் விளியேற்கு மிடத்து ஏகாரமும்பெற்று விளியேற்கும்; (ஏகாரமும் என்ற உம்மையால், உயர்திணைக்குச் சொன்னபடியே விளியேற்பனவும் உள) உயிரீற்றுப் பெயரும் ஒற்றீற்றுப் பெயரும் சேய்மை நிலத்தாரைக் கூவுமிடத்து, உயிர் பன்னிரண்டு மாத்திரையும் ஒற்றுப் பதினொரு மாத்திரையும் நீளும் என உணர்க. எ-று.

அவை வருமாறு:— சாத்தன்-சாத்தா, சாத்தி-சாத்தீ, தந்தை-தந்தாய் என விரவுப் பெயர் மேலே வந்து விளியேற்றன. பொன்-பொன்னே, கார்-காரே, அணில்-அணிலே, தேன்-தேனே என ஏகாரம் பெற்றும் அஃறிணை விளியேற்றன. தென்றல்-தென்றால், முல்லை-முல்லாய் என அஃறிணை உயர்திணைபோல விளியேற்றன. பிறவு மன்ன. (சு)

விளிமரபு
முற்றும்.

ஐந்தாவது
பெயர்மரபு.

உக பெயர்ச்சொல் வினைச்சொ லிடைச்சொ லுரிச்சொல்
லியற்சொன் முதனான்கு மெய்தும்—பெயர்ச்சொ
லுயர்திணைப்பே ரஃறிணைப்பே ரொண்விரவுப் பேரென்
றியலு மெனவுரைப்ப ரீங்கு.

என்பது சூத்திரம். இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின்:— பெயர்மரபு என்னும் பெயர்த்து. இவ்வோத்தினுள் இத்தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின்:— பெயர்ச் சொற்களது பகுதி உணர்த்துத னுதலிற்று.

இ-ள். பெயர்ச் சொல், வினைச் சொல், இடைச் சொல், உரிச் சொல் என்னும் நான்கினையும் இயற் சொல், திரி சொல், திசைச் சொல், வட சொல் என்னும் நான்கனோடும் உறழப் பதினாறும்; (அவை பெயரியற் சொல், வினையியற் சொல், இடையியற் சொல், உரியியற் சொல் எனவும்; பெயர்த்திரி சொல், வினைத்திரி சொல், இடைத்திரி சொல், உரித்திரி சொல் எனவும்; பெயர்த்திசைச் சொல், வினைத்திசைச் சொல், இடைத்திசைச் சொல், உரித்திசைச் சொல் எனவும்; பெயர்வட சொல், வினைவட சொல், இடைவட சொல், உரிவட சொல் எனவும் வரும்.) இவற்றுட், பெயர்ச் சொல் உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர் விரவுப் பெயர் என மூன்றுகூறும். எ-று.

என்னை? "இயற்சொற் றிரிசொற் றிசைச்சொல் வடசொலென், றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே" "அவற்று ளியற்சொற் றாமே, செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித், தம்பொருள் வழாமை யிசைக்குஞ் சொல்லே" "ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும், வேறு பொருள் குறித்த வொருசொல் லாகியும், மிருபாற் றென்ப திரிசொற் கிளவி" "செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந், தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி" "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ, யெழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" "சிதைந்தன வரினு மியைந்தன வரையார்" (தொல், சொல், எச்சவியல், க, ரு.) என்பனவற்றான் இயற்சொன்முதல் நான்கும் ஆமாறுணர்ந்து கொள்க. "பெயரெனப் படு

பவை பேசுங் காலை, உயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையு, மாயிரு திணைக்கு மோரன்ன வுரிமையு, மம்மூ வுருபின தோன்ற லாறே" என்பதாகலின்.

'ஒண்விரவுப் பெயர்' என்று மிகுத்துச் சொல்லியவதனால், இடைச் சொல்லும் உரிச் சொல்லும் தனித்து நடவா, பெயரொடும் வினையொடும் கூடி நடக்கும் என்றறிக. "சொல்லெனப் படுப பெயரே வினையென், றாயிரண் டென்ப வறிந்திசி னோரே" "இடைச்சொற் கிளவியு முரிச் சொற் கிளவியு, மவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப" (தொல், சொல், பெயரியல், க, ரு.) என்பவாகலின். வரலாறு:— அதுமன்-இது பெயரொடுவந்த இடைச் சொல். உறுகால்-இது பெயரொடுவந்த வுரிச்சொல். கொன்னே வந்தான்-இது வினையொடுவந்த இடைச் சொல். "நாம்வருந் துறைபோதல்" இது வினையொடுவந்த உரிச்சொல். இவை பெயரொடும் வினையொடும் நடைபெற்றவாறு. பிறவு மன்ன. (க)

௩0 சுட்டே வினாவொப்பே பண்பே தொகுனளர
வொட்டுப்பே ரெண்ணியற்பே ரொண்ணிலப்பே—ரிட்டிடையாய்
கூடியற்பேர் காலங் குலந்தொழிலின் பேர்மகடூஉ
வாடூஉ வுயர்திணைப்பே ராம்.

எ-ன். உயர்திணைப்பேர் ஆமாறுணர்த்துத லுதலிற்று.

இ-ள். சுட்டுப் பெயர்களும், வினாப் பெயர்களும், உவமைப் பெயர்களும், பண்பின் பெயர்களும் என்று இச் சொல்லப்பட்ட ன, ள, ர ஈறாகிய பெயர்களும், எண்ணியற் பெயர்களும், நிலப் பெயர்களும், கூடியற் பெயர்களும், காலப் பெயர்களும், குலப் பெயர்களும், தொழிற் பெயர்களும், ஆடூஉ, மகடூஉ என்னும் பெயர்களும் உயர்திணைப் பெயராம். எ-று.

அவை வருமாறு:— அவன், அவள், அவர், இவன், இவள், இவர், உவன், உவள், உவர் என இவை சுட்டுப் பெயர். எவன், எவள், எவர், யாவன், யாவள், யாவர் என இவை வினாப் பெயர். பொன்னனான், பொன்னனாள், பொன்னனார் என இவை உவமைப் பெயர். கரியான், கரியாள், கரியார், நெடியான், நெடியாள், நெடியார் என இவை பண்புப் பெயர். இவை ன, ள, ர ஈறாகிய நான்கு வகைப் பெயருமெனக் கொள்க. இனி எண்ணியற் பெயர்-ஒருவர், இருவர், மூவர், நால்வர்

என இவை முதலானவை. அம்பர்கிழான், வல்லங்கிழான் என இவை நிலப் பெயர். அவையகத்தார், அத்திகோசத்தார், மணிக்கிராமத்தார் என இவை கூடியற் பெயர். மகத்தான், மகத்தாள், மகத்தார், நாலாண்டையான், நாலாண்டையாள், நாலாண்டையார் என இவை காலப் பெயர். செங்கோன், செவ்வண்ணன் என இவை குலப் பெயர். உண்டான், உண்டாள், உண்டார் என இவை தொழிற் பெயர். ஆடூஉ, மகடூஉ என்பன உயர்திணைப் படர்க்கைப் பெயர் என அறிக. (உ)

௩௧ பகரு முறைசினைப் பல்லோர்நம் மூர்ந்த
விகரவை கார விறுதி—யிகரமிறுஞ்
சாதிப்பெண் பேர்மாந்தர் மக்களுந் தன்மையுட
ஞதி யுயர்திணைப்பே ராம்.

எ-ன். உயர்திணைப் பெயரொழிவு கூறுதலை யுணர்த்துத லுத விற்று.

இ-ள். பல்லோரைக் குறித்துவரும் முறைப் பெயரும், சினைப் பெயரும், நம்மூர்ந்து வரும் இகர, ஐகார வீற்றுப் பெயரும், இகர வீற்றுச் சாதிப்பெண் பெயரும், மாந்தர், மக்கள் என்னும் பெயரும், தன்மைப் பெயரும், உயர்திணைப் பெயராம். எ-று.

அவை வருமாறு:— தந்தையர், தாயார் இவை முறைப் பெயர். பெருங்காலர், பெருங்கையர் இவை சினைப் பெயர். நம்பி, நங்கை இவை நம்மூர்ந்து வந்த இகர ஐகாரப் பெயர். பார்ப்பனி, குறத்தி, மறத்தி இவை இகர வீற்றுச் சாதிப்பெண் பெயர். மாந்தர், மக்கள் என்பன அவை. யான், யாம், நாம் இவை தன்மைப் பெயர். இவை உயர் திணைப் பெயரா மென்றவாறு. (௩)

௩௨ ஆதியினிற் சுட்டா முகரவை காரப்பே
ரோதியவெண் ணின்பே ருவமைப்பேர்—தீதிலாச்
சாதிப்பேர் சார்ந்த வினைவுறுப்பின் பேர்தலத்தோ
ரோதிய வஃறிணைக்கா முற்று.

எ-ன். அஃறிணைப் பெயர் ஆமாறுணர்த்துத லுதலிற்று.

இ-ள். சுட்டு முதலாகிய உகர ஐகார வீற்றுப் பெயரும், எண்ணின் பெயரும், உவமைப் பெயரும், சாதிப் பெயரும், வினைப் பெயரும், உறுப்பின் பெயரும் இவை அஃறிணைப் பெயராம். எ-று.

அவை வருமாறு:— அது, இது, உது, அவை, இவை, உவை- இவை உகர ஐகார வீற்றுச் சுட்டுப் பெயர். ஒன்று, இரண்டு, மூன்று— இவை எண்ணின் பெயர். பொன்னன்னது, பொன்னன்னவை— இவை உவமைப் பெயர். நாய், நரி, புல்வாய்— இவை சாதிப் பெயர். எது, எவை, யாது, யாவை— இவை வினுப் பெயர். பெருங் கோட்டது, பெருங் கோட்டவை— இவை உறுப்பின் பெயர். இவை அஃறிணைப் படர்க்கைப் பெயராமாறு அடைவே கண்டு கொள்க. (ச)

௫௫ இயற்பேர் சினைப்பேர் சினைமுதற்பே ரென்று
மயக்கிலா மூன்றனையும் வைத்துக்—கயற்கண்ணாய்
பெண்ணுணே பன்மை யொருமையொடு பேர்த்துறழ
நண்ணும் விரவுப்பேர் நன்கு.

எ-ன். விரவுப் பெயர் ஆமாறுணர்த்துத னுதலிற்று.

இ-ள். பெண், ஆண், பன்மை, ஒருமை என்னும் நான்கனேடும் இயற் பெயர், சினைப் பெயர், சினை முதற் பெயர் என்னும் மூன்றனையும் உறழப் பன்னிரண்டும் விரவுப் பெயராம். எ-று.

வரலாறு:— பெண்மை யியற் பெயர், பெண்மைச் சினைப் பெயர், பெண்மை சுட்டியச் சினை முதற் பெயர் எனவும், ஆண்மை யியற் பெயர், ஆண்மைச் சினைப் பெயர், ஆண்மை சுட்டிய சினை முதற் பெயர் எனவும், பன்மை யியற் பெயர், பன்மைச் சினைப் பெயர், பன்மை சுட்டிய சினை முதற் பெயர் எனவும், ஒருமை யியற் பெயர், ஒருமைச் சினைப் பெயர், ஒருமை சுட்டிய சினை முதற் பெயர் எனவும் இவை பன்னிரண்டும் விரவுப் பெயராம் என்றவாறு.

அவை வருமாறு:— சாத்தி-இயற் பெயர்; முடத்தி-சினைப் பெயர்; முடக் கொற்றி-சினை முதற் பெயர் என்னும் பெண்மைப் பெயர். வந்தாள் என்றும், வந்தது என்றுமாம். என்னை? "பெண்மை சுட்டிய வெல்லாப் பெயரு, மொன்றற்கு மொருத்திக்கு மொன்றிய நிலையே" (தொல், சொல், பெயரியல், உ௬.) என்ருராகலின். சாத்தன்-இயற் பெயர், முடவன்-சினைப் பெயர், முடக் கொற்றன்-சினை முதற் பெயர் என்னும் ஆண்மைப் பெயர், வந்தான் என்றும் வந்தது என்றுமாம். என்னை? "ஆண்மை சுட்டிய வெல்லாப் பெயரும், ஒன்றற்கு மொருவற்கு மொன்றிய நிலையே" (தொல், சொல், பெயரியல், உஎ.) என்ரு

ராகலின். யானை-இயற் பெயர், நெடுங் கழுத்தல்-சினைப் பெயர், நெடுந் தாள் யானை-சினை முதற் பெயர் என்னும் பன்மைப் பெயர் வந்தான், வந்தாள், வந்தன, வந்தது என்றுமாம். என்னை? "பன்மை சுட்டிய வெல்லாப் பெயரு, மொன்றே பலவே யொருவ ரென்னு, மென்றிப் பாற்கு மோரன் னவ்வே" (தொல், சொல், பெயரியல், உஅ) என்று ராகலின். கோதை-இயற் பெயர், செவியிலி-சினைப் பெயர், கொடும்புற மருதி-சினை முதற் பெயர் என்னும் ஒருமைப் பெயர் வந்தான், வந்தாள், வந்தது என்றும். என்னை? "ஒருமை சுட்டிய வெல்லாப் பெயரு, மொன்றற்கு மொருவற்கு மொன்றிய நிலையே" (தொல், சொல், பெயரியல், உகூ.) என்று ராகலின். (௫)

௬௬ தந்தைதா யென்பனவுஞ் சார்ந்த முறைமையால்
வந்த மகன்மகளோ டாங்கவையு—முந்திய
தாந்தானு நீநீயி ரென்பனவுந் தாழ்குழலா
யாய்ந்த விரவுப்பே ராம்.

எ-ன். இதுவும் விரவுப் பெயரொழிபு கூறுதலையுணர்த்து த னுதலிற்று.

இ-ள். தந்தை, தாய் என்பனவும்; முறைமைக்கண் வந்த மகன், மகள், என்பனவும்; தாம், தான் என்பனவும்; நீ, நீயிர் என்பனவும் விரவுப் பெயராம். எ-று.

அவை வருமாறு:— தந்தை வந்தான், தந்தை வந்தது; தாய் வந்தாள், தாய் வந்தது; சாத்தி மகன் வந்தான்; சாத்தி மகன் வந்தது; சாத்தி மகள் வந்தாள்; சாத்தி மகள் வந்தது; தாம் வந்தார், தாம் வந்தன; தான் வந்தான், தான் வந்தது என. என்னை? "பெண்மை முறைப்பெய ராண்மை முறைப்பெயரென், றாயிரண் டென்ப முறைப் பெயர் நிலையே" (தொல், சொல், பெயரியல், உ௫.) "தாமென் கிளவி பன்மைக் குரித்தே" "தானென் கிளவி யொருமைக் குரித்தே" (தொல், சொல், பெயரியல், உகூ, ௩௦.) என்று ராகலின். நீ வந்தாய் என்பது ஒருவனையும், ஒருத்தியையும், ஒன்றனையும், நீயிர் வந்தீர் என்பது பலரையும், பலவற்றையும் விளக்கும். என்னை? "நீயிர் நீயென வரூஉங் கிளவி, பாறெரி பிலவே யுடன்மொழிப் பொருள" "அவற்றுள், நீயென் கிளவி யொருமைக் குரித்தே, ஏனைக்கிளவி பன்மைக் குரித்தே" (தொல்,

சொல், பெயரியல், ௩௪, ௩௫, ௩௬.) பிறவு மன்ன. நீ நீயிர் என்பன முன்னிலையாகவும், அல்லாதன படர்க்கையாகவுங் கொள்க. (௬)

௩௫ பேராம் பெயர்பெயர்த்துப் பேர்த்தா மொடுவோடா
நீராகு நீயி ரெவனென்ப—தோருங்கா
லென்னென்னை யென்றாகும் யாமுதற்பே ராமுதலா
மன்ன பொழுதுபோ தாம்.

எ-ன். பழையவாய் நடை பெற்றுவருஞ் சொற்களிற் றிரிந்து நடப்பனவற்றை வழுவல்லவென்று அமைத்தலை யுணர்த்து தனுதலிற்று.

இ-ள். பெயர் என்னுஞ் சொல் பேர் என்றும், பெயர்த்து என்னுஞ் சொல் பேர்த்து என்றும், ஒடு என்னுஞ் சொல் ஓடு என்றும், நீயிர் என்னுஞ் சொல் நீர் என்றும், எவன் என்னுஞ் சொல் என் என்றும் என்னை என்றும், பொழுது என்னுஞ் சொல் போது என்றும் திரிந்தன; யா முதற் பெயர் ஆ முதலாயும் வரும். எ-று.

அவை வருமாறு:— யானை, யாறு, யாமை, யாடு, யார், யார்த்தல் என்பன யா முதல் திரிந்து ஆனை, ஆறு, ஆமை, ஆடு, ஆர்த்தல் என ஆ முதலாயின. இவை வழுவல்ல என்க. பிறவு மன்ன.

'ஒரும்' என்று மிகுத்துச் சொல்லியவதனால், காலங்களைப்பற்றித் திரிந்துவருஞ் சொற்களே யன்றித் தோன்றுவனவும், கெடுவனவும், இயல்பாவனவும் உள. அவையாவன:— சகர முதலாய சொற்கள் முற்காலத்தின்றிப் பின்பு தோன்றின: அழாஅன், புழாஅன், குயின், வயின் என்பன முற்காலத்து நடந்து இக்காலத்துக் கெட்டன. சோறு, கூறை, பால், பழம் என்பன இயல்பாயின. நிலம், நீர், தீ, வளி, வான் என்பனவும் அது. பிறவு மன்ன. (எ)

௩௬ பாங்கார் பெயர்வினை கொண்டன்றிப் பாறேன்று
வாங்கு விரவுப்பே ரஃறிணைப்பே—ரோங்கிய
கள்ளொடு வந்தா லிருதிணைக்கும் பன்மைப்பா
லொள்ளிழையாய் தோன்றலு முண்டு.

எ-ன். மூன்று பகுதிப் பெயர்க்கும் தோன்றுவதோர் இலக்கணம் உணர்த்துத னுதலிற்று.

இ-ள். விரவுப் பெயரும், அஃறிணைப் பெயரும், பெயரையும் வினையையும் கொண்டன்றிப் பாறேன்று; அஃறிணைப் பெயர் கள்ளொடு வந்தாற் பன்மைப் பாறேன்றும்; உயர்திணை ஒருமைப் பெயரும் ஓரோவழிக் கள்ளொடு வந்தாற் பன்மைப் பாறேன்றுவனவும் உள. எ-று.

அவைவருமாறு:— சாத்தன் என்றால் இன்னபால் என்றறியலாகாது; அதனை வினைதலைப்பெய்து வந்தான், வந்தது என்றறிக; வினைதலைப்பெய்து அறிந்தவாறு. சாத்தன்—ஒருவன், ஒன்று எனப்பெயர்தலைப்பெய்து அறிந்தவாறு, இனி, வினைதலைப்பெய்தும் பெயர்தலைப்பெய்தும் சாத்தி என்பதையும் இவ்வண்ணமே அறிந்துகொள்க. இவை விரவுப்பெயர். இனிப், பசுவென்றாற் பாறேன்றுது; அதனை வினைதலைப்பெய்து வந்தது, வந்தன என ஒருமை பன்மையறிக. இனிப், பசு - ஒன்று, பல என்று பெயர்தலைப்பெய்தும் அறிக. என்னை? "திணையும் பாலுந் தெரியாநின்றுழி, வினையும் பெயரும் வேற்றுமை விளக்கும்." என்றாராகலின். பசுக்கள், மரங்கள், கற்கள், எனக் கள்ளொடுவந்து அஃறிணைப் பன்மைப்பாறேன்றின. ஆண், பெண் என்பன உயர்திணை ஒருமையே யாயினும் ஆண்கள் பெண்கள் என உயர்திணைப் பன்மையாயின. பிறவுமன்ன.

'தோற்றலுமுண்டு' என்ற உம்மையாற்றேன்றுமையும் உண்டோ எனின்:— உண்டு; அது உயர்திணையிடத்து அடிகள், முனிகள் எனக் கள்ளொடும் வந்து உயர்திணை யொருமையாயிற்று. என்னை? "கள்ளென்னிறுதி யிருதிணைப் பன்மையுங், கொள்ளும் பகரவகாமுமற்றே" என்றாராகலின். (அ)

௩௭ ஆய்ந்த வுயர்திணைப்பே ராவோவாஞ் செய்யுளிடை
யேய்ந்தநிகழ் காலத் தியல்வினையால்—வாய்ந்த
வுயர்திணைப் பாலொருமை தோன்றும்விர வுப்பே
ரியலும் வழக்கி னிடத்து.

எ - ன். உயர்திணைப் பெயர்க்கு எய்திய தோரிலக்கணம் உணர்த்துதனுதலிற்று.

இ - ள். உயர்திணைப்பெயர் செய்யுளிடத்து ஆகாரம் ஓகாரமாய் நடக்கும்; விரவுப்பெயர் நிகழ்காலத்த வினையாற்சொன்னாற் பொதுப்பட்டு நில்லாதே உயர்திணையொருமை தோன்றுவனவும். உள எ - று.

அவைவருமாறு:— வில்லான், வில்லோன், தொடியாள், தொடியோள்; சான்றார், சான்றோர்; என ஆ ஓ ஆனவாறு கண்டுகொள்க. என்னை? "ஆவோ வாகும் பெயருமா ருளவே, யாயிட னறிதல் செய்யுளுள்ளே" (தொல், சொல், பெய, ௩௧). என்றாராகலின். சாத்தன்

உழும், சாத்தி கறக்கும் என்றூற் பாலறிய வாரா; அவை சாத்தன் எழுதும், வாசிக்கும்; சாத்தி சாந்தரைக்கும், பூத்தொடுக்கும் என உயர்திணை யொருமை தோன்றினவாறு கண்டுகொள்க. "நிகழூஉ நின்ற பால் வரைக்கிளவியி, னுயர்திணை யொருமை தோன்றலு முரித்தே, யன்னமரபின் வினைவயி னான" (தொல், சொல், பெய, கக). என்றாராகலின். (கூ)

பெயர்மரபு

முற்றும்.

ஆறுவது.

வி னை ம ர பு.

கூஅ இறப்பு நிகழ்வெதிர்வாங் காலங்க ளேற்றுங்
குறிப்பு முருபேற்றல் கூடாத்—திறத்தவுமாய்
முற்றெச்ச மென்றிரண்டாய் மூவகைத்தாய் மூன்றிடத்து
நிற்கும் வினைச்சொற்க ளோர்ந்து.

என்பது சூத்திரம். இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின்:— வினைமரபு என்னும் பெயர்த்து. இவ்வோத்தினுள், இத்தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின்:—வினைச்சொற்களுக்குப் பொதுவிலக்கணம் உணர்த்து தனுதலிற்று.

இ-ள். இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம், என்னும் காலங்களை ஏற்றுவரும் வினைச்சொல்லாகியும், காலம் விளங்காது நிற்கும் வினைக்குறிப்புச் சொல்லாகியும், உருபேலாத தன்மையவாகியும், வினைமுற்றுச் சொல்லும் வினையெச்சச் சொல்லும் என்று சொல்லப்பட்ட உயர்திணை வினையும் அஃறிணைவினையும் விரவுவினையுமாகித், தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூன்றிடத்தும் நடக்கும் வினைச்சொல். எ-று.

என்னை? "வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது, நினையுங்காலைக் காலமொடு தோன்றும்" "காலந் தாமே மூன்றென மொழிப"

"இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்று, வம்முக் காலமுங் குறிப்பொடு கொள்ளு, மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே" "குறிப்பினும் வினையினு நெறிப்படத் தோன்றிக், காலமொடு வரூஉம் வினைச்சொல் லெல்லா, முயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமையு, மாயிரு திணைக்கு மோரன்ன வுரிமையு, மம்மூ வுருபின தோன்றலாறே" (தொல், சொல், வினை க—ச). என்றாராகலின். (க)

௩௧ அம்மாமெம் மேமுங் கடதறமே லாங்கணைந்த
வும்மு முளப்பாட்டுத் தன்மையாந்—தம்மொடு
புல்லுங் குடுதுறுவு மென்னேனும் பொற்றொடியா
யல்லுந் தனித்தன்மை யாம்.

எ-ன். உளப்பாட்டுத் தன்மையும், தனித்தன்மையும் ஆமாறு உணர்த்துதனுதலிற்று.

இ-ள். அம், ஆம், எம், ஏம், என்னும் இறுதிவினைச்சொல்லும், கடதறக்களை ஊர்ந்துவந்த உம்மையிறுதியாகிய வினைச்சொல்லும், தன்னையும் பிறரையும் உளப்படுக்கும் உளப்பாட்டுத் தன்மைச் சொல்லாம்; குடுதுறு என்னும் நான்குமிறுதியாகிய குற்றியலுகரமும், என், ஏன், அல் என்பன இறுதியாய் வரும் வினைச்சொல்லும் தனித்தன்மையாம், எ-று.

அவைவருமாறு:— அம் - உண்டனம், உண்ணாநின்றனம், உண்குவம்; ஆம் - உண்டாம், உண்ணாநின்றாம், உண்பாம்; எம் - உண்டனெம், உண்ணாநின்றனெம், உண்குவெம்; ஏம் - உண்டேம், உண்ணாநின்றேம், உண்பேம் எனவும்; உம்மொடுவரூஉம் கடதறக்கள்—உண்கும், உண்டும், வருதும், சேறும், எனவும் வருவன, தன்னையும் முன்னின்றாரையும் படர்க்கையாரையும் உளப்படுக்கும் உளப்பாட்டுத் தன்மையென அறிக. உண்குயான், உண்டுயான், வருதுயான், சேறுயான், எனவும்; என் - உண்டனென்; உண்ணாநின்றனென், உண்குவென் எனவும்; ஏன் - உண்டேன், உண்ணாநின்றேன், உண்பேன் எனவும்; அல் - உண்பல், தின்பல் எனவும் இவை தனித்தன்மை.

கூறுவன் என்று தனித்தன்மை சொன்னாரும் உளராலோவெனின்:—இக்காலத்து அல்வினை, அன்னாய் நடக்கவும்பெறும்; என்னை? "அல்வினை யன்னாய்த் திரியவும் பெறுமே" உ-ம். 'கூறுவன்' என்றார் அமுதசாகரர். (உ)

௬0 ஆங்குரைத்த வன்னு னு மள்ளாளும் அர்ஆர்ப
பாங்குடைய மூப்பாற் படர்க்கையாங்—தேங்குழலாய்
யாரெனுஞ்சொன் முப்பாற்கு மெய்து மொருவரென்ப
தோரு மிருபாற் குரித்து.

எ-ன். உயர்திணைப் படர்க்கை மூப்பாலாமாறும், யார் என்னும் சொல்லும் ஒருவர் என்னும் சொல்லும் நடைபெறுமாறும் உணர்த்துத னுதலிற்று.

இ-ள். முன் சொல்லிப் போந்த அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப என்னும் ஈறுடைய வினைச்சொற்கள் உயர்திணை முப்பாற் படர்க்கைக்கும் அடைவே உரிய; யார் என்னும் சொல் அம்மூப்பாற்கும் உரித்து; ஒருவர் என்னும் சொல் ஒருவன் ஒருத்தி என்னும் இரண்டு பாற்கும் உரித்து. எ-று.

அவை வருமாறு:— அன் - உண்டனன், உண்ணாநின்றனன், உண்குவன்; ஆன் - உண்டான், உண்ணாநின்றான், உண்பான்; கரியன் செய்யன், கரியான் செய்யான் எனவும் அன்னும் ஆனும் ஒருவன் படர்க்கையாயின. இனி, அள் - உண்டனள், உண்ணாநின்றனள், உண்குவள்; ஆள் - உண்டாள், உண்ணாநின்றாள், உண்பாள்; கரியள் செய்யள், கரியாள் செய்யாள் எனவும் அள் ஆள் ஒருத்திப் படர்க்கையாயின. அர் - உண்டனர், உண்ணாநின்றனர், உண்குவர்; ஆர் - உண்டார், உண்ணாநின்றார், உண்பார்; கரியர் செய்யர், கரியார் செய்யார், உண்ப தின்ப என அர் ஆர் ப பல்லோர் படர்க்கையாயின. யார் அவன், யார் அவள், யார் அவர் என யார் என்னும் சொல் மூன்றுபாற்கும் ஏற்றவாறு கண்டுகொள்க. "யாஅ ரென்னும் வினாவின் கிளவி, யுயர்திணை மருங்கின் முப்பாற்கு முரித்தே" (தொல், சொல், வினை, ௩௩) என்றாராகலின். ஒருவனையும் ஒருவர் வந்தாரென்ப; ஒருத்தியையும் ஒருவர் வந்தாரென்ப; அதனல், ஒருவர் என்பது இரு பாற்கும் உரித்தானவாறு கண்டுகொள்க. என்னை? "ஒருவ ரென்னும் பெயர்நிலைக் கிளவி, யிருபாற்கு முரித்தே தெரியுங் காலை" "தன்மை சுட்டிற் பன்மைக் கேற்கும்" (தொல், சொல், பெய, ௩௬, ௩௭.) என்றாராகலின்.

வினைச்சொல்லதிகாரத்தே பெயர்ச் சொல்லாராய்ந்தது என்னையோ வெனின்;—முப்பாற்கும் உரிய சொல்லாய்ந்த அடைவே இருபாற்கும் உரியசொல் ஆராய்ந்தான்; அது "ஒப்பின் முடித்த லப்பொருளாகும்." என்னும் தந்திரவுத்தியாற் பெறுமென்றவாறு.

உயர்திணைத் தன்மை வினையைச்சொல்லி முன்னிலைவினையைச் சொல்லாதே படர்க்கைவினையைச் சொல்லியது என்னையோவெனின், அவை இரண்டுதிணைக்கும் விரவுவினை ஆதலாற் போக்கிச் சொல்லுதும். (௩)

௪௧ சொன்னஅ ஆவத் துடுறுவு மஃறிணையின்
பன்மை யொருமைப் படர்க்கையாம்—பின்னை
யெவனென் வினுவவ் விருபாற் பொருட்குஞ்
சிவணுதலாந் தொன்னூற் றெளிவு.

எ-ன். உயர்திணைத் தன்மையும் படர்க்கையும் உணர்த்தி அஃறிணைப் படர்க்கைவினை உணர்த்துதனுதலிற்று.

இ-ள். சொல்லப்பட்ட அ, ஆ, வ இறுதியாகிய வினைச்சொல்லும், துடுறு இறுதியாகிய வினைச்சொல்லும் அஃறிணைப் பன்மைப் படர்க்கையும், ஒருமைப்படர்க்கையும் ஆம்; எவன் என்னும்சொல் அவ்விருபாற்கும் உரித்து எ-று.

அவைவருமாறு;—அ-உண்டன, உண்ணாநின்றன, உண்பன, கரிய, செய்ய; ஆ-உண்ணா, தின்ணா; வ-உண்குவ, தின்குவ; என அ, ஆ, வக்கள் அஃறிணைப்படர்க்கைப் பன்மையாயின. து உண்டது, உண்ணாநின்றது, உண்பது, கரிது, செய்து; று-கூயிற்று, தாயிற்று; டு-குண்டுகட்டு, குறுந்தாட்டு; எனத்துறுடுக்கள் அஃறிணை யொருமைப்படர்க்கையாயின. எவன் அது, எவன் அவை என எவன் என்னும் வினா அவ்விருபாற்கும் ஏற்றவாறு கண்டுகொள்க. என்னை? "அத்திணை மருங்கி னிருபாற் கிளவிக்கு, மொக்கு மென்ப வெவனென் வினாவே" (தொல், சொல், பெய-௨௨) என்றாராகலின். (௪)

௪௨ மின்னுமிர் ஈரும் விளம்பு மிருதிணையின்
முன்னிலைப் பன்மைக்கா மொய்குழலாய்—சொன்ன
வொருமைக்கண் முன்னிலையாம் இஐஆய் உண்சேர்
பொருவென் பனவும் புகல்.

எ-ன். உயர்திணைவினையும் அஃறிணைவினையும் உணர்த்தியமுறையே விரவுவினை உணர்த்துவான் எடுத்துக்கொண்டார்; அவற்றுள், இச்சூத்திரம் முன்னிலைப்பன்மையும் முன்னிலை யொருமையும் ஆமாறு உணர்த்துதனுதலிற்று.

இ-ள். மின், இர், ஈர், இறுதியாய் வரும் வினைச்சொற்கள் இருதிணைக்கு முன்னிலைப்பன்மையாம்; இ, ஐ, ஆய் இறுதியாய் வரும் வினைச்சொற்கள் முன்னிலையொருமையாம்; உண், சேர், பொரு என்பனவும் முன்னிலையொருமையாம். எ-று.

அவை வருமாறு:— மின்-உண்மின், தின்மின் என்றும், இர்-உண்டனிர் உண்ணாநின்றனிர், உண்குவிர் என்றும், ஈர்-உண்டீர், உண்ணாநின்றீர், உண்பீர் என்றும், மின், இர், ஈர் இறுதியாய் வரும் வினைச்சொற்கள் இரண்டு திணைக்கும் முன்னிலைப்பன்மையாயினவாறு கண்டுகொள்க. இ-உண்டி, தின்றி, வருதி, சேறி என்றும், ஐ-உண்டனை, உண்ணாநின்றனை, உண்குவை என்றும், ஆய்-உண்டாய், உண்டு நின்றாய், உண்பாய் என்றும், உண், சேர், பொருள் என்றும் இ, ஐ, ஆய், உண், சேர், பொருள் என்பன இருதிணைக்கும் முன்னிலை யொருமை விரவு வினையாயிற்று. பிறவுமன்ன.

'விளம்புமிருதிணை' என்று மிகுத்துச் சொல்லியவதனால், இருதிணை வினைகளும் பலபொருள்கள் ஏற்றுவரும்; என்னை? "வினையே செய்வது செயப்படு பொருளே, நிலனே காலங் கருவி யென்றா, இன்னதற் கிதுபயனாக வென்னு, மன்ன மரபி னிரண்டொடுந் தொகைஇ, யாயெட் டென்ப தொழின்முத னிலையே" (தொல், சொல், வேற்றுமைமயங்கியல்-உகூ) என்றாராகலின். வாலாறு-வனைந்தான் என்புழி, வனைதற்றொழிலும் செய்வானும் செயப்படுபொருளும் செய்யுமிடமும் காலமும் கருவியும் இன்னதற்கு என்றும் இன்னபயனுக்கு என்றும் இவ்வெட்டுப் பொருளும் நடைபெற்றன. இவ்வெட்டிற்சில குறைந்துவருவனவும் உள. என்னை? "வழங்கியன் மருங்கிற் குன்றுவ குன்றும்" என்றாராகலின். கொடியாடிற்று என்றாற் சில குறைந்தன. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. (ரு)

சுக செய்து செயச்செய்யாச் செய்யிய செய்தெனச்
*செய்பு செயின்செயற் கென்பனவும்—மொய்குழலாய்
பின்முன்பான் பாக்கும் பிறவும் வினையெச்சச்
சொன்முன் வகுத்தோர் துணிவு.

எ-ன். வினையெச்சமாமாறு உணர்த்துதனுதலிற்று. (இதுவும் விரவுவினை யெனக.)

இ-ள். செய்து என்றும், செய என்றும், செய்யா என்றும், செய்யிய என்றும், செய்தென என்றும், செய்பு என்றும், செயின் என்றும், செயற்கு என்றும், பின் முன் பான் பாக்கு என்றும் வருவனவும், பிறவும் இருதிணைக்கும் வினையெச்சமாம். எ-று.

'துணிவு' என்று பிருத்துச் சொல்லியவதனால், செய்து என்னும் வினையெச்சமும் செய்யா என்னும் வினையெச்சமும் செய்பு என்னும் வினையெச்சமும் முதல்வினை கொண்டன்றி முடியா; ஏனையெச்சங்கள் வினைமுதலானும் வந்தியையும் வினைநிலையானும் முடியும் எனக்கொள்க.

அவை வருமாறு:— செய்து என்னும் எச்சம் உழுது வந்தான் செய்யா என்னும் எச்சம் உண்ணு வந்தான்; செய்பு என்னும் எச்சம் உண்குபு வந்தான் இவை வினைமுதல் கொண்டுவந்தன. அன்றியும், இவை மூன்றும் சினை வினை தோன்றினவிடத்துச் சினையொடு முடியாது முதலொடு முடியினும் அமையும்; முதலொடு முடியாது சினையொடு முடியினும் அமையும். அவை:— கையிற்று வீழ்ந்தது என்பது கையிற்று வீழ்ந்தான் என்றுமாம். கையிறு வீழ்ந்தது என்பது கையிறு வீழ்ந்தான் என்றுமாம். கையிறுபு வீழ்ந்தது என்பது கையிறுபு வீழ்ந்தான் என்றுமாம். ஏனையெச்சங்கள் வருமாறு:— மழை பெய்தென அறம் பெற்றது இதற்கு வினைமுதல் மழை யென்க. இது வினைமுதல் கொண்டு முடிந்தது. மழை பெய்தென உலகம் ஆர்த்தது; இது பிறவினைகொண்டு முடிந்தது. பிறவும் இம்முடிவு காட்டி முடிக்க. தேடினபின் சென்றான், தேடின முன் வந்தான், உண்பான் வந்தான், உண்பாக்கு வந்தான் எனப்பின்,

* "செய்புசெ யின்செ யியர்செ யற்கும்" எனவும் பாடம்.

மூன், பான், பாக்கு வந்தவாறு. 'செய்பாக்கறிந்து' என்றார் பிறரும் எனக்கொள்க. "செய்து செய்யூச் செய்பு செய்தெனச், செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென, வவ்வகை யொன்பதும் வினையெஞ்சு கிளவி" பின்முன் கால்கடை வழியிடத் தென்னு, மன்ன மரபிற் காலங் கண்ணிய, வென்ன கிளவியு மவற்றியல் பினவே" "அவற்றுள், முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின" "அம்முக் கிளவியுஞ் சினைவினை தோன்றிற், சினையொடு முடியா முதலொடு முடியினும், வினையோ ரனைய வென்மனார் புலவர்." "ஏனை யெச்சம் வினைமுத லானு, மானவந் தியையும் வினைநிலை யானுந், தாமியன் மருங்கின் முடியு மென்ப" (தொல், சொல், வினை - ௩௧—௩௫) "எனஇன் அன்ஆர் அஆ உஊ, அனையவை யெல்லாம் வினையெஞ்சு கிளவி"

ஒரு வினையெச்சம் மற்றொரு வினையெச்சங்கொண்டு முடிவனவும் உள. அவை, கோழி கூவிப் பொழுது புலர்ந்தது என்னும் செய்தென்னும் எச்சம் கோழி கூவப் பொழுது புலர்ந்தது என்று செயவென்னும் எச்சமாகத் திரித்துச் சொல்லுக. ஞாயிறு பட்டுவந்தான் என்பது ஞாயிறு படவந்தான் என்றறிக. 'உரற்கால் யானை யொடித்துண் டெஞ்சியயா' ஒடித்துண்ணவென்க) என்பதுமது. "வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய." (தொல், சொல், எச், ௬௧.) பிறவுமன்ன. (௬)

௪௪ ஆறன்மேற் செல்லும் பெயரெச்ச மன்றல்ல
வேறில்லை யுண்டு வியங்கோளுந்—தேறு
மிடமூன்றே டெய்தி யிருதிணையைம் பாலு
முடனென்றிச் சேறலு முண்டு.

எ-ன். இதுவும் விரவுவினையாமாறு உணர்த்து தனுதலிற்று.

இ-ள். நிலமும் பொருளும் காலமும் கருவியும் வினைமுதலும் வினையும் என்னும் ஆறிடத்தும் நடக்கும், செய்யும் செய்த என்னும் பெயரெச்சமிரண்டும் [என்னை? "நிலனும் பொருளுங் காலமுங் கருவியும், வினைமுதற் கிளவியும் வினையு முளப்பட, வவ்வறு பொருட்கு மோரன்ன வுரிமைய, செய்யுஞ் செய்த வென்னுஞ் சொல்லே" (தொல், சொல், வினை-௩௭) என்றாராகலின்]. அன்று, அல்ல, வேறு, இல்லை, உண்டு, வியங்கோள் என்று சொல்லப்பட்ட ஆறும் தன்மை, முன்னிலை, படர்க்கை யென்னும் [மூன்றிடத்தும்]. இருதிணை ஐம்பாலோடும் [நடைபெற்றுச் செல்லும்] எ-று.

அவற்றுட், செய்யும் என்னும் பெயரெச்சம் வருமாறு;—நிலம்-யான் உண்ணும்இல், யாமுண்ணும் இல், நாமுண்ணும்இல், நீயுண்ணும்இல், நீயிருண்ணும்இல், அவனுண்ணும் இல், அவளுண்ணும்இல், அவருண்ணும் இல், அஃது உண்ணும்இல், அவையுண்ணும் இல் எனவும்; பொருள் யான் செய்யும்பொருள், யாம் செய்யும் பொருள், நாம செய்யும் பொருள், நீ செய்யும் பொருள், நீயிர் செய்யும் பொருள், அவன் செய்யும் பொருள், அவள் செய்யும் பொருள், அவர் செய்யும் பொருள், அது செய்யும் பொருள், அவை செய்யும் பொருள் எனவும்; காலம்-யான் வருங்காலை, யாம் வருங்காலை, நாம் வருங்காலை, நீ வருங்காலை, நீயிர் வருங்காலை, அவன் வருங்காலை, அவள் வருங்காலை, அவர் வருங்காலை, அது வருங்காலை, அவை வருங்காலை, எனவும்; கருவி-யானெறியுங்கல், யாமெறியுங் கல், நாமெறியுங் கல், நீயெறியுங்கல், நீயிரெறியுங்கல், அவனெறியுங்கல், அவளெறியுங்கல், அவரெறியுங்கல், அஃது எறியுங்கல், அவை எறியுங்கல் எனவும்; வினைமுதல்-உண்ணும் யான், உண்ணும் யாம், உண்ணும் நாம், உண்ணும் நீ, உண்ணும் நீயிர், உண்ணும் அவன், உண்ணும் அவள், உண்ணும் அவர், உண்ணும் அது, உண்ணும் அவை எனவும்; வினை—யானுண்ணும் ஊண், யாமுண்ணும் ஊண், நாமுண்ணும் ஊண், நீயுண்ணும் ஊண், நீயிருண்ணும் ஊண், அவனுண்ணும் ஊண், அவளுண்ணும் ஊண், அவருண்ணும் உளண், அஃது உண்ணும் ஊண், அவை உண்ணும் ஊண் எனவும; இவை அறுபதும் செய்யும் என்னும் பெயரெச்சம்.

இனிச், செய்த என்னும் பெயரெச்சம் வருமாறு;—நிலம்-யானுண்ட இல், யாமுண்டஇல், நாமுண்டஇல், நீயுண்டஇல், நீயிருண்டஇல், அவனுண்டஇல், அவளுண்டஇல், அவருண்டஇல், அஃது உண்ட இல், அவையுண்ட இல் எனவும்; பொருள்-யான் செய்த பொருள், யாம்செய்த பொருள், நாம்செய்த பொருள், நீசெய்தபொருள், நீயிர் செய்தபொருள், அவன் செய்த பொருள், அவள் செய்த பொருள், அவர்செய்தபொருள், அது செய்த பொருள், அவை செய்த பொருள் எனவும்; காலம்—யான் வந்த காலை, யாம் வந்த காலை, நாம் வந்த காலை, நீ வந்தகாலை, நீயிர்வந்த காலை, அவன் வந்த காலை, அவள் வந்த காலை, அவர் வந்த காலை, அது வந்த காலை, அவை வந்த காலை எனவும்; கருவி-யானெறிந்த கல், யாமெறிந்த கல், நாமெறிந்த கல், நீ யெறிந்த கல், நீயிரெறிந்த கல், அவனெ

றிந்த கல், அவரெறிந்த கல், அஃது எறிந்தகல், அவை யெறிந்தகல் எனவும்; வினைமுதல்—உண்டாயான், உண்டாயம், உண்டநாம்; உண்டநீ உண்டநீயிர், உண்ட அவன், உண்ட அவள், உண்ட அவர்; உண்ட அது, உண்ட அவை எனவும்; வினை—யானுண்ட ஊண், யாமுண்ட ஊண், நாமுண்ட ஊண், நீ யுண்ட ஊண், நீயிருண்ட ஊண், அவனுண்ட ஊண், அவளுண்ட ஊண், அஃது ஊண்ட ஊண், அவையுண்ட ஊண், எனவும்; இவை அறுபதும் செய்த என்னும் பெயரெச்சம்.

இனி வினைக்குறிப்பு வருமாறு;—யானன்று, யாமன்று, நாமன்று, நீயன்று, நீயிரன்று, அவனன்று, அவளன்று, அவரன்று, அஃது அன்று, அவையன்று எனவும்; யானல்ல, யாமல்ல, நாமல்ல, நீயல்ல, நீயிரல்ல, அவனல்ல, அவளல்ல, அவரல்ல, அஃது அல்ல, அவை யல்ல எனவும்; யான் வேறு, யாம் வேறு, நாம் வேறு, நீவேறு, நீயிர் வேறு, அவன் வேறு, அவள் வேறு, அவர் வேறு, அது வேறு, அவை வேறு எனவும்; யான் இல்லை, யாமில்லை, நாமில்லை, நீயில்லை, நீயிரில்லை, அவனில்லை, அவளில்லை, அவரில்லை, அஃது இல்லை, அவையில்லை எனவும்; யான் உண்டு, யாமுண்டு, நாமுண்டு, நீயுண்டு, நீயிருண்டு, அவனுண்டு, அவளுண்டு, அவருண்டு, அஃது உண்டு, அவையுண்டு எனவும்; வியங்கோள்-யான் செல்க, யாம் செல்க, நாம் செல்க, நீ செல்க, நீயிர் செல்க, அவன்செல்க, அவள் செல்க, அவர் செல்க, அது செல்க, அவை செல்க எனவும்; இவை தன்மை முன்னிலைபடர்க்கை என்னும் மூன்றிடத்தும் இருதிணையைம்பாலினும் சென்றவாறு கண்டு கொள்க.

'உடனென்றிச் சேறலுமுண்டு' என்றது என்னை? செல்லாமையும் உண்டோ வெனின்;—உண்டு; அவை யாவையோ வெனின், நிகழ்காலத்துச் செய்யும் என்னும் சொல் பல்லோர் படர்க்கையினும் முன்னிலையினும் தன்மையினும் செல்லாது ஒழிந்த ஒருவன் ஒருத்தி ஒன்று பல என்னும் பொருள்கண்மேற் செல்லும் அத்துணை என்றவாறு. என்னை? "பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை, யவ்வயின் மூன்று நிகழுங் காலத்துச், செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா." (தொல், சொல், வினை—௩௦) என்பதாகலின். அவை வருமாறு;—அவனுண்ணும், அவளுண்ணும், அஃது உண்ணும், அவையுண்ணும் எனக்கொள்க. அன்றி அவருண்ணும், நீயுண்ணும், யானுண்ணும் என்றால், ஆகாதெனக் கொள்க. பிறவுமன்ன.

௬௫. சாறறும் பெயர்வினை யெச்சங்க டாமடுக்கித்
தோற்ற லெதிர்மறுத்துச் சொன்னலு—மேற்றபொருள்
குன்றாச் சிலசொல் லிடைவந்து கூடியுட
னின்றுதன் மெய்ந்நா னெறி.

எ-ன். பெயரெச்சத்திற்கும் வினையெச்சத்திற்கும் எய்துவதோர் இலக்கணம் உணர்த்துதனுதலிற்று.

இ-ள். பெயரெச்சமும் வினையெச்சமும் ஒரு சொல்லின்பின் முற்றுதே பலசொல்லுடன் அடுக்கிவந்து முற்றவும் பெறும்; அவையிரண்டும் எதிர் மறுத்துச் சென்னலும் பெயரெச்சமும் வினையெச்சமுமாந் தன்மை திரியாது தமக்கேற்ற சொல் இடைவந்துநிற்க முடியவும் பெறும்; எ-று.

'கூடியுடனின்றுதல்' என்பதனுல் பொருத்தமுடைய சொல் இடைநிற்கப்பெறும்; அல்லாதனபெறு எனக்கொள்க.

அவை வருமாறு;—'மூவா முதலா வுலக மொருமூன்று மேத்தத், தாவாத வின்பந் தலையாயது தன்னி னெய்தி, யோவாது நின்ற குணத் தொண்ணிதிச் செல்வ னென்ப, தேவாதி தேவ னவன்சேவடி சேர்து மன்றே.' என்றும், 'புரைதீராமன்னுவிளமை' என்றும், இவை பெயரெச்சம் உடனடுக்கி வந்துமுடிந்தன. 'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு, மொண்டொடி கண்ணே யுள' என இது வினையெச்சம் உடனடுக்கி வந்து முடிந்தது. என்னை? 'வினை யெஞ்சு கிளவியும் பெயரெஞ்சு கிளவியும், பலபல வடுக்கினு முற்றுமொழிப்படிய' என்றாராகலின். உண்ணுதசாத்தன், உறங்காதவில்லி என எதிர்மறுத்தவிடத்தும் பெயரெச்சமாநதன்மை திரியாதவாறு கண்டுகொள்க. உண்ணுதுறங்கினுன், ஓதாதுணர்ந்தான என்பன எதிர்மறுத்துச் சொன்னவிடத்தும் வினையெச்சமாந்தன்மை திரியாதவாறு அடைவே கண்டுகொள்க. 'பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியு, மெதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா' (தொல், சொல், வினை-௩௬)

இனி, எச்சங்களிடையே சில சொன்னின்று முடியுமாறு அடுஞ் செஂநெற்சோறு, அட்ட செந்நெற்சோறு, இவை பொருத்தமுடையனவாய் வருதலாலே செந்நெல் என்ற சொல் இடைநின்ற பெயரெச்சம். 'உப்பின்று புற்கை யுண்கமாதோ கொற்கையானே' இது பொருத்த

முடைத்தாய் வருதலாற் புற்கை யென்னும் சொல் இடைநின்ற வினை யெச்சம். 'தத்த மெச்சமொடு சிவணுங் குறிப்பி, னெச்சொல் ல யினு மிடைநிலை வரையார்' (தொல், சொல், வினை-சO) இனிப் பொருத்தமில் தனகளையுமாறு;—வல்லமெறிந்த நல்லிளங்கோசர் மகன் பெருவழுதி என்றால் வல்லமெறிதல் பெருவழுதிமேற் செல்லாமையின் நல்லிளங்கோ சரை இடைநிறுவற்க. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. (அ)

சசு. நெடிய னுடைய னிலத்த னிளைஞன்
கடியன் மகத்தன் கரியன்—றொடியனென
வொண்ணுதலாய் மற்றையவு மெண்ணியுயர்திணையி
னண்ணும வினைக்குறிப்பு நாட்டு.

எ-ன். உயர்திணை வினைக்குறிப்பாமாறு உணர்த்துதனுதலிற்று.

இ-ள். அவை ஆண்பாலில் ஒட்டினபடியே பெண்பாலினும், பன்மைப்பாலினும் செலுத்த உயர்திணை வினைக்குறிப்பாம். எ-று.

அவை வருமாறு;—நெடியன, நெடியள், நெடியர்; உடையன், உடையள், உடையர்; நிலத்தன், நிலத்தள், நிலத்தர்; இளையன், இளையள், இளையர்; கடியன், கடியள், கடியர்; மகத்தன், மகத்தள், மகத்தர்; கரியன், கரியள், கரியர்; தொடியன, தொடியள், தொடியர் எனபன உயர்திணை வினைக்குறிப்பு. பிறவுமன்ன. (கூ)

சஎ. கரிதரிது தீது கடிது நெடிது
பெரிதுடைத்து வெய்து பிறிது—பரிதென்ப
வாயிழாய் பன்மையினுஞ் செல்ல வஃறிணையின்
மேய வினைக்குறிப்பா மிக்கு.

எ-ன். அஃறிணை வினைக்குறிப்பாமாறு உணர்த்துதனுதலிற்று.

இ-ள். இச்சொல்லப்பட்டவை அஃறிணை வினைக்குறிப்பாம். எ-று.

அவை வருமாறு;—கரிது, கரிய; அரிது, அரிய; தீது, தீய; கடிது, கடிய; நெடிது, நெடிய; பெரிது, பெரிய; உடைத்து, உடைய; வெய்து, வெய்ய; பிறிது, பிற; இவையும் பிறவும் அஃறிணை வினைக்குறிப்பாம்.

சஅ. சென்று முதலோடு சேருஞ் சினைவினையு
மன்றியா வோவாகி யாயோயாய்—நின்றனவு
மொய்குழலாய் முன்னிலைமுன் னீயேயு மெண்டொகையு
மெய்துங் கடப்பாட் டின.

எ-ன். வினைச்சொல்லொழிவும், எண்சொல்லொழிவும் ஆமாறுணர்த்துதனுதலிற்று.

இ-ள். பன்மைச்சினைவினை சினையோடு முடியாது முதலோடு முடியவும் பெறும்; உயர்திணைமுப்பாற்கும் ஈறான ஆனும், ஆளும், ஆரும், விரவுவினைக்கீறான ஆயும், இவை ஓவும் ஒயும் ஆய்வரப் பெறும்; முன்னிலை முன்னர் ஈகார ஏகாரங்கள் வினைப்படுத்துச் சொல்லும்பொழுது இடைச்சொல்லாய் நிற்கவும் பெறும; சொல்லப்பட்ட எண்களெல்லாம் தொகை பெற்று முடியவும் பெறும் எ-று.

அவை வருமாறு;—கண்ணொந்தன, முலைவீங்கின எனற்பாலவை, கண்ணொந்தாள், முலைவீங்கினாள் எனறுமாம்; மூக்குநன்று, கொப்பூழ் நன்று எனற்பாலவை, மூக்கு நல்லன், கொப்பூழ் நல்லன் எனறுமாம். என்னை? 'கண்ணுந் தோளும் முலையும் பிறவும், பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி, பன்மை கூறுங் கடப்பா டிலவே, தம்வினைக்கியலு மெழுத்தலங்கடையே' (தொல், சொல், கிள, சுஉ) என்பவாகலின். உண்டான், உண்டாள், உண்டார், உண்டாய் என்பன உண்டோன், உண்டோள், உண்டோர், உண்டோய் என்றுமாம்; இவை செய்யுளிடத்தனறி ஆகாவென்றறிக. என்னை? "பாலறிமரபி னம்மு வீற்று, மாவோ வாகுஞ் செய்யு ளுள்ளே" "ஆயென் கிளவியு மவற்றொடு கொள்ளும்" (தொல், சொல், வினை, கச-கரு) என்பவாகலின். 'சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே' எனச் செல் என்பது சென்றீ என ஈகாரஇடைச்சொன் மிக்கது. 'அட்டிலோலை தொட்டனை நின்மே' என நில் என்பது நின்மே என ஏகாரவிடைச்சொன் மிக்கது. "முன்னிலை முன்ன ரீயு மேயு, மந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே" (தொல், சொல், எச், ருரு) என்றாராகலின்.

எண்டொகை பெறுதலாவது:— என என்றும், என்று என்றும், ஒடு என்றும் தொகையிடுதல். 'என்று மெனவு மொடுவுந் தோன்றி, யொன்று வழி யுடைய வெண்ணினுட் பிரிந்தே' (தொல், சொல், இடை, சசு) அவை வருமாறு:— 'கண்ணிமை கைந்நொடி யெனவே' இஃது என என்று தொகை பெற்றது. 'குன்று கூதிர் பண்பு தோழி, விளியிசை முத்துறழென்றிவை யெல்லாந், தெளிய வந்த செந்துறைச் செந்துறை' இஃது என்று எனத்தொகை பெற்றது. 'நிலனே நீரே தீயே வளியே, யாகா யத்தொ டைந்தும் பூதம்' இதனுள் ஒடு எனத்தொகை பெற்றது.

இரண்டு பெயரெச்சமும், எட்டு வினையெச்சமு மொழித்து ஒழிந்த வினைச்சொற்களெல்லாம் வினைமுற்றுச்சொல் என்றறிக.

வினைமுற்றுச்சொற்களும் பெயரெச்சச் சொற்கள்போலப் பெயர் கொண்டு முடியும் பெறும்; வாலாறு:— உண்டான் சாத்தன், சாத்தன் உண்டான் எனப் பேர் முன்னும் வினை பின்னுங் கொண்டு முடிந்தன; முடிந்தனவேயாயினும் எச்சச்சொல்லாகாது முற்றுச்சொல்லாம். பாலும் திணையும் இடமும் காலமும் தோன்றிநிற்றல் அம்முற்றுச் சொற்குச் சிறப்புடைத்து. என்னை? "பாலுந் திணையு மிடத்தொடு விளக்கும், காலக்கிளவி முற்றென மொழிப' 'இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்ற, சிறப்புடை மரபி னம்முக் காலமுந், தன்மை முன்னிலை படர்க்கை யென்னு, மம்மு விடத்தான் வினையினுங் குறிப்பினு, மெய்ம்மை யானு மீரிரண் டாகு, மவ்வாறென்ப முற்றியன் மொழியே' 'எவ்வயின் வினையு மவ்வயி னிலையும்' 'அவைதாந், தத்தங் கிளவி யடுக்குந வரினு, மெத்திறத் தானும் பெயர் முடி பினவே' (தொல், சொல், எச்-௩௧—௩௩) என்பவாகலின்.

'எய்தும்' என்று மிகுத்துச் சொல்லியவதனால், வினைச்சொல் உம்மை பெற்றுவரவு ம்பெறும் என்றறிக. அவை வருமாறு:—அறுத்துங் குறைத்துஞ் சுகிர்ந்தும் வகிர்ந்தும் என்றாற் போல்வன எனக் கொள்க. பிறவுமன்ன.

சுசு. இசைநிறை நான்கு வரம்பாம் விரைசொல்
வசையிலா மூன்று வரம்பா—மசைநிலை
யாய்ந்த வொருசொல் லடுக்கிரண்டாந் தாம்பிரியா
வேந்திரட்டைச் சொற்க ளிரட்டு.

எ-ன். ஒரு சொல் அடுக்கிவருமிடம் இவை என்பது உணர்த்துதனுதலிற்று.

இ-ள். ஒரு சொல் அடுக்கிவருமிடத்து இசைநிறை நான்களவும் அடுக்கிவரப்பெறும்; விரைசொல் மூன்றளவும் அடுக்கிவரப்பெறும். உயர்ச்சி சொல்லுதலாலே இவையிற்றி னிழிந்து வரவும் பெறும்; அசைநிலை இரண்டளவும் அடுக்கிவரப் பெறும; இரட்டைச் சொற்கள் அவ் விரட்டுதலிற் குறைத்துச் சொல்லப்படா. எ-று.

அவை வருமாறு:— 'பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ, பாவிற் றிருந்த புலவீர்காள் பாடுகோ, ஞாயிற் றொளியன்ன மதிநிழற்றே தொண் டையர்தங், கோவீற் றிருந்த குடை' இது நான்கு வரம்படுக்கின இசை நிறை. 'இசைப்படு பொருளே நான்குவரம் பாகும்' (தொல், சொல், எச் உஎ.) என்பதாகலின். இதுவே 'சிறுபுன்மாலை சிறுபுன்மாலை' என இரண்டு வரம்படிக்கி வந்தது. கள்ளர் கள்ளர் கள்ளர்! படை படை படை! பாம்பு பாம்பு பாம்பு! தீத்தீத்தீ! என மூன்று வரம்படுக்கி வந்த விரைசொல். 'விரைசொல் லடுக்கே மூன்று வரம்பாகும்' (தொல், தொல், எச் உஅ) என்பதாகலின். கள்ளர் கள்ளர், படை படை, பாம்பு பாம்பு, தீத்தீ எனவும் வரும். அசைநிலையடுக்கும் ஒரு கட் டுரைத் தொடர்பினல்லது வாரா; கண்டீரே கண்டீரே, கேட்டீரே கேட் டீரே, நன்று நன்று இவையிரண்டிற் றாழ்ந்து வாரா; 'அசைநிலை யடுக்கே யிரண்டுவரம் பாகும்' திடுதிடென்றது, மொடுமொடென்றது, சரசரென்றது, கொறுகொறுத்தார், மொடுமொடுத்தார் இவையிரட்டைக் கிளவி. 'கொறுகொறுத்தா ரென்றொருவர் கூவுங்காலுள்ளந், துடி துடித்துத் துள்ளி விழும்' எனச் செய்யுளிடத்து வந்தவாறு. பிறவு மன்ன. (கஉ)

வினைமரபு
முற்றும்.

ஏழாவது.

இடைச்சொன்மரபு.

ருo. சாரியையா யொன்ற லுருபாத றங்குறிப்பி
னேரும் பொருளாத னின்றசையாய்ப்—பேர்தல்
வினைச்சொற்கீ றாத லிசைநிறைத்து மேவ
லினைத்தே யிடைச்சொ லளவு.

என்பது சூத்திரம். இவ்வோத்து என்ன பெயர்த்தேவெனின்:— இடைச்சொன் மரபு எனும் பெயர்த்து. இவ்வோத்தினுள், இத் தலைச் சூத்திரம் என்னுதலிற்றோவெனின்:— இடைச்சொற்களுக்கெல் லாம் பொதுவிலக்கணம் உணர்த்துதனுதலிற்று.

இ-ள். இடைச்சொல்லாவன:— சொற்புணருமிடத்துச் சாரியை யாய் நின்றும், உருபாய் நின்றும், தத்தம் குறிப்பிற் பொருள் செய்ய நின்றும், அசைச் சொல்லாய் நின்றும், வினைச்சொற்கு ஈறாய் நின்றும், இசை நிறையாய் நின்றும் நடை பெறுவதல்லது தனித்து நடைபெறு வனல்ல எ-று.

சாரியையாவன:—அல், அத்து, அன், அம், அக்கு, இக்கு, கெழு, நம், தம், ஆன், உம், வற்று, ஞான்று, இன், இற்று, என், எம், நும், தம் என்பன முதலியன. உருபாவன—ஐ, ஒடு, கு, இன், அது, கண் என்பன முதலாயின. தத்தங்குறிப்பிற் பொருள் செய்வன மேலே சொல்லுதும். அசைச்சொல்லாவன—யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, மியா, இக, மோ, மதி, இகும், சின் என்பன முதலாயின. இனி, வினைச்சொற்கு ஈறுவன—அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப என்பன முதலாயின. இசை நிறையாவன—பாடுகோ பாடுகோ என் பன முதலாயின எனக்கொள்க.

பிறர், இடைச்சொல்வருமவழி ஏழென்று சொல்ல, இந்நூலுடை யார் ஒப்பில் போலியை நீக்கியது என்னையோவெனின்:— 'ஒப்பில் போலியு மப்பொருட் டாகும்' (தொல், சொல், இடை-௩௦) என்றதனால் அஃது அசை நிலையுள்ளே யடங்குமாதலான் இங்குக் கொண்ட தில்லை. (௧)

௫௧. தெரிநிலை யாக்கஞ் சிறப்பெச்ச முற்றெ
ணரிதா மெதிர்மறையே யையந்—தருமும்மை
தேற்றம் வினவெண் ணெதிர்மறையுந் தேமொழியா
யீற்றசையு மேகார மென்.

எ-ன். உம்மையிடைச்சொல்லும் எதிர்மறையிடைச் சொல்லும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள். தெரிநிலையிடத்தும், ஆக்கத்திடத்தும், சிறப்பிடத்தும், எச்சத்திடத்தும், முற்றிடத்தும், எண்ணிடத்தும், எதிர்மறையிடத்தும், ஐயத்திடத்தும் என இவ்வெட்டிடத்தும் உம்மையிடைச்சொல் வரும். தேற்றத்தினும், வினாவினும், எண்ணினும், எதிர்மறையினும், ஈற்றசையினும் ஏகாரவிடைச்சொல் வரும் எ-று.

அவைவருமாறு:— நன்றுமன்று, தீதுமன்று-இது தெரிநிலையும்மை. நெடியனுமாயினன் வலியனுமாயினன்-இவை ஆக்கவும்மை. 'கைக்குமாந் தேவரே தினனினும் வேம்பு'—இஃது இழிவு சிறப்பும்மை. 'அமிழ்தினு மாற்றவினிது—இஃது உயர்வுசிறப்பும்மை. எச்சவும்மை இரண்டு வகைப்படும், இறந்ததுகாட்டலும் எதிரதுபோற்றலும் என. சாத்தனும் வந்தான் என்றால் இவனொத்த பிறனொருவனையும் விளக்கினமையின் இறந்ததுகாட்டும் எச்சவும்மை. சாத்தனும் வருவன் என்றால் பின்னும் ஒருவன் வருவது காட்டுதலால் எதிரதுபோற்றலெனனும் எச்சவும்மை. 'மூவாமுதலா வுலகமொருமூன்றும்' என்பது முற்றும்மை. நிலனும் நீரும் தீயும் வளியும ஆகாயமும் என்பன எண்ணும்மை. வருதற்கும் உரியன் என்பது வாராமைக்கும் உரியனென்னும் பொருள் பட்டமையான் எதிர்மறையும்மை. எட்டானும் பத்தானும் உடையன் என்பது துணியாமை நின்றமையான் ஐயவும்மை.

'அரிதாமெதிர்மறை' என்ற வியப்பினால், உம்மை அசைநிலையாகவும் பெறும். அவன் மிகவும் நல்லன், அறவு தீயன், 'அவருள்ளும் பொன்னோடை நன்றென்றானல்லளே' என்பன அசைநிலை. பிறவுமன்ன.

இனி, ஏகாரம் வருமாறு;—அவனே கொண்டான் என்பது தேற்றேகாரம். நீயே கொண்டாய் என்பது வினாவேகாரம். நிலனே நீரே தீயே என்பது எண்ணேகாரம். 'தூற்றுதே தூரவிடல்'—தூற்று என்னும் பொருள் பட்டமையான் எதிர்மறையேகாரம். 'ஓடியான மருட்டிய தாழ்குழலே' எனவும், 'ஏமாங்கதமென் றிசையாற்றிசை போயதுண்டே' எனவும் இவை ஈற்றசையேகாரம். தேற்றேகாரத்துள்ளே யடங்குமாதலாற் பிரிநிலையேகாரம் வேண்டிற்றிலர் என்றறிக. இவை ஏகார இடைச்சொல். "தேற்றம் வினாவே பிரிநிலை யெண்ணே, யீற்றசை யெனவைந் தேகா ரம்மே" (தொல், சொல், இடை-௬) (௨)

௩௨. காண்டகுமன் னுக்கங் கழிவே யொழியிசைகொன்
றுண்டறிகா லம்பெருமை யச்சமே—நீண்ட
பயனின்மை தில்லை பருவம் விழைவு
நயனி லொழியிசையு நாட்டு.

எ - ன். மன்னையிடைச்சொல்லும், கொன்னையிடைச்சொல்லும், தில்லையிடைச்சொல்லும் ஆமாறுணர்த்துதனுதலிற்று.

இ-ள். மன் என்னும் இடைச்சொல் ஆக்கத்தினும், கழிவினும், ஒழியிசையினும் வரும்; கொன் என்னும் இடைச்சொல் காலத்தினும், பெருமையினும், அச்சத்தினும், பயனின்மையினும் வரும்; தில் என்னும் இடைச்சொல் பருவத்தினும், விழைவினும், ஒழியிசையினும் வரும் எ-று.

அவை வருமாறு:— 'பண்டுகாடுமன்' என்றது இன்று வயலாயிற்று என்னும் பொருள்பட்டமையான் ஆக்கத்தின்கண் வந்தது 'ஈனவிழிவினன் வாழ்வேனமன்' என்பது கழிவின்கண்வந்தது. 'பண்டு கூரியதோர் வாண்மன்' என்பது இன்று முறிந்தது என்றும், இந்நீர்மைத்தாயிற்று என்றும் பொருள்பட்டமையான் ஒழியிசையாயிற்று; என இவை மன்னை இடைச்சொல்.

'கொன்வரல் வாடை நன்றெனக் கொண்டேனே' என்பது நலியுங் காலம் அறிந்து வந்த வாடை என்றவாறு. இது காலத்தின்கண் வந்தது 'கொன்னூர் துஞ்சினும் யான்துஞ் சலனே' என்பது பெருமைக்கண் வந்தது. 'கொன்முனையிரவூர் போல' என்பது அச்சத்தின்கண் வந்தது. 'கொன்னே வழங்கான்' என்பது பயனின்மைக்கண் வந்தது. இவை நான்கும் கொன்னையிடைச்சொல்.

'பெற்றாங் கறிகதில் லம்மவிவ் வூரே' என்பது பெற்ற பருவத்தறிக என்றது. இது காலம். 'வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி-யரிவையைப் பெறுகதில் லம்ம யானே' என்பது விழைவின்கண் வந்தது. 'வருகதில் லம்மவெஞ் சேரி சேர' என்பது வந்தாலின்னது செய்வனென்னும் பொருள் பட்டமையான் ஒழியிசையாயிற்று. இவை தில்லையிடைச்சொல். பிறவுமன்ன.

'ஆண்டறிகாலம்' என்று மிகுத்துச் சொல்லியவதனால், தில்லையிடைச்சொல் விழைவின்கண் வரும்பொழுது தன்மையிலன்றி வாராது என்றறிக. என்னை? "விழைவின் றில்லை தன்னிடத் தியலும்" (தொல், சொல், இடை-௨) என்றாராகலின். (௩)

௫௩. வினைபெயரு மெண்ணு மிசைகுறிப்பும் பண்பு
மெனவென் றிரண்டு மியலு—நினையுங்கான்
மன்றவெனுஞ் சொற்றேற்றந் தஞ்ச மெளிமையா
மென்று வெனவிரண்டு மெண்.

எ-ன். என என்னும் இடைச்சொல்லும், என்று என்னும் இடைச்சொல்லும், தத்தங் குறிப்பிற் பொருள் செய்யும் இடைச்சொல்லும் உணர்த்துதனுதலிற்று.

இ-ள். வினையினும், பெயரினும், எண்ணினும், இசையினும், குறிப்பினும், பண்பினும் எனவென்னிடைச்சொல்லும், என்று என்னிடைச் சொல்லும் வரும். மன்ற என்னும் சொல் தேற்றத்தைச் சொல்லும். தஞ்சம் என்னும் சொல் எளிமையைச் சொல்லும். என்று, எனு என்னும் இரண்டும் எண்ணைக்காட்டும் எ-று.

அவை வருமாறு:—கொள்ளெனக் கொண்டான் என்பது வினை. ஊரெனப்படுவது உறையூர் என்பது பெயர். நிலனென நீரென என்பது எண். ஒல்லென ஒலித்தல் என்பது இசை. விண்ணென விசைத்தல் என்பது குறிப்பு. வெள்ளென விளர்த்தல் என்பது பண்பு. இவை எனவென்னும் இடைச்சொல். என்று என்பதனையும் இவ்வாறே எங்கும் ஒட்டிக் கொள்க. 'வல்லமன்ற' என்பது தேற்றத்தின்கண் வந்தது. 'முரசு கெழுதாயத்தாசேதஞ்சம்' என்பது எளிமைக்கண் வந்தது. ஈனோரே தஞ்சமிருபிறப்பினோர்வெகுளின், வானோர்க்கும் வாழ்தலரிது' எனபதுமது. 'மன்றவென கிளவி தேற்றஞ் செய்யும்' 'தஞ்சக் கிழவி யெண்மைப் பொருட்டே' (தொல், சொல், இடை-கஎ, கஅ.) 'உயிரே மெய்யே யுயிர்மெய்யென்று, குறிலே நெடிலே யளபெடை யென்று, வன்மை மென்மை யிடைமை யென்று, சார்பிற் றோன்றுந் தன்மைய வென்று' என என்று வந்தவாறு. "பின்சா ரயல்புடை தேவகை யெனு, முன்னிடை கடைதலை வலமிட மெனு" என எனு வந்தவாறு. (ச)

ருச. சிறப்பும் வினவுந் தெரிநிலையு மெண்ணு
முறப்பி னெதிர்மறையி னேடும்—வெறுத்த
வொழியிசையு மீற்றசையு மோகாரஞ் சொல்லா
வொழிபொருளுஞ் சார்த்தி யுணர்.

எ-ன். ஓகார விடைச்சொல்லாமாறும், இவ்வோத்துக்குப் புறனடையாமாறும் உணர்த்துதனுதலிற்று.

இ-ள். சிறப்பினும், வினவினும், தெரிநிலையினும், எண்ணினும், எதிர்மறையினும், ஒழிபிசையினும், ஈற்றசையினும் ஓகாரம் வரும், இவ்வோத்தின் முடியாதன முன்பு சொன்ன பகுதிகளிற் சார்த்தி யுணர்க எ-று.

அவை வருமாறு:—'ஓஒ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண், டாஅ மிடர்ப்பட் டன' இதுசிறப்பிோகாரம். என்னை? "தெளிவி னேயுஞ் சிறப்பினேவு, மளவி னெடுத்த விசைய வென்ப' (தொல், சொல், இடை-கங) என்றாராகலின். அவனே, லல்லனே என்பது வினாவோகாரம். நன்றோவன்று, தீதோவன்று என்பது தெரிநிலையோகாரம். 'மூத்த னென் கோ முதன் மூர்த்தியென்கோசகமூன்றினுக்கு, மத்தனென் கோ வென்னை யாளியென கோவடியேனுடைய, சித்தனென கோபத்தர் செல்வ மென் கோவென றுந் தேய் வொன்றில்லா, நித்தனென் கோபிண்டி நீழ லின் கோவை நிரந்தரமே' (திருநூற்றந்தாதி நுக.) என்றார் அவிரோதி யாழ்வார். இஃது எண்ணோகாரம். யானே கொண்டேன் என்பது நீயலைறோ என்று பொருள்பட்டமையான் எதிர்மறையோகாரம். கொளலோ கொண்டான் என்பது கொண்டுய்யப்போகான் என்னும் பொருள்பட்ட மையான் ஒழியிசையோகாரம். 'அப்பொருளிம்மையுமறுமையும் பகை யாவதறியாயோ' இஃது ஈற்றசையோகாரம்.

புறனடையினான் "மியா இக மோமதி இகுஞ்சின்னென்னு, மாவயி னாறு முன்னிலை யசைச்சொல்" என்பனவுங்கொள்க. பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க. அவற்றுட்சிலவருமாறு:—கேண்மியா, சென்மியா என் பன மியா என்னும் இடைச்சொல். 'தண்டுறையூர யாங்கண்டிக' என்பது இகவென்னும் இடைச்சொல். 'கண்டதுமொழிமோ' என்பது மோ என்னும் இடைச்சொல். 'சென மதிபெரும்' என்பது மதி என்னும் இடைச்சொல். கண்டிகும் யாம் என்பது இகும் என்னும் இடைச்சொல். 'காப்பும் பூண்டிசிற்கடையும்போகல்' என்பது சின என்னும் இடைச் சொல். பிறவும் வந்தவழிக்கண்டுகொள்க. (ரு)

இடைச்சொன்மரபு முற்றும்.

எட்டாவது
உரிச்சொன்மரபு.

ருரு. ஒண்பேர் வினையோடுந் தோன்றி யுரிச்சொலிசை
பண்பு குறிப்பாற் பரந்தியலு—மெண்சீர்
பலசொல் லொருபொருட் கேற்றுமொரு சொற்றான்
பலபொருட் கேற்றவும் பட்டு.

என்பது சூத்திரம். இவ்வோத்து என்னபெயர்த்தோ வெனின்:- உரிச்சொன்மரபு என்னும் பெயர்த்து. இவ்வோத்தினுள், இத்தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின்;— உரிச்சொற்குப் பொதுவிலக் கணம் உணர்த்துதனுதலிற்று.

இ-ள். உரிச்சொற்கள் பெயரொடும் வினையொடும் சேர்ந்து, இசை யும் குறிப்பும் பண்பும் பற்றிப் பலசொல் ஒருபொருட் குரித்தாயும் ஒருசொல் பலபொருட் குரித்தாயும் நடக்கும் எ-று (க)

ருகூ. கம்பலை சும்மை கலியழுங்க லார்ப்பரவ
நம்பொடு மேவு நசையாகும்—வம்பு
நிலையின்மை பொன்மை நிறம்பசலை யென்ப
விலைநொடை வாளொளியாம் வேறு.

எ-ன். பலசொல் ஒருபொருண்மேல் வரும் உரிச்சொல்லும், பிறவு மாமாறு உணர்த்துதனுதலிற்று.

இ-ள். கம்பலை என்றும், சும்மை என்றும், கலி என்றும், அழுங் கல் என்றும், ஆர்ப்பு என்றும் இவை அரவப்பெயராம்; நம்பு, மேவு இவை நசையாகும்; வம்பு நிலையின்மையாகும்; பொன்மை என்பது நிற மும், பசலையும் ஆகும்; நொடை விலையாம்; வாள் ஒளியாம் எ-று.

வரலாறு:-ஊர்கம்பலையுடைத்து; தள்ளாத சும்மைமிகும்; மன்றூர் கலிக்கச்சி; அழுங்கன்மூதூர்; ஆர்ப்புடைமூதூர்; இவை அரவப்பொருள். 'நயந்து நாம்விட்ட நன்மொழி நம்பி' 'மேவுவந் தொழுகினர்' எனஇவை நசைப்பொருள்; வம்பவடுகர், வம்பநாரை என்பன நிலையின்மை; 'பசப் பிதநுச் சென்றூ ருடையையோ வன்ன-நிறத்தையாற் பீர மலர்' இது பசலைப் பொருள். 'மருப்பு நொடைவில் வலித்து மழகளிறெய்ய' என் பது நொடைவிலையாயிற்று. 'வாளார் மதிமுகம்' என்பது ஒளியாயிற்று.

'என்ப' என்று மிகுத்துச்சொல்லியவதனால், பேம், நாம், உரும், உட்கு என்பன அச்சப்பொருள; என்னை? 'பேநா முருமென வரூஉங் கிளவி, யாமுறை மூன்று மச்சப் பொருள' (தொல், சொல், உரிச்-கூஎ) என்றாராகலின். அவை வருமாறு;—'பேஎநாறுந் தாழ்நீர்ப் பனிச்சுனை' என்றும், 'நாமவேற்றடக்கை வேந்து' என்றும், 'தீத்தும் முருமுவே லோன்' என்றும், 'உட்கும் புனலக்குருதி' என்றும் வருவன. இவை அச்சப்பொருள். பிறவுமன்ன. (உ)

௫எ. விரைவு விளக்க மிகுதி சிறப்பு
வரைவு புதுமையுடன் கூர்மை—புரைதீர்
கரிப்பையங் காப்பச்சந் தேற்றமீ ராறுங்
தெரிக்கிற் கடிச்சொற் றிறம்.

எ-ன். ஒருசொற் பல பொருண்மேல் வரும் உரிச் சொல்லா மாறு உணர்த்துத லுதலிற்று.

இ-ள். விரைவும், விளக்கமும், மிகுதியும், சிறப்பும், வரைவும், புதுமையும், கூர்மையும், கரிப்பும், ஐயமும், காப்பும், அச்சமும், தேற்றமும் என்னும் இப்பன்னிரண்டன்மேலும் கடிசொல் நடக்கும். எ-று.

அவை வருமாறு:— 'கடியார் கலுழி நீந்தி' என்பது விரைவு. 'கண்ணாடி யன்ன கடிமார்பன்' என்பது விளக்கத்தின்கண் வந்தது. 'காலெற்றலிற் கடிசிறந் துறுத்தும்' என்பதும், கடுந்தொழில் என்பதும் மிகுதி. கடிமலர் என்பது சிறப்பு. மனைகடிந்தான் என்பது வரைவு. 'கடிமலர்ப் பிண்டி' என்பது புதுமை. 'வாள்வாய் கடிது' என்பது கூர்மை. 'கடிமிளகு தின்ற கல்லாமந்தி' 'கடுத்து முகஞ் சிவந்த' என்பதுகரித்தற்கண் வந்தது. 'போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்-றேற்றுதல் யார்க்கு மரிது' என்பது ஐயத்தின்கண் வந்தது. கடிநகர் என்பது காப்பு. கடும்பாம்பு என்பது அச்சம். 'கடுஞ் சூடருகுவன்' என்பது தெளிவு. (௫௭)

௫அ. வெம்மை விருப்பாம் வியலகல மாகுமரி
யெம்மையெய் யாமை யறியாமை—கொம்மை
யிளமை நளிசெறிவா மேயேற்ற மல்லல்
வளமை வயம்வலியாம் வந்து.

எ-ன். இதுவும் உரிச் சொற்களாமா றுணர்த்துத லுதலிற்று.

இ-ள். வெம்மை என்பது விருப்பம். வியல் என்பது அகலம். அரி என்பது அழகு. எய்யாமை என்பது அறியாமை. கொம்மை என்பது இளமை. நளி என்பது செறிவு. ஏ என்பது ஏற்றம். மல்லல் என்பது வளம். வயம் என்பது வலியாம். எ-று.

அவை வருமாறு:— 'அடிநிலம்பாந்து முத்தணிந்த வெம்முலை' இது விருப்பு. 'வியன்ஞாலம்' என்பது அகலம். 'அரியயிர்முன்கை' என்பது அழகு. 'எய்யாவிளஞ்சூல்' என்பது அறியாமை. 'கொம்மை

வருமுலை' என்பது இளமை. 'நளியிருமுந்நீர்' என்பது செறிவு. 'ஏகலடுக்கத்து' என்பது ஏற்றம். ஏக்கழுத்தென்றாலெண்ணுப்பையுங் காட்டும்; ஏற்றமுடைத்தாதல். 'மல்லன் மாஞாலம்' இது வளம். வயப்புலி என்பது வலியாமெனக் கொள்க.

'வந்து' என்று மிகுத்துச் சொல்லியவதனால், நொசிவு — நுழைவு, நுணங்கு, நுண்மையாம். 'நொசிவு நுணங்கு நுழைவு நுண்மை' (தொல், சொல், உரிச்—எசு.) என்றாராகலின். அவை வருமாறு:— 'நொசிமருங்குல்' என்றும், 'நுழைமருங்குல்' என்றும், 'நுணங்கிய கேள்வியர்' என்றும் இவை நுண்மைப் பொருளாய் வந்தன. பிறவு மன்ன. (௪)

ருக. புரையுயர் பாகும் புனிறீன் றணிமை
விரைவாங் கதழ்வுந் துனைவுங்—குரையொலியாஞ்
சொல்லுங் கமழுந் துவன்று நிறைவாகு
மெல்லும் விளக்க மெனல்.

எ-ன். இதுவும் உரிச்சொல்லாமாறுணர்த்துத னுதலிற்று.

இ-ள். புரை உயர்வு; புனிறு ஈன்றணிமை; துனைவுங் கதழ்வும் விரைவு; குரை யொலி; கமழும் துவன்றும் நிறைவு; எல் விளக்கம். எ-று.

அவை வருமாறு:— 'புரைய மன்ற புரையோர் கேண்மை' இஃது உயர்ச்சி. 'புனிற்றுநாய் குரைக்கும் புல்லெ னட்டில்' என்பதும், 'புனிற்றுப் பாய்ந்த' என்பதும் ஈன்றணிமை. 'துனைபுன லெக்கரிற் றொக்குடன் குழீஇ' என்பதும், 'கதழ்பரி நெடுந்தேர்' என்பன விரைவு. 'குரைகடல்' என்பது ஒலி. 'கமஞ்சூன் மாமழை' என்பதும், 'ஆரியர் துவன்றிய பேரிசை மூதூர்' இவை நிறைவு. 'எல்வளை' என்பது விளக்கம்.

'சொல்லும்' என்று மிகுத்துச் சொல்லியவதனால், தடவும் கயவும் நளியும் பெருமையைக் காட்டும்; என்னை? 'தடவுங் கயவு நளியும் பெருமை' (தொல், சொல், உரி-உ௩.) என்றாராகலின்.

அவை வருமாறு:— தடந்தோள் என்பதும், கயவாய்பெருமை என்பதும், நளிமலைநாடன் என்பதும் இம் மூன்றும் பெருமை. 'அவற்றுள், தடவென்கிளவி கோட்டமுஞ் செய்யும் (௯,

உரு.) என்று ராகலின், அது 'தடந்தாணரை', தடமருப் பெருமை' 'தடங் கோட்டியாழ்' எனக் கோட்டமுணர்த் துமாறு கண்டு கொள்க 'கயவென் கிளவி மென்மைபுஞ் செய்யும்' (௸, ௸, ௸, உச.) என்று ராகலின், அது 'கயந்தலைக்குழவி' என மென்மையுணர்த்துமாறு கண்டு கொள்க. பிறவு மன்ன. (ரு)

உரிச்சோன்னமரபு
முற்றும்.

ஒன்பதாவது.
எச்சமரபு.

சு௦. வேற்றுமை யும்மை வினைபண் புவமையுந்
தோற்றிய வன்மொழியுந் தொக்கவிடத்—தேற்ற
விருசொல்லு மொன்று மிலக்கணத்தாற் பல்சொல்
லொருசொல்லாய்ச் சேறலு முண்டு.

என்பது சூத்திரம். இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின்:—எச்சமரபு என்னும் பெயர்த்து, இவ்வோத்தினுள், இத்தலைச் சூத்திர மென்னுதலிற்றோவெனின்:—தொகைச்சொற் கெய்தியதோர் இலக்கண முணர்த்து தனுதலிற்று.

இ-ள். வேற்றுமையும், உம்மையும், வினையும், பண்பும், உவமை யும், அன்மொழியும் தொக்கவிடத்து ஒரு சொற்போல நடக்கும் பல சொல்லுடன் றொக்கவிடத்து மொரு சொற்போனடக்கும். எ-று.

அவை வருமாறு:—நிலங்கடந்தான், பொற்பூண், கருப்பு வேலி, வரைவீழருவி, யானைக் கோடு, குன்றத்தகூகை என வேற்றுமைத் தொகை அடைவே கண்டுகொள்க. உவாப்பதினான்கு என உம்மைத் தொகை; தாழ்குழல், என்பது வினைத்தொகை; வட்டத்தடுக்கு என்பது பண்புத்தொகை; வேய்த்தோள் என்பது உவமதொகை. பொற்றொடி என்பது அன்மொழித்தொகை. இவை இருமொழிகூடினதொகை. 'புலி விற்கெண்டை' என்பது மும்மொழித்தொகை. இவைபெல்லாம் ஒரு சொற்போல வேற்றுமை யேற்றலும், பயனிலை கோடலும் காலந்தோன்று மையும் கண்டு கொள்க. என்னை? "வேற்றுமைத் தொகையே யுவமத்

தொகையே, வினையின் றொகையே பண்பின் றொகையே, யும்மைத் தொகையே யன்மொழித் தொகையென், றவ்வா றென்ப தொகைமொழி நிலையே" (தொல், சொல், எச்ச, கரு.) "எல்லாத்தொகையு மொரு சொன்னடைய" (தொல், சொல், எச்ச, உச.) என்றாராகலின். (க)

சுக. *உருபுவமை யும்மை †விரியி னடைவே
யுருபுவமை யும்மைத் தொகையா—மொருகாலந்
தோன்றின் வினைத்தொகையாம் பண்புமிரு பேரொட்டுந்
தோன்றுமேற் பண்புத் தொகை.

எ-ன். முன்பு சொல்லிப் போந்த வேற்றுமைத் தொகைக்கும், உவமத்தொகைக்கும், உம்மைத்தொகைக்கும், வினைத்தொகைக்கும், பண்புத்தொகைக்கும் உரியதோர் இலக்கணமுணர்த்து தனுதலிற்று.

இ-ள். உருபுவிரியின் உருபுத்தொகையாம்; உவமைவிரியின் உவமத்தொகையாம்; உம்மைவிரியின் உம்மைத்தொகையாம்; காலந் தோன்ற வினைவிரியின் வினைத்தொகையாம்; பண்புவிரியிற் பண்புத் தொகையாம்; இருபெயரொட்டும் பண்புத்தொகை; இத்தொகைகளை யடைவே கண்டுகொள்க.

இருபெயரொட்டாவன:— சாரிகைப்பத்திரம், புட்டகப்புடைவை, வேழக்கரும்பு, கேழற்பன்றி, பெருமலைச்சிலம்பு, மீமிசை இவை முதலாக வரும் பண்புத்தொகை யென்றவாறு. என்னை? "வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல" "உவமத் தொகையே யுவம வியல" "வினையின் றொகுதி காலத் தியலும்" "வண்ணத்தின் வடிவி னளவிற் சுவையினென், றன்ன பிறவு மதன்குண நுதலி, யின்ன திதுவென

* "தனிநிலைச்சொற்கள் வேற்றுமையாக அல்வழியாக அவ்வப் பொருண் மேற் பிளவுபட்டிசையாது தம்முட்கூடுவது தொகைநிலையெனவே, வேற்றுமை யுருபு முதலிய சொற்கள் கெட்டுத் தனிநிலைச்சொற்கள் தம்முட் கூடுவது தொகையன்றோவெனின்;—நன்று சொன்னாய், "அல்வழி வேற்றுமைப் பொருளிற் பொருந்துழி" "வேற்றுமை முதலிய பொருளின்" எனவும், "உருபுவமை யும்மை விரியி னடைவே-யுருபுவமை யும்மைத் தொகையாம்." எனவும் நன்னூலாரும் நேமிநாதத்தாருங் கூறினர்." என்றார் பிரயோகவிவேகநூலார் (சமாசபடலம்—உ.)

† ஈண்டு 'விரியின்' என்பது உருபு முதலியன விரிதற்கு இடமாயிருப்பின் என்றவாறு, பிறவும் இவ்வாறே கொள்க.

வருஉமியற்கை, யென்ன கிளவியும் பண்பின் றொகையே" "இருபெயர் பலபெய ரளவின் பெயரே, யெண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி, யெண்ணின் பெயரோ டவ்வறு கிளவியுங், கண்ணிய நிலைத்தே யும்மைத் தொகையே" (தொல், சொல், எச்ச, கஎ—உக) என்றாராகலின். (உ)

கஉ. வினைத் தொகைச்சொற்க ளைந்தி னிறுதிக்க
ணன பெயர்தோன்றி னன்மொழியா—மானனையாய்
செய்யுமெனும் பேரெச்சத் தீற்றின்மிசைச் சில்லுகர
மெய்யொடும்போ மொற்றொடும்போம் வேறு.

எ-ன். அன்மொழித்தொகை விரியுமாறும், செய்யுமென்னும் பெயரெச்சமுடியுமாறும் உணர்த்துதனுதலிற்று.

இ-ள். வேற்றுமைத்தொகை, உம்மைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமத்தொகை இவையிற்றினிறுதிக்கண் வேறொரு பெயர் தோன்றவருமாயின் அவை அன்மொழித்தொகையாம். செய்யுமென்னும் பெயரெச்சத்திறுதியின் உகரங்கெடுதலும், உகரமும் மெய்யுங் கெடுதலும், இரண்டினோடுங்கூடி இறுதியினின்ற மெய்யும் கெடுதலும் உண்டு எ-று,

அவை வருமாறு:—பொற்றொடி என்பது-பொன்னாற் செய்ததொடி பொற்றொடியென்று கிடந்ததாயினும், இத்தொடியினையுடையாள் ஒருத்தியைக் கருதலாலே வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. தகரஞாழல் என்பது உம்த்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. திரிதாடி-வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. வெள்ளாடை என்பது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. வேய்த்தோள் என்பது உவமத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை, இனித் 'தோழியுங் கலுழ்மே' என்புழி, உகரங்கெட்டது. வாம்புரவி என்பது உகரமும் மெய்யும் கெட்டன. அரிவாள் என்புழி உகரமும் மெய்யும் ஒற்றும் கூடக்கெட்டன. என்னை? "அவற்றுட், செய்யு மென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு, மெய்யொடுங் கெடுமே யீற்றுமிசை யுகர, மவ்விட னறித லென்மனார் புலவர்" (தொல், சொல், வினை, ௲சக.) என்றாராகலின். (ங)

சுங. முன்மொழியும் பின்மொழியு மூண்ட விருமொழியு
மன்மொழியு மென்றிவற்றி லாம்பொருள்கண்—முன்மொழிதான்
கால மிடத்தாற் கருத்தோடுஞ் சேர்த்தறிதன்
மேலையோர் கண்ட விதி.

எ-ன். சொல்லப்பட்ட தொகைச்சொற்கள் பொருள்படுமாறு உணர்த்துதனுதலிற்று.

இ-ள். இரண்டு சொற்கள் கூடின தொகைக்கண் முன்மொழியிலே பொருணிற்பனவும், பின்மொழியிலே பொருணிற்பனவும், இருமொழியினும் பொருணிற்பனவும், இருமொழியினும் பொருளன்றி வேறொரு மொழியிலே பொருணிற்பனவும் ஆம. முன்மொழிதான, காலமுன்னும் இடமுன்னும் என இரண்டாம் எ-று.

அவை வருமாறு:—அரைமா என்புழி, முன்மொழியிலே பொருணின்றது; இஃது இடமுன். தேங்காய் என்புழிப் பின்மொழியிலே பொருணின்றது; இது காலமுன். இராப்பகல் என்புழி இருமொழியினும் பொருணின்றது. காராடை என்புழி வேறொரு மொழியிலே பொருணின்றது. பிறவுமன்ன. என்னை? "அவைதாம, முன்மொழி நிலையலு, மிருமொழி மேலு மொருங்குட னிலையலு, மம்மொழி நிலையா தன்மொழி நிலையலு, மந்நான் கென்ப பொருணிலை மரபே' (தொல், சொல், எச்ச, உரு.) என்றாராகலின். (௪)

சுச. உலவி லுயர்திணைமே லும்மைத் தொகைதான்
பலர்சொன் னடைத்தாய்ப் பயிலுஞ்—சிலைநுதலாய்
முற்றும்மை யெச்சப் படுதலுமுண் டாமிடைச்சொன்
னிற்றலுமுண் டீறு திரிந்து.

எ-ன். தொகைச் சொல்லினும், இடைச்சொல்லினும் ஒழி புணர்த்துதனுதலிற்று.

இ-ள். தொகைச்சொல் ஒரு சொல்லாய் நடக்குமென்றாராயினும், உயர்திணையிடத்து வந்த உம்மைத்தொகை வினைப்படுக்குமிடத்துப் பலரைச்சொல்லும் வாசகத்தாற் சொல்லப்படும்; முற்றும்மை எச்சப் பொருள் பெற்று நடக்கவும் பெறும்; இடைச்சொற்கள் ஈறுதிரிவனவும் உள எ-று.

வரலாறு:—கபில பரணர் வந்தார் என உம்மைத்தொகை பலர் சொன்னடைத்தானவாறு. ஒருவனை என் காணம்பத்தும் தரவேணும் என்றவிடத்துப் பத்துந் தரமுடியாது என்றால் முற்றும்மையாம். அவற்றுட்சில கொள் என்னும் பொருடோன்றுகையால் எச்சவும்மை. பன்னை, தில்லை, கொன்னையென ஈறுதிரிந்து வந்தன.

'உலைவில்' என்று மிகுத்துச் சொல்லியவதனால், உரிச்சொல்லும் ஈறு திரிவனவும் உள. அவை—கடி என்பது கடும்புனல், கடுத்தபின் எனத்திரிந்தது; பிறவுமன்ன. (ரு)

கூரு. இன்னரென முன்னத்தாற் சொல்லுத லென்றசென்ற
வென்னு மவையன்றி யிட்டுரைத்த—நன்வினையாற்
செய்யப் படும்பொருளைச் செய்ததெனச் சொல்லுதலு
மெய்தப் படும்வழக்கிற் கீங்கு.

எ-ன். வழக்கிடத்துக்காவன சில ஒழிபு கண்டு ஈங்குணர்த்து தனுதலிற்று.

இ-ள். இத்தன்மையரென்று சொற்குறிப்பால் அறியவருவனவும், என்றுதவற்றை என்றன என்றும், செல்லாதனவற்றைச் சென்றன எனறும சொல்லுதலும், சிலராற் செய்யப்பட்டபொருளைத தான் செய்தது போலச்சொல்லுதலும் வழக்கிற்கு உரிய எ-று.

அவை வருமாறு:—வெள்ளோக்கத்தார் என்றால் வெள்ளை யோக்கத் தாரென்றவாறு அன்று; இளையுடைய ரென்றவாறு. செஞ்செவியர் என் றாற் சிவந்த செவியரெனறவாறு அன்று; பொன்பூண்ட செவிய ரென்ற வாறு. செங்கை என்றால் உபகரித்தகை எனறும், கருங்கை என்றாற் கொன்றுவாழுங்கை என்றும் சொல்லுதல் இவைசொற்குறிப்பாலறிய வருவன. கூழ் புள்ளென்றது, வெயிற்சுள் ளென்றது, நீர் தண்ணென் றது என்பன, என்றுநவற்றை எனறனபோற் சொல்லுதல். வழிந்து கிடக்கும், மலைவந்துகிடக்கும் என்பன, செல்லாதனவற்றைச் சென்றன போற் சொல்லுதல். திண்ணைமெழுகிற்று, சோறட்டது, கறிபொறித்தது என்பன, செய்யப்படும்பொருளைச் செய்தது போற் சொல்லுதல்.

இவை வழக்கிற்கு ஆமென்றீர்; 'கருங்கைக் கானவன் களிற்றுநிறத் தழுத்தலின்' என்றும், 'நள்ளென்றன்றேயாமம்' என்றும் இவை முத

லாயின வெல்லாம் செய்யுளுள்ளும் வந்தனவாலோ வெனின்;—அவை வழக்குச் சொல்லாய்ச் செய்யுளுள் வந்தனவெனக் கொள்க.

'எய்தப்படும்' என்று மிகுத்துச் சொல்லியவதனால், ஒருபாற்கு உரித்தாகச் சொல்லப்பட்டனவேயாயினும், அவை மற்றைப் பால்களுக்கும் உரியவாய் வருவனவும் உள என்றவாறு; என்னை? "ஒருபாற் கிளவி யேனைப்பாற் கண்ணும், வருவன தாமே வழக்கென மொழிப" என்றாராகலின். அவை வருமாறு;—நஞ்சுண்டான் சாம் என்றால், நஞ்சுண்டாள் சாம், நஞ்சுண்டார் சாவர், நஞ்சுண்டதுசாம், நஞ்சுண்டனசாம் என்று கண்டு கொள்க. 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி, யெல்லா வுயிருந் தொழும்' இதனுள் மறுத்தானை என்றதாயினும் ஐம்பான் மேலும் ஒட்டிக் கொள்க. பிறவு மன்ன. (சூ)

12484

சூசூ. மெலித்தல் குறுக்கல் விரித்த றொகுத்தல்
வலித்தலே நீட்டல் வரினு—மொலிக்கும்
வரிவளாய் தொல்குறைச்சொல் வந்திடினு முண்மை
தெரிதலாங் கற்றோர் செயல்.

எ-ன். அறுவகைப்பட்ட செய்யுள் விகாரமும், மூன்றுவகைப் பட்ட விகாரங்களுமாமாறு உணர்த்து தனுதலிற்று.

இ-ள். மெலிக்கும்வழி மெலித்தலும், குறுக்கும்வழிக் குறுக்கலும், விரிக்கும்வழி விரித்தலும், தொகுக்கும்வழித் தொகுத்தலும், வலிக்கும் வழிவலித்தலும், நீட்டும் வழி நீட்டலும் என்னும் அறுவகைப்பட்ட விகாரமும், தலைக்குறைத்தல், இடைக்குறைத்தல், கடைக் குறைத்தல் என்னும் மூன்றுவகைப்பட்ட விகாரமும் செய்யுளகத்து வந்தால், அவை வந்தவகை யறிந்து முடிக்க எ-று.

அவை வருமாறு:—'குன்றிய லுகரத் திறுதி யாகும்' என்பது மெலித்தல். 'திருத்தார்நன் றென்றேன் றியேன்' என்பது குறுக்கல். 'தண்ணந் துறைவன்' என்பது விரித்தல். 'நீலுண் டுகிலிகை' என்பது தொகுத்தல். 'குறுத்தாட் பூதம்' என்பது வலித்தல். 'பாசிழை' என்பது நீட்டல். 'மரையிதழ்' என்பது தலைக்குறைத்தல். 'ஓதி முதுபோத்து' என்பது இடைக்குறைத்தல். 'அகலிரு விசும்பி னூஅல்' என்பது கடைக்குறைத்தல்.

'தொல் குறைச்சொல்' என்றவதனாற், பழையதாக விகாரம் பெற்று வருஞ் சொற்களல்லது தான் ஒருசொல்லை விகாரப்படுத்தாதொழிக; விகாரப்படுத்தின் வேறொருபொருளாமென்றவாறு. அவை காவிரி என்றால், இதனைத்தலைக்குறைக்கில் விரியாம்; இடைக்குறைத்தாற் காரியாம்; கடைக்குறைத்தாற் காவியாம்; ஆன்ற பொருடெரியா விகாரம் பண்ணற்க என்றவாறு. (எ)

சுஎ. அடிமொழி சுண்ண நிரனிறை விற்பூட்
டடிமறி யாற்று வரவுந்—துடியிடையாய்
தாப்பிசை தாவின் மொழிமாற் றளைமறி
பாப்புப் பொருளோடொன் பான்.

எ-ன். ஒன்பது வகைப்பட்ட பொருள்கோள் ஆமாறுணர்த்துதனுதலிற்று.

இ-ள். அடிமொழிமாற்றும், சுண்ணமொழிமாற்றும், நிரனிறைப் பொருள்கோளும், விற்பூட்டுப் பொருள்கோளும், அடிமறிமாற்றுப் பொருள்கோளும், புனல்யாற்றுவரவுப் பொருள்கோளும், தாப்பிசைப் பொருள்கோளும், மொழிமாற்றுப் பொருள்கோளும், அளைமறிபாப்புப் பொருள்கோளும் என ஒன்பது பொருள்கோள் ஆம். எ-று.

அவையுஞ் சொல்லின் முடிபாலே பொருண்முடிந்து கிடந்தமையின் இலக்கணஞ்சொல்ல வேண்டிற்றில்லை; என்னை? "சொல்லின் முடிவினப்பொருண் முடித்தல்" என்பது தந்திரவுத்தியாகலான்.

அவை வருமாறு:— "குன்றத்து மேல குவளை குளத்துள—செங்கொடுவேரி மலர்" என்பதனைக் குன்றத்து மேல செங்கொடு வேரிமலர் என்றும், குளத்துள குவளை என்றும் அடிதோறும் மொழிமாற்றிக் கொண்டமையான், அடிமொழிமாற்று. "சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய, யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப, கானக நாடன் சுனை" என்பதனைச் சுரைமிதப்ப, அம்மியாழ, யானைக்கு நிலை, முயற்கு நீத்து எனப் பொருள்கொண்டமையாற் சுண்ணமொழிமாற்று. நிரனிறை என்பது பலவகையாம்; அவற்றுட் சில வருமாறு:— "கொடி குவளை கொட்டை நுசுப்புண் கண்மேனி, மதிபவள முத்தமுகஞ் செவ்வாய்-முறுவல், பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குஞ் சாயல், வடிவினளே வஞ்சி மகள்" என்பது பெயர் நிரனிறை. "காதுசேர் தாழ்

குழையாய்க் கன்னித் துறைச்சேர்ப்ப, போதுசேர் தார் மார்ப போர்ச் செழிய-நீதியான், மண்ணமிர்த மங்கையர்தோண் மாற்றுரை யேற்றார்க்கு, நண்ணிய வாய பொருள்" இது வினைப்பெயர் நிரனிறை. "ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும், பாடகமு மூரகமும் பஞ்சரமா—நீடியமா, னின்றா னிருந்தான் கிடந்தா னிதுவன்றே, யன்றார் கலிக் கச்சி மாண்பு" இது பெயர்வினை யெதிர் நிரனிறை. "குன்ற வெண்மணலேறி நின்றுநின், றின்னங் காண்கம் வம்மோ தோழி, களிறுங் கந்தும் போல நளிகடற், கூம்புங் கலனுந் தோன்றுந், தொன்னல மறந்தோர் துறைகெழு நாடே" இது பெயரொடு பெயரெதிர் நிரனிறை. "கூற்றுவனை மன்மதனை யரக்கர் கோவைக் கூனிலவைக் குஞ்சரத்தை யிஞ்சி மூன்றை, யேற்றுலகின் புறவுருவ மாளத் தோள்க ளிறவெறிப்ப விமையப்பெண் வெருவ வேவக், காற்றொழிலா னயனத்தாற் விரலாற் கற்றைக் கதிர்முடியாற் காதலத்தாற் கணையாற் பின்னு, மூற்றழிய வுதைத் தெரித்து நெரித்துச் சூடி யுரித்தெரித்தா னவனெம்மை யுடைய கோவே" இது முறை நிரனிறை. "காமவிதி கண்முக மென்மருங்குல் செய்யவாய், தோமி றுகடினி சொல்லமிர்தந்—தேமலர்க், காந்தள் குரும்பை கனக மடவாள்கை, யேந்திளங் கொங்கை யெழில்" இஃது எழுத்து நிரனிறை. "ஆசை யல்குற் பெரியாரை யருளு மிடையுஞ் சிறியாரைக், கூசு நுதலும் புருவமுமே குடில மாகி யிருப்பாரை, வாசக் குழலு மலர்க்கண்ணு மனமுங் கரிய மடவாரைப், பூசல் பெருக்க வல்லாரைப்பொருந்தல் வாழி மடநெஞ்சே" இது மிகையெண்ணிரனிரை. "சாந்துந் தண்டழை யுஞ்சுர மங்கையர்க், கேந்தி நின்றன விம்மலை யாரமே" இஃது அளவெண்ணிரனிறை. "யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித், தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண் டான். தேனும் பாலும் போல்வன சொல்லித் திரிவானேற், கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே" இது குறையெண்ணிரனிறை. பிறவு மன்ன. "திறந்திடுமின் றீயவை பிற்காண்டு மாத, ரிறந்து படிற்பெரிதா மேத—முறந்தையர்கோன், றண்ணார மார்பிற் றமிழ்நர் பெருமானைக், கண்ணாரக் காணக் கதவு" இது பூட்டுவிற் பொருள்கோள். "மாறுக் காதலர் மலைமறந் தனரே, யாறுக் கட்பனி வரலா னாவே" வேறு மென்றோள் வளைநெகி ழும்மே, கூறாய் தோழி யான்வாழு மாறே" இஃது அடிமறிமாற்றுப் பொருள்கோள். "அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம், விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றஞ்,

சொலற் பால வல்லாத சொல்லுதலுங் குற்றங், சொலிப்பாலுங் கூற் றமே யாம்" இது புனல்யாற்றுப் பொருள்கோள். "உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண, வண்ணாத்தல் செய்யா தளறு" இது தாப்பிசைப் பொருள்கோள். "தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல், வெண்கோழி முட்டை யுடைத்தனன மாமேனி, யஞ்சனத் தன்ன பசலை தணிவாமே, வங்கத்துச் சென்றார் வரின்" இது மொழிமாற்றுப் பொருள் கோள் "மனைக்கு விளக்கு மடவாண் மடவா, டனக்குத் தகைசால் புதல்வர்-மனக்கினிய, காதற் புதல்வர்க்குக் கல்வியே கல்விக்கே, யோதிற் புகழ்சா லுணர்வு" இது விளக்கென்னுமதனை எங்கும் ஒட்டுதலால், அளைமறிபாப்புப் பொருள்கோள். இவையிற்றை விரித்துக் கண்டு கொள்க. (அ)

கூஅ. சொல்லாற் றெரிதல் குறிப்பினாற் றோன்றுதலென்
றெல்லாப் பொருளு மிரண்டாகு—மெல்லியலாய்
தொன்மொழியு மந்திரமுஞ் சொற்பொரு டோன்றுதலி
னின்மையு முண்மையுமா மீங்கு.

எ-ன். இதுவும் ஒரு பொருடெரியு முறைமை யுணர்த்துத னுதலிற்று.

இ-ள். ஒரு சொல்லைச் சொன்ன மாத்திரத்திலே பொருடோன்றி யும் குறிப்பினானன்றிப் பொருடெரியாதனவுமாம்; முது சொல்லும், மந்திரமும், பொருளுள்ளனவும், இல்லனவுமாயிருக்கும். எ-று.

அவை வருமாறு;—இரும்பு, கரும்பு, கடல், திடல் என்பன சொன்னமாத்திரத்திலே பொருடெரிந்தன. இனிக்கற்கறித்து நங்கட் டாய் எனவும், உண்டற்குக் குறைபாடுடையான், அழகிதாக உண்டேன் எனவும் முதலாயின குறிப்பினாற் பொருடெரிந்தன. ஆற்றிற் கெட்ட கழுதைப் பாக்கம் ஊரிலிருந்த குயவனுக் குப்பாம் என்றால், இதனிற் பொருளில்லை என்னை பொருளில்லாதவாறெனின்;—பொருட்டொடர் மொழியாயின துணையல்லது, பொருள் திரண்ட தின்மையிற், பொரு ளில் சொல்லாயிற்று. இனிக் கெட்டார்க்கு நட்டாரில்லை என்றும், செல் வர்க்குப் புல்லாரில்லை என்றும் இவை பொருள் பெறவந்தன. 'திரிக திரிக திரிக சுவாகா' என்பதனிற் பொருளில்லை. 'கன்று கொண்டு கற வையும் வத்திக்க சுவாகா' என்றது பொருளுண்டு. பிறவு மன்ன. (கூ)

௬௯. முந்துரைத்த காலங்கண் மூன்று மயங்கிடினும்
வந்தொருமை பன்மை மயங்கினும்—பைந்தொடியாய்
சான்றோர் வழக்கினையுஞ் செய்யுளையுஞ் சார்ந்தியலி
னூன்ற மரபா மது.

எ-ன். காலங்களும், ஒருமை பன்மையும் வழுவமைத்துக் கொள்வனவும் உளவென்பது உணர்த்துதனுதலிற்று.

இ-ள். காலமூன்றும் தம்முண் மயங்கிவரினும், ஒருமை பன்மை மயங்கிவரினும், சான்றோர்வழக்கும் சான்றோர்செய்யுளும் தழுவுஞ் சொல்லாயிற் பெறும்; அல்லாதன வழுவென்றறிக எ-று.

அவற்றுட்சில வருமாறு;—சோறு வேவாநிற்ப அஃதுண்டு போதற் பொருட்டாக இருந்தோனொருவனைப் புறத்து நின்றானொருவன் இருவரும்போகவேண்டுங் குறையுடைமையின், 'இன்னுமுண்டிலையோ' என்றால் 'உண்டேன் உண்டேன்' என்னும்; உண்ணாநின்றானும் உண்டேன் உண்டேன் என்னும்; இவை விரைவின் எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலமாயின.

இக்காடுபோகிற் கூறை கோட்படும் என்பதனை இக்காடுபோகிற் கூறை கோட்பட்டான் எனறால் வாராக்காலத்தை இறந்தகாலத்திற் சொன்னவாறு. யாம்பண்டுவில்லெய்தது இக்கல்லூரி என்பதனையாம் பண்டு வில்லெய்யும் இக்கல்லூரி என்பதும் அமையும். 'ஒக்கற்றலைவ ஒருவீர்' எனவும், யாம் எங்களூர் புகுவேன், நீ யுங்களூர் புகுவீர் எனவும், 'என்னீ ரறியாதீர் போல விவைகூறி, னின்னீர வல்ல நெடுந்தகாய்' எனவும், தச்சனைக்கூவி 'எந்திரவூர்தி யியற்றுமி னென்றான்' எனவும் இவை உயர்திணை ஒருமைப்பன்மை மயங்கினவாறு. 'கடிய மன்ற நின் றழங்குரன் முரசம்' எனவும், 'மண்கணை முழவின் கண்போ லாவே' எனவும் இவை அஃறிணை ஒருமைப் பன்மை மயங்கினவாறு கண்டு கொள்க. (௬௦)

௭௦. புல்லா வெழுத்தின் கிளவிப் பொருள்படினு
மில்லா விலக்கணத்த தென்றொழிக—நல்லாய்
மொழிந்த மொழிப்பகுதிக் கண்ணே மொழியா
தொழிந்தனவுஞ் சார்த்தி யுரை.

எ-ன். எழுத்திற்கிளவி பொருள்படினும் இலக்கண முடிபல்ல என்பதனையும், புறனடைத்தலையும் உணர்த்துதனுதலிற்று.

இ-ள். எழுத்தினாற் சொல்லலாகாத முற்கும், வீளையும் முதலாயின பெயர்க்குறிகள் பொருள்பட நின்றவாயினும், இலக்கணமுடைய வல்லவென ஒழிக்க: முன்பு சொல்லிப் போந்த பலவகைப்பட்ட சொல்லாராய்ச் சிக்கண்ணே அடக்கி ஒழிந்த சொல்லினையும் உணர்க. எ-று.

அவை—கைகாட்டல், தலையாட்டுதல் முதலாயின ஆராயாதே முற்கும் வீளையும் ஆராய வேண்டிய தென்னை? இவை எழுத்துப் பிறக்குந் தானமாதலாற் கிளவி எனவும் ஆராய வேண்டிற்று; அவை எழுத்தன்மையிற் சொல்லமுடிந்தன வில்லை யென்றவாறு.

இங்கு ஆராயப்படாத சொற்கள் வழக்கினுள் வந்தனவுளவேல் அவற்றையும் இந்நூலுள் அடங்கும்வாயறிந்து அடக்கிச்சொல்லுக என்றவாறு. என்னை? "கிளந்த வல்ல வேறுபிற தோன்றினும், கிளந்த வற் றியலா னுணர்ந்தனர் கொளலே" (தொல், சொல், வே-ம. ௩௫) என்றாராகலின்.

சொல்லதிகாரம் முற்றும்.

ஆக அதிகாரம் இரண்டுக்கும் வெண்பா—௯௭.

நேமிநாதமூலமும் உரையும்

முற்றின.

உ

கடவுள்துணை.

நேமிநாதம்.

பாட்டு முதற்குறிப்பகராதி.

பாட்டு.	பக்கம்.
அகரத்திற்காவும்	13
அடிமொழி	102
அதுவென்பது	57
அம்மாமெம்	75
அன்னானுமல்லாளும்	36
அன்னிறுதி	63
ஆங்குரைத்த	76
ஆதியினில்	69
ஆதியுயிர்	12
ஆய்ந்தவுயர்	73
ஆவியகரம்	4
ஆறன்மேல்	80
ஆன்றவுயிர்	4
இகரமீகாரம்	62
இசைநிறை	86
இயற்பேர்	70
இருசொல்லிறுதி	60
இறப்பு	74
இனமின்றி	51
இன்னரென	100
ஈராகும்	64
ஈறுதிரிதல்	62
ஈற்றயனீடும்	65
உண்ணமுடியாத	3
உந்தியில்	9
உயர்வுமிழிவும்	45
உயிரின்கண்	11
உரிவரினாழி	25
உருபுவமை	97
உலைவிலுயர்	99
உற்றவாகாரம்	30
எண்ணுமிருதிணை	43
ஏற்றதிணை	34
ஏனைத்தொகை	98
ஐந்தாறும்	31
ஐயந்திணை	41
ஐயென்னுருபு	55
ஒண்பேர்	92
ஒப்பிகந்த	50
ஒருவனொருத்தி	35
ஒன்பானொடு	28
ஒன்றன்பேர்	61
ஓங்குயிர்கள்	5
ஓதுங்குகா	56
ஓதுமெதிர்	41
கம்பலை	93
கரிதரிது	84
காட்டுமுயிரும்	10
காண்டகுபேர்	53
காண்டகுமன்	89
குழூவடிமை	43
குறினெடில்	8
குற்றுகரம்	17
குற்றொற்	19
சாரியையாய்	87
சாற்றும்பெயர்	83
சிறப்பும்வினாவும்	91
சுட்டே	68
செய்துசெய	79
சென்றுமுதல்	84
சொல்லால்	104
சொன்னஅ	77
தந்தைதாய்	71
தாதார்மலர்	33

பாட்டு.	பக்கம்.
தெரிநிலையாக்கம்	88
தொடர்நெடில்	6
நின்றமுதல்	27
நெடியன்	84
நேர்ந்தமொழி	14
பகருமுறை	69
பாங்கார்பெயர்	72
பாலேதிணையே	37
புரையுயர்	95
புல்லாவெழுத்தின்	105
பூவின்மேல்	1
பெண்ணாண்	47
பெயரெழுவாய்	54
பெயர்ச்சொல்	67
போரம்பெயர்	72
பொதுப்பிரிபால்	49
மகரந்தான்	23

பாட்டு.	பக்கம்.
மக்கணரகர்	35
மின்னுமிர்	77
முந்துரைத்த	105
முன்மொழியும்	99
மூன்றுநான்கு	17
மெய்யீறு	15
மெலித்தல்	101
மேயவிருசொல்	29
வன்மைவரினே	22
வாய்ந்தவுயிர்	20
விரவுப்பேர்	66
விரைவுவிளக்கம்	94
வினைபெயரும்	90
வெம்மை	94
வேற்றுமையும்மை	96
வேற்றுமையொன்றன்	58

TAMIL SANGAM

நேமிநாதவுரை மேற்கோள் விளக்கம்.

பக்கம்.	மேற்கோள்.	உள்ளவிடம்.
26	'குன்றியலுகரம்'	தொல்-சொல்-கிளவி-அ.
,,	'தண்ணந்துறைவன்'	திருக்குறள். கஉஎஎ.
,,	'பாசிழை'	சிந். காந்தருவ—கூச.
	'திருத்தார் நன்றென்றேன் றியேன்' [பன்மாடக் கூடன் மதுரை நெடுந்தெருவி லென்னோடு நின்றா ரிருவ ரவருள்ளும் பொன்னோடை நன்றென்றா ளல்லளே பொன்னோடைக் கியானைநன் றென்றாளு மந்நிலையள் யானை யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன் றிருத்தார்நன் றென்றேன் றியேன்]	
,,	'வேதினவெரிநினோதி மூது போத்து'	குறுந்தொகை. கச0.
,,	'ஆல்'	மலைபடுகடாம் அடி க00. (இதனை இடைக்குறையென்பர் காரிகை யுரைகாரர்.)
30	'நிலவுக்குவித்த	குறுந்தொகை கஉரு
40	'உப்பக்கநோக்கி	திருவள்ளுவமாலை.
44	'கொடிறும் பேதையுங் கொண் டதுவிடா'	திருவாசகம். போற்றித்திருவக வல்.
52	'வெண்கோட்டியானை'	நற்றிணை. க0
,,	'நெடுவெண்டிங்கள்'	அகம். உ0
53	'புனறருபசுங்காய்	குறுந்தொகை. உகூஉ
66	'விளங்குமணிக்கொடும்பூணாய்'	புறம். கரு0
68	'நாமவருந்துறைப் பேர்தல்'	அகம். கஅ
80	'உரற்கால்யானையொடுக்குத்துண் டெஞ்சியயா'	குறுந்தொகை. உருஉ
83	'மூவாமுதலா......மன்றே'	சிந்தா, கடவுள் வாழ்த்து
,,	'புரைதீரா மன்னா விளமை'	நாலடி. கக.
,,	'கண்டுகேட்.........யுள'	திருக்குறள். கக0க
85	'அட்டிலோலை தொட்டனை நின்மே'	நற்றிணை. ரு00
87	'சிறுபுன்மாலை'	அகம். ககச

89	'கைக்குமாங்தேவரே தின்னினும் வேம்பு'	நாலடி. ககஉ
,,	'அமிழ்தினுமாற்றவினிது'	திருக்குறள். சுசு
,,	'தூற்றுதே தூரவிடல்'	நாலடி. பொறையுடைமை-ரு
,,	அடியான் மருட்டியதாழ் குழலே'	காரிகை. பாயிரம்
,,	'ஏமாங்கதமென்...துண்டே'	சிங். நாமகள். உ
90	'ஈனவிளிவினுல்வாழ்வேன்மன்	நாலடி. சo
,,	'கொன்னூர்துஞ்சினும் யான் றுஞ்சலனே'	குறுந்தொகை. கரு அ
,,	'கொன்முனேயிரவூர்போல'	குறுந்தொகை. கூக
,,	'கொன்னே வழங்கான்'	நாலடி
,,	'வார்ந்திலங்குவையெயிற்று'	குறுந்தொகை. கச
91	'முரசுகெழுதாயத்தரசே தஞ் சம்'	புறம். எரு
92	'ஒஓவினிதே யெமக்கிந்நோய் செய்தகண், டாஅமிதற்பட்டது'	திருக்குறள். ககஎகூ. (பாடபேதங் காண்க.)
,,	'தண்டுறையூரயாம் கண்டிகும்'	அகம். உஅகூ
,,	'கண்டதுமொழிமோ'	குறுந்தொகை. உ.
,,	'காப்பும்பூண் டிசின்'	அகம். எ
63	'தள்ளாதசும்மை மிகும்'	சிங். பதிகம்—கரு
,,	'நாமவேற்றடக்கை வேந்தே'	சிங். நாம-கஅக
,,	'அழுங்கன் மூதூர்'	அகம். ககரு
,,	'வம்பவடுகர்'	அகம். ருஎரு
,,	'வம்பநாரை'	குறுந்தொகை. உருகூ
,,	'தீத்தும்மும்வேலான்'	சிங். பூமகள். உஉ
,,	'வாளார்மதிமுகம்'	சிங். விமலை. அச
கூச	'கண்ணுடியன்ன கடிமார்பன்'	சிங். பூமகள். க
,,	'கடிமலர்ப்பிண்டி'	சிங். முத்தி. கசக.
,,	'போற்றினரியவை போற்றல் கடுத்தபின்'	திருக்குறள். சுகூரு
,,	கடுஞ்சூள் தருகுவன்'	அகம். ககo
,,	'அடிநிலம்பரந்து'	சிங். கேமசரி. எஉ
,,	'அரிமயிர்'	புறம். கக
,,	'கொம்மைவருமுலை'	அகம். கூரு
95	'கனியிருமுங்நீர்'	புறம். ருரு.

,,	'ஏகலடுக்கத்து'	அகம். ௫௨
,,	'நுணங்கிய கேள்வியர்'	திருக்குறள். ௪௧௯
,,	'புரையமன் றபுரையோர் கேண்மை'	நற்றிணை. ௧
,,	'புனிற்ருப்பாய்ந்த'	மணிமே. கா. ௫
,,	'கதழ்பரி நெடுந்தேர்'	நற்றிணை. ௨0௩
,,	'கமஞ்சூன்மாமழை'	திருமுரு. அடி. ௭
,,	'ஆரியர் துவன்றிய பேரிசை மூதூர்'	நற்றிணை. ௧௭0
,,	'மல்லன்மாஞாலம்'	திருக்குறள்-௨௪௫
,,	'எல்வளை'	நற்றிணை. ௧00
,,	'ஈளிமலைநாடன்'	புறம். ௧௫0
96	'தடமருப்பெருமை'	அகம். ௯௧
,,	'நிலங்கடந்தான்'	திருக்குறள். ௬௧0
100	'கடுத்தபின்'	திருக்குறள். ௬௯௩
101	'கொல்லான்புலாலை மறுத் தானை'	திருக்குறள். ௨௬0
104	'உண்ணுமையுள்ள துயிர்நிலை'	திருக்குறள். ௨௫௫
,,	'மனைக்குவிளக்கமடவாள்'	நான்மணி. ௩௮
105	'ஒக்கற்றலைவ......ஒருவீரர்'	மலைபடுகடாம். அடி. ௫0
,,	'என்னீரறி......நெடுந்தகாய்'	கவி. பாலை-௬.
,,	'ஏந்திரவூர்தியியற்றுமினென் ருன்'	சிந். நாமகள். ௨0௫

12484

பக்கம்	வரி.	பிழை	திருத்தம்
க	௰௩	பாயிரமவது	பாயிரமாவது
௰௩	௰௫	முனறைற்று	முன்றைற்று
உ௰	உஉ	அன்ஆர்	அன்அர்
௪௬	௩க	அசிரியர்	ஆசிரியர்
௫௫	உ	ஆவின	ஆவின்
,,	௰அ	யாறைடு	லாறைடு
,,	௩௰	தாறகொண்ட	தாற்கொண்ட
௫௬	௰க	ஏற்றநிற்கும்	ஏற்றுநிற்கும்
௫௯	௰௫	தெஙகினது	தொக்கினது
௬௬	௩	விரவுப்	விரவுப்பே
௬௯	௫	செங்சேரன்	செஞ்சேரன்
எஅ	௰௪	உண்டுநின்ருய்	உண்ணுநின்ருய்
,,	௰௫	பொருள்	பொரு
,,	௰௬	பொருள்	பொரு
அஉ	உ	உண்டாயான்	உண்டயான்
,,	,,	உண்டாயம்	உண்டயாம்
,,	௬	,,	அவருண்டஉனண்
௯உ	உ	மிடர்ப்பட்டன	மிதற்பட்டது
௯௫	௯	உன்றும்	என்றும்
௯	௰எ	நிலையது,	நிலையதும், பின்மொழி நிலையது,
,	உ௰	உலவி	உலைவி
ர	உ௫	வழிநது	வழிவந்து
௩	உஉ	சுரமஙகையர்	சுரர்மங்கையர்